# கந்தபுராணச் சொற்பொழிவுகள்



சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

உ
சிவமயம்

# கந்தபுராணச் சொற்பொழிவுகள்

*மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் அம்மையார் ஆற்றிய உரைகளின் தொகுப்பு*

*பண்டிதை, சைவப்புலவர், செஞ்சொற் செம்மணி*
*(மதுரை ஆதீனம்), சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானாகரம்*
*(காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம்),*
*திருவாசகக் கொண்டல், துர்க்காதுரந்தரி, சிவஞான வித்தகர்,*
*திருநிறைச்செல்வி*

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,** J.P

*பதிப்பாசிரியர்*

**கலாநிதி ஆறு.திருமுருகன்**

***07.01.2025***

# கந்தபுராணச் சொற்பொழிவுகள்

# KANTHA PURAANA DISCOURSES


| | | |
|---|---|---|
| **முதலாம் பதிப்பு** | : | ஜனவரி 1975 |
| **இரண்டாம் பதிப்பு** | : | ஜனவரி 2000<br>பவள ஆண்டு விழா |
| **மூன்றாம் பதிப்பு** | : | ஜனவரி 2025<br>நூற்றாண்டு விழா நிறைவாக |
| **பக்கம்** | : | xxii +118 |
| **வெளியீடு** | : | நிர்வாக சபை<br>ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,<br>தெல்லிப்பழை |
| **அச்சுப்பதிப்பு** | : | Mickey Printing Specialist,<br>A9 Road, Chavakachcheri. |
| ISBN | : | 978-624-94766-1-5 |

சிவமயம்

# பதிப்புரை

சைவ உலகம் நன்கு அறிந்த ஆத்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் சொற்பொழிவுகள் தனித்துவமானவை. புராண இதிகாசங்களையும், சைவ சித்தாந்தத்தையும் ஐயம்திரிபறக் கற்றவர் அம்மையார் அவர்கள். மிக இளம்வயதில் பண்டிதர் பரீட்சையிலும் சைவப்புலவர் பரீட்சையிலும் சித்திபெற்று சிறந்த ஆசிரியராகப் பணியாற்றினார். அம்மையாரின் நாவன்மையை அறிந்து சைவ ஆலயங்கள் சமயநிறுவனங்கள் அழைத்து சொற்பொழிவாற்ற வாய்ப்பு வழங்கினர். கணீர் என்ற குரலில்மிக உணர்வு பூர்வமாக உரையாற்றும் திறன் அம்மையாருக்கு இயற்கையாக இறையருளால் கிட்டியது.

அறுபதுகளில் மிகப்பிரபல்யம் பெற்ற பேச்சாளாராக இலங்கை முழுவதும் வலம் வந்தார். திருமுறைகளை பண்ணோடு பாடுவதும் பக்தி ததும்ப சொல் மழையால் சபையைக் கட்டிப்போடும் ஆற்றலும் ஆற்றல் அம்மையாரின் தனித்துவம் எனலாம். ஆலயங்களில் வான வேடிக்கைகளும் சின்னமேளம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்ற காலம் மாறி அம்மையாரின் உரை அரங்கு முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. இந்தியாவிலுள்ள சைவசித்தாந்த சமாயம் அம்மையாரை அழைத்து பல இடங்களிலும் சமயச் சொற்பொழிவு ஆற்ற வாய்ப்பு ஏற்படுத்தின. தமிழ்நாட்டில் ஈழத்துத் தங்கம்மாவின் குரல் ஒலிக்கத் தொடங்கியது. எழுபதுகளில் மலேசியா, சிங்கப்பூர் சைவ ஆலயங்கள் அம்மையாரை அழைத்துச் சிறப்பித்தன.எண்பதுகளில் லண்டனில் வாழும் ஈழத்தமிழர்கள் அம்மையாரை அழைத்து அவரது உரைகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

ஈழநாட்டில் வரலாற்றுப் பெருமை மிக்க மாவிட்டபரம் கந்தசாமி கோவில் ஆதீன கர்த்தாக்கள் ஆலய விழாக்களில் அம்மையாரை அழைத்து கந்தபுராணத்தின் சிறப்பைப் பேச வைத்தனர். அம்மையார் அவர்கள் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் தொடராகப் பேசிய உரையிலிருந்து சில பகுதிகளை எடுத்து “கந்தபுராணச்

சொற்பொழிவுகள்" என்ற நூலினை வெளியிட்டார்கள். இந்நூல் பலரது பாராட்டைப் பெற்றது. இந்நூலை துர்க்காதேவி தேவஸ்தானம் இரண்டு முறை பதிப்பித்து வெளியிட்டது. அம்மையாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மூன்றாவது தடவை பதிப்பித்து வெளியிடும் பாக்கியம் அன்னையின் திருவருளால் எமக்கு கிட்டியுள்ளது. அம்மையாரின் நூற்றாண்டு விழாவில் ஓர் சிறப்பம்சமாக இந்நூல் மீண்டும் எழுச்சி பெறுகிறது. இந்நூல் அச்சேற்றுவதில் உதவிய Mickey Printing Specialist இற்கும், நூல் மீள்பதிப்பின் போது செவ்வனே திருத்தம் செய்த பண்டிதர் கலாநிதி. செ. திருநாவுக்கரசு (விரிவுரையாளர்) அவர்கட்கும், நூல் மீள் பதிப்பிற்கு உதவிய திரு. இ.தனஞ்சயன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்) அவர்கட்கும் எமது தேவஸ்தானத்தின் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.
07.01.2025

உ

சிவமயம்

மாவையாதீனம்

**மகராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்**

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

*உபநிஷதங்களுள் "தர்மம் சர" எனும் மகாவாக்கியம் பிரபல்யமானதாகும். தர்மங்களுள் ஒன்று பாமர மக்களுக்குக் கேள்வியறிவை ஊட்டுவது, அதுவும் புராண வரலாறுகளை மக்களுக்கு எடுத்தோதுவதால் அவ்வோதுவா மூர்த்தி அந்தணர்கள் பதவியில் அமைவர். கந்தபுராணத்தைத் தொடர்ச்சியாக எமது ஆதீனத்தில் விரதாதிகளுக்கு எடுத்தோதியது மட்டுமல்லாமல், அவ்வுரைகளை நூல்வடிவில் ஆக்கிய பெருந்தகை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெரியதோர் "தர்மத்தைச்" செய்துவிட்டார். அவர்களது பணி தொடர்ந்து நடைபெற வேண்டுமெனக் கருதி எல்லாம்வல்ல மாவையெம்பெருமானின் திருவருளை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.*

*கலியுகம் 5077*
*கார்த்திகை 1 ஆம் நாள்*
*சோமவாரம்*

இங்ஙனம்
**சு.து.ஷண்முகநாதக் குருக்கள்**

பேராசிரியர்

**பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள்,** M. A, Ph.D.,

அவர்கள் வழங்கிய

# கருத்துரை

"திகழ் சரவணத்தோன்" "பிரணவமுரைத்தோன்" "வேல் கைக்கொண்டோன்" முதலிய தலையங்கங்களை தாங்கி ஒன்பது கட்டுரைகளின் தொகுதியாக கந்தபுராணச் சொற்பொழிவுகள் என்னும் பெயருடன் வெளிவரும் இப்புத்தகம் சைவ உலகுக்கு ஒரு வரப்பிரசாதம், இப்புத்தக வடிவந் தாங்கி வரும் கட்டுரைகள் முன்னர் திருக்கோயில்களின் விதிமுறைகளாக நிகழ்த்தப் பெற்றவை. உற்சவ காலங்களில் குழுமும் அடியவர்களின் நிலைக்கு ஏற்ப துணை கொண்டு பல தத்துவங்களையும் சமய உண்மைகளையும் இவ்வுரைகள் எடுத்துரைக்கின்றன.

விழாக் காலங்களில் நிகழ்த்தப்படும் உரைகள் அங்கு குழுமுவர்க்கு மட்டுமே பயன்தரும். அவ்வுரைகள் நூல் வடிவில் வெளிவரும் பொழுதோ மிகப்பெருந்தொகையினர்க்குப் பயனளிக்கும் என்னும் உயர்நோக்குடன் நூல்வடிவில் வெளியிடப்பட்டுள்ளமை வரவேற்கப்பாலது.

இவ்வுரைகளின் ஆசிரியரை தமிழ் கூறும் நல்லுலகம், சிறப்பாக சைவ உலகம் நன்கு அறியும். இவர் பேச்சுத்திறமை பெரிதும் படைத்தவர். சைவ சாத்திரங்களிற் துறை தோய்ந்தவர். சைவ ஒழுக்கத்தை பெரிதும் பேணி நிற்பவர். சைவத்தொண்டொன்றே இலட்சியமாய் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது குறிக்கோளாய்ச் சைவத் தொண்டுக்கு தம்மை அர்ப்பணித்து சைவ வாழ்வு வாழ்ந்து வருபவர். தம்மிடம் சிறந்து விளங்கும் சொற்செல்வத்தை இறைவன் புகழ் பரப்புவதற்காகவே செலவு செய்பவர். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் செய்து வரும் இத்திருத்தொண்டின் தரம் அளப்பரியது.

இந்துக்களாகிய எங்கள் வழிபாட்டு முறை தனிச் சிறப்பு வாய்ந்தது. இது அறிவாற்றல்களில் பலதரப்பட்டு நிற்பவர்க்கு அவரவர்

நிலைக்கேற்றவாறு பலவகைப்பட்டு விளங்குவது. இறைவனை நினைந்து வேள்விவேட்டல், தீர்த்த யாத்திரை செய்தல், தவம் செய்தல், விரதம் மேற்கொள்ளல், தியானித்தல், துதித்தல் என இது பலவகைப்படும் இவை யாவற்றினுடைய அமிசங்களையும் உள்ளடக்கி எல்லோரும் கடைப்பிடிக்கத்தக்கவாறு விளங்குவது “பூசித்தல்” என்னும் வழிபாட்டு முறை. இம்முறையையே நித்திய நைமித்தியக் கிரியைகளாகப் பலவாறு விரித்துக் கூறுவன ஆகமங்கள். ஆகமங்கள் விதிக்கும் வழியே இயங்குவன தேவாலயங்கள்.

“பூசை நிகழும்பொழுது மனம் இறைவன் திருவடியில் அழுந்தும். வாய் அவன்புகழ் இயம்பும். கைகள் அவனை அருச்சித்தலில் ஈடுபடும். செவிகள் அவன் புகழை மடுக்கும். அவனைத் தியானிப்பதில் மனம் இலயிக்கும். இரு கண்களும் அவன் அழகுக் கோலத்தை அள்ளிப்பருகும்” எனக்குறிப்பிட்டு இவ்வாறு ஈடுபடுபவர்களுக்கு வேண்டுவது வேறுயாது உளது என வினவுகிறார் ஆதிசங்கரர்.

“வாயே வாழ்த்துகண்டாய் பிரான்தன்னை வாயே வாழ்த்துக் கண்டாய்” என்பதும் “செவிகாள் கேண்மின்களோ எரிமேனிப் பிரான் திறம் செவிகாள் கேண்மின்களோ” என்பதும் அப்பரின் அருள்வாக்குகள்.

இறைவன் புகழை வாய்விட்டுச் சொல்லுதல் எம் வழிபாட்டில் நிலையான இடம்பெற்று விளங்குகின்றது. தேவார திருவாசகங்களில் இறைவன் பெருமை பேசும் பகுதிகள் இருக்கின்றன. இவை அவ்வப் பெருமைகளை மட்டிலும் குறிப்பாய்ச் சுட்டிநிற்பன. இப்பகுதிகளுக்கு விரிவுரை போன்று விளங்குவன புராணங்கள். “பித்தா பிறைசூடி” என்று இறைவன் புகழ் பாடுகின்றது தேவாரம். சிவபிரான் பிறைசூடிய வரலாற்றினை பக்தி பெருகும் வகையில் விரித்து கூறுவது புராணம். புராணம் இறைவன் பெருமையை கதை வடிவில் பலவகை விவரங்களுடன் தந்து, பெருமை இத்தகையதென்பதை மனதில் பசுமரத்தாணியென பதிய வைத்து விடுகிறது.

தேவாரங்களில் வரும் பல பகுதிகளை மட்டுமல்லாமல், கோயிலில் ஆங்காங்கு விளங்கும் சிற்பங்கள் பலவற்றையும் நன்கு விளங்குவதற்கு புராணங்களை கை கொடுத்து உதவுவன. உயரிய கருத்துக்களை

கதைகளுடன் பொதிந்து சுவை பெருக்கி சொல்லும் திறமை புராணங்களுக்கே உள்ள பெருஞ்சிறப்பு.

ஆசிரியன் அரிச்சுவடி கற்றுக் கொண்டிருக்கும் மாணவனுக்கு எழுத்துடன் எண்ணும் கற்பிக்கின்றான். ஆறும் நாலும் பத்து என்பதை அவனை அறிய வைக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் பாடம் தொடங்குகிறது. தொடங்கிய பின் சிறிது காலத்தில் ஆறு மாம்பழமும் நாலு மாம்பழமும் எத்தனை மாம்பழங்கள் என ஆசிரியன் வினவ விடை கூறும் ஆற்றல் மாணவனுக்கு உண்டாகின்றது. இவ்வாறு கணிதம் பயின்று முன்னேறி, அடுத்தடுத்த வகுப்புகளில் பாடம் கற்கும் அதே மாணவனது கணக்கு வகுப்பில் ஆசிரியர் மாம்பழத்தை நீக்கிவிட்டு ஆறும் நாலும் பத்து என கற்பிக்கின்றார். இன்னும் உயர் வகுப்பில் கற்கும் பொழுது x,y முதலிய அடையாளங்கள் கணிதத்தின் தரத்தை உயர்த்துகின்றன. நுண்ணிய கணித உண்மையை உணர வைக்கின்றன. தொடக்க நிலையில் ஆறும் நாலும் பத்து என்ற உண்மையை உணர்த்த மாம்பழம் வெறும் கருவியாகவே இருப்பதும், இக்கணித முறையில் ஆறும் நாலும் பத்து என்பதே உண்மைப்பாடம் என்பதும் இந்த உண்மையை உணர்த்த இவ்வாறு கூட்டல் நிகழும் ஒவ்வொரு வேளையும் மாம்பழம் தேவைப்படுவதில்லை என்பதும் தெளிவாகின்றன அல்லவா? இதேபோன்று சமய உண்மைகளையும் தத்துவங்களையும் பாமர மக்கள் நிலையிலே வைத்து உணர வைக்கும் நோக்குடன் இறைவன், இறைவி இவரிருவருக்கும் மைந்தர்கள், அவர்கள் வசிக்குமிடம், ஊர்தி போன்ற விபரங்களைத் துணையாகக்கொண்டு தத்துவங்களையும் சமய உண்மைகளையும் பிணைத்துக் கூறுவன புராணங்கள். சிவபெருமானுக்கு மனைவியா? குழந்தைகளா? இவர்கள் செல்வதற்கு இடப ஊர்தியா? அவர் கையில் சூலப்படைக்கலமா? என்றும் இன்னோரன்ன புராண நிகழ்ச்சிகள் பற்றியும் கேள்விகளை அடுக்குபவர்கள் நிலை ஆறு மாம்பழமும் நாலு மாம்பழமும் பத்து மாம்பழங்கள் என்று கணிதம் பயிலும் வேளை மாணவன் கணித உண்மையை மனதிற் கொள்ளாது அவை பெரிய மாம்மபழங்களா? சிறிய மாம்பழங்களா? என்ன இனத்தைச் சேர்ந்த மாம்பழங்கள்? என்றெல்லாம் மாம்பழத்தை மட்டுமே கருத்திற் கொண்டு ஆறு, நாலு ஆகிய எண்களைப் பற்றிய சிந்தனையை அறவே விடுத்துச் சிந்தனை செய்யும் மாணவன் நிலையினை நிகர்க்கும்.

இவ்வுரைத் தொகுதியில் உலகியல் நெறியில் வைத்து இறைவன் பெருமை கூறும் புராணப் பகுதிகளை, சுவைபடக் கதையாகக்கூறுவது மட்டுமன்றி, உண்மை கூறும் தத்துவப்பொருள்களை விளங்கக்கூடிய வகையில் மிகவும் எளிய நடையில் அளந்து, தெரிந்தெடுத்த சொற்களையும் சொற்றொடர்களையும் தடைபடா ஆற்றொழுக்கென அழகாக ஆங்காங்கே பிரயோகித்து எடுத்துக்காட்டுகளுடன் உரைக்கும் அழகே தனியழகு.

வாழ்க சிவத்தமிழ்ச் செல்வியின் சிவத்தொண்டு.

**கா. கைலாசநாதக் குருக்கள்**

உ

*குகமயம்*

*வேதாகம சைவ சித்தாந்த சபைத் தலைவர்,*

*வேதாகம பூஷணம்*

**பிரம்மஸ்ரீ கு.பாலசுந்தரக்குருக்கள்,** B.A (சிறப்பு)

*அவர்கள் வழங்கிய*

# சிறப்புரை

எடுப்பானும் என்தலை மேல் அயன் தீட்டும் எழுத்தனைத்தும்
கெடுப்பானும் என்றுங் கெடாத இன் பக்கடல் கிட்டி நிற்க
விடுப்பானும் யாய்க்கும் வினைப்போக மூட்டிமெய்ஞ்ஞானச் செல்வம்
கொடுப்பானும் நீயல்லை யோமுரு காளன் குலதெய்வமே.

- *முருகரந்தாதி*

*அநாதி முத்த சித்துருவாகிய பரமேஸ்வரன் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணைத் திறத்தினால் அவர்கள் உணர்ந்து உய்ந்து கடைத்தேறும் பொருட்டு திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். நான்கு வேதங்களும் இருபத்தெட்டுச் சிவாகமங்களும் ஆகிய இம் முதனூல்களை ஓதியுணர்தற் கதிகாரிகள் முதன் மூன்று வருணத்தை சேர்ந்தவர்களும் விசேட சிவதீட்ஷை பெற்றவர்களுமேயாவர். வேதத்தை ஓதியும் மெய்ப்பொருள் தெளிவுறாதவர்க்கும், அதற்கு அருகரல்லாதவர்க்கும் பயன்படும் பொருட்டு முன்னரே பதிணென் புராணங்களை அவர் அருளிப் போந்தார். “ஸத்யம் வத”, “தர்மம் சர” என்ற தொடக்கத்தனவாய வேத உண்மைகளைப் பாமர மக்களும் எளிதில் விளங்கக்கூடியதாக இனிமை பயக்கும் கதைகள் மூலமாக விளக்கும் நூல்களே புராணங்களாம். இதிகாச புராணங்களால் வேதம் விளக்கம் பெறும் என்றார் பிறரும்.*

*புராணம் என்பது “புரா” + “நவம்” எனப் புணர்ந்து பழைமையும் புதுமையும் ஒருங்கே பொருந்தியது என்னும் சிறப்புடையது என*

அறிஞர் கூறுவர். "பிரதாப ருத்ரீயம்" எட்டாவது சுலோகம் அழகாகக் கூறும் பொருள் வருமாறு:

ஒரு காரியம் ஆகவேண்டுமானால் அதை மூன்று விதமாகச் செய்விக்கலாம். அவற்றுள் ஒன்று உத்தரவு. அதைக் கேட்டுப் பயந்து சிலர் செய்வார்கள் அதற்குப் "பிரபு சம்மிதம்" என்று பெயர். இரண்டாவது நண்பன் சொல். அது மிகவும் இலகுவாயிருக்கும். இது "சுஹிருத் சம்மிதம்" எனப்படும். மூன்றாவது பத்தினி வாக்கு. அது எத்தனை பாரமானாலும் இலேசாகி விடும். இது" காந்தா சம்மிதம்" எனப்படும்.

"ஸ்த்யம் வத" (உண்மை பேசு) என்று வேதம் ஆணையிடுகின்றது. பிரபு சம்மிதமாகிய இது அடிக்கடி நினைவுக்கு வராது. அரிச்சந்திர புராணம் வாசிக்கும் பொழுது நினைவுக்கு வருகிறது. "பித்ருதேவா பவ" (தந்தையைத் தெய்வமாகக் கொள்) என்பது வேதத்தின் ஆணை. ஆனால் இராமாயணம் வாசித்தால் தான் நன்றாகப் புரியும். எனவே "அப்படிச் செய்", " இப்படிச் செய் என்று கட்டளையிடாமல், "அவன் அப்படிச் செய்தான்: அதனால் நன்மை அடைந்தான்" என்று சொல்லுவதாயின் நாமும் அங்ஙனமே செய்வோம் என்று தோன்றும். சுஹிருத் சம்மிதமாகிய இது சொல்லாமற் சொல்லி நமக்குத் தோன்ற வைக்கிறது. அதே விஷயத்தைப் பலவித கற்பனைகளோடு இன்னும் சுலபமாகச் சொல்லுவது காவியம் காந்தா சம்மிதமாகிய இம்மூன்றாவது வழியிலும் தெய்வீகத் தன்மை வாய்ந்த புராணங்களே சிறப்புடையவை.

புராணங்களிலும் இதிகாசங்களிலும் பிரம விட்டுணுக்களுடைய பிறப்பு இறப்புக்கள், உலக சிருட்டிகள், பிரபஞ்சத்தினது விரிவுகள், சிவலிங்க வழிபாடு, புண்ணிய காலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் முதலிய பல விஷயங்கள் விரிவாகக் கூறப்படும்.

புராணங்கள் முதலில் சிவபிரானால் நந்தி தேவருக்கும் நந்தி தேவரால் சனற்குமார முனிவருக்கும், சனற்குமார முனிவரால் வியாச முனிவருக்கும் முறையே உபதேசிக்கப்பட்டன. வியாச முனிவர் சூத முனிவருக்கு உபதேசித்தார். புராணங்கள் பதினெட்டு. அவற்றுள் சைவ புராணங்கள் பத்து. அவற்றுள் ஐந்தாவதாக விளங்குவது ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி மான்மியம் கூறும் ஸ்காந்த மகாபுராணம் ஆகும்.

தோற்றமீ றின்றித் தோற்றிய சூர்ப்பகைக்
கேற்ற காதைக் கெவன்பெய ரென்றிடின்
ஆற்றி னைம்புலத் தாறுசென் மேலையோர்
போற்று கந்தபு ராணம தென்பதே.

*சகல வேதாந்த சித்தாந்தங்களின் சாரத்தை உள்ளடக்கியதாய் ஓரிலக்ஷம் செய்யுள்களைக் கொண்ட ஸ்காந்த புராணமானது சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என ஆறு சங்கிதைகளை உடையது.*

*முப்பதினாயிரம் செய்யுள்களை உடைய சங்கர சங்கிதை பன்னிரண்டு காண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது." சிவரகஸ்ய காண்டம்". இது **13000** செய்யுள்களுடையதாய்ச் சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்களை உடையதாகும். அவற்றுள் முதல் ஆறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாசார்ய சுவாமிகள் "கந்த புராணம்" எனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச் செய்தார்.*

*சைவசித்தாந்த இலக்கணமாயின் கந்தபுராணம் அதற்கு இலக்கியமாகும். " திகட சக்கரச் செம்முகமைந்துளான்" என்னும் தலைக்காப்பு முதல் "பாராதி ஏனைப் பொருளாகி" என்னும் கடைக் காப்பிறுதியாக சுவாமிகள் அருளிச்செய்த அத்தியற்புத, அதிமதுர, திவ்விய வாக்காகிய கந்தபுராணத்தை வருடந்தோறும் பன்முறை படனமும், பாராயணமும் செய்யும் ஆலயங்களையும், மடங்களையும் கொண்டது எம் ஈழமணித் திருநாடு.*

*இத்திருநாட்டின் வடபால் மிளிருவதே ஈழத்துத் திருச்செந்தூ ர் எனத்தகைய மாவிட்டபுரம் என்னும் முருகன் தொல்பதியாம். இவ்வாலய வருடாந்த மகோற்சவத்தின் மத்தியில் **1973** ஆம் ஆண்டு சூர் முதல் தடிந்த செவ்வேற் குமரன் புகழ்பரவி சித்தாந்த ஞானாகரம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பொழிந்த செஞ்சொல்மாரிகள் நூலுருவிற் கோர்க்கப்படுவது கச்சியப்பசுவாமிகளையே ஞாபகப்படுத்தும். ஞானந்தானுருவாகிய நாயகனியல்பைச் சுவாமிகள் படம்பிடித்துக் காட்டியவாறே செஞ்சொற் செம்மணியும் மாவையம்பதி மகோற்சவ விரதியர்க்கு*

"திகழ் சரவணத்தோன்" எங்ஙனம் வேல் கைக்கொண்டு குன்றமெறிந்து, சூர் முதல் தடிந்து, குஞ்சரி மணாளனாயும், வள்ளி மணாளனாயும் காட்சி அளித்தான் எனச் சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்காட்டுக்களுடன் வாரி வழங்கினார் என்பதற்கு இக்கோவை சான்று தரும் என்பதில் ஐயமில்லை.

மாவையம்பதியிற் தோன்றி வளர்ந்து சைவப்பயிர் வளர்க்கும் எழிலியாய்ப் பணியாற்றியும், சைவ மாதர் சேவகியாய்த் துர்க்காலய சேவா துரந்தரியாயும் விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் மாவை எம்மப்பன் திருச்சந்நிதியில் நாவலன் வழித்தொண்டு பூண்டு நனிவாழ்க: அம்மையப்பன் அன்பர்கள் அன்னார் நல்லுரை கேட்டுப் பயன் பெறுக: அம்மையார் புகழ் ஞாலமெங்கனும் பரவுக.

எம்பிரான் அவர்க்கு நீண்ட ஆயுளை நல்குவானாக என வாழ்த்தும் அன்பன்.

**கு. பாலசுந்தரக் குருக்கள்**

செந்திலாண்டவன் துணை
"ஆத்மசோதி" ஆசிரியர்
**உயர்திரு. க. இராமச்சந்திரா** அவர்கள்
வழங்கிய

# விழைவுரை

வற்றா அருள்சேர் குமரேசன்வண் காதைதன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும் துகளுறாமே
கற்றாரும் கற்பான் முயல்வாரும் கசிந்துகேட்க
லுற்றாரும் வீடு நெறிப்பாலின் உறுவாரன்றே.

- *கந்தபுராணம்*

*பவநெறி யறமென்றே பற்பலருஞ் செய்யும் நவ நாகரிகம் பரவியுள்ள கொழும்பு, கண்டி, காலி, கோலாலம்பூர், சிங்கப்பூர் போன்ற பெரும் நகரங்களில், சமயப் பிரசங்கங்கள் கேட்க, முக்கியமாக, கந்தபுராண விரிவுரைகள் தொடர்ந்து கேட்க தமிழ் பேசும் சைவர்கள் பெருந்திரளாகக் கூடுவதை நாம் இன்று நேரிற் பார்த்தும் கேட்டும் மகிழ்கின்றோம்.*

*நாவலர் பெருமான் நன்முயற்சியால் தோன்றிய சென்ற நூற்றாண்டுச் சிறப்பினையும், இற்றைக்கு முப்பது நாற்பது ஆண்டுகட்குமுன் இருந்த நமது சைவசமயத்தின் தளர்வுற்ற நிலையினையும் ஒப்பிட்டுப்பார்த்து உளம் புழுங்கிய எம்மைப் போன்ற முதியவர்கள் பலர் இன்னும் உடல்கொண்டு உலாவுகின்றனர். இவர்களெல்லாம் தங்கள் பிள்ளைகளினதும் பேரப்பிள்ளைகளினதும் சமய வாழ்வு குறித்துக் கொண்டிருந்த விசனமும், கிலேசமும் எல்லோரும் நன்கறிவர். இன்றைய மறுமலர்ச்சியைக் கண்ட பின் அவர்களெல்லாம் மனச்சாந்தியுடன் கண்மூடலாமென கூறுதல் மிகையாகாகது.*

*இம்மறுமலர்ச்சிக்குக் காரணர் பலர் இருக்கலாம். அவர்களுள் இருவரைப் பேர் சொல்லிப் பாராட்டாமல் விடமுடியாது. ஒருவர்*

நல்லூர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததம்பிரான் அவர்கள்: மற்றையவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

இருவரும் யாழ்ப்பாணச் சைவர்கள் செய்த புண்ணியத்தால் தோன்றி, தாங்கள் பிறந்த நாட்டுக்கு இறவாப் புகழைத் தமது தமிழ்த் தொண்டாலும் சமயப் பணியாலும் தேடித் தந்துள்ளார்கள். பிந்தியவர் தமிழ்ப் பெண்ணினம் சிறக்க வந்த சைவமங்கையர்திலகம் அன்னாருக்குச் சில ஆதீனங்களும், சங்கங்களும், சமய நிலையங்களும் பல பட்டங்களைச் சூட்டிப் பாராட்டியுள்ளன. எம்மைப் பொறுத்தமட்டில் அம்மையாரை ஸ்ரீ துர்க்கா துரந்தரி என அழைப்பதுடன் பூரண திருப்தியடைகின்றோம். அன்னாரின் வாழ்க்கை அத்தேவியின் சேவைக்கே அர்ப்பணிக்கப்பட்டிருப்பதை உள்ளுணர்வில் தெரிந்து கொண்ட காரணத்தால் இப்படி வரைகின்றோம்.

அம்மையார் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிலின் மகோற்சவம் நடைபெற்ற போது செய்த ஒன்பது கந்தபுராணத்தொடர் சொற்பொழிவுகள் இந்த நூலில் இடம்பெறுகின்றன. 1971ஆம் ஆண்டிலும், 1972 ஆம் ஆண்டிலும், 1974ஆம் ஆண்டிலும் மலேசியா நாட்டில் வசிக்கும் இலங்கைச் சைவர்களின் அன்புக் கட்டளையை ஏற்றுச் சென்று பல அரிய சமயச் சொற்பொழிவுகள் இயற்றியுள்ளார் அம்மையார். அவற்றுள் ஒலிப்பதிவு செய்யப்பட்டவை இரு நூல் வடிவில் வந்துள்ளன எனவே, இந்த நூல் மூன்றாவது பிரசுரமாகும்.

பத்துச்சொற்பொழிவுகள் என்னும் தலைப்பின் கீழ் வெளிவந்த இரண்டாவது நூலுக்கு அணிந்துரை வழங்கிய கிள்ளான் (மலேசியா), சைவப்பெரியார் திரு. ஏ. ஆறுமுகனார் அவர்கள் “செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழ் வளர்க்கப் பிறந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் அம்சம் படைத்தவர்” எனப் பாராட்டியுள்ளார். இது வெறும் புகழ்ச்சியுரையல்ல,: முற்றிலும் உண்மையாகும். எமது நீண்டகால சோதிட ஆராய்ச்சியறிவும், அனுபவமும் அதற்குப் போதிய ஆதரவை அளிக்கின்றன. இருவரும் மார்கழி மாதத்தில் சிங்க இலக்கினத்தில், வாக்குத் தானாதிபதியும், வாக்குக்காரனுமாகிய புதன் ஞான குருவுமாகிய வியாழன் வீட்டில் வதியப் பிறந்தவர்கள். ஐந்தாம் வீடாகிய தனு ராசி சிங்க இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு இருதய ஸ்தானமாக அமைகின்றது. எனவே, சோதிட ரீதியாக ஆராய்ச்சி

செய்பவர்கள் பாரதியாரின் "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்னும் மணிவாக்குக்கு இணையற்ற உதாரணங்களைக் காண்பார்கள்.

நாவலர் பெருமான் செய்த கடைசிப் பிரசங்கம் பிரமாதி வருஷம் ஆடி மாசச் சுவாதி நட்சத்திரத்தில், யாழப்பாணம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாவிலாகும்.அன்று அவர் வாக்கிலிருந்து வெளிவந்த சில வசனங்கள் சபையிலிருந்த அபிமானிகளுக்குத் திகைப்பைக் கொடுத்ததாம். அடுத்த நாள் ஓர் அன்பர் அவரிடஞ்சென்று " நேற்றிரவு ஏன் இந்தப்பிரகாரம் பிரசங்கஞ் செய்தீர்கள்" என்று கேட்டபோது "தமக்கு அந்நேரம் ஒன்றுந் தெரியவில்லை" என்று பதில் கொடுத்தாராம். அந்த மகானதுஇறுதி மொழிகளில் மிகவும் நுட்பமான தீரக்கதரிசனம் அடங்கியிருப்பதால், அந்த வசனத்தைக்கீழே தருவது பொருத்தமுடையது.

"எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வசவுகளைக் கேட்டுக்கேட்டு கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல் ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம்.

மேலே கூறியபடியே, தாம் விரும்பிய வண்ணம் அடுத்த கார்த்திகை மாசத்தில் சுக்கிர வாரமும், மக நஷத்திரமும் சத்தமித் திதியும் பொருந்திய புண்ணிய காலத்திலே ஸ்ரீ நடராசப் பெருமானின் குஞ்சிதபாத நிழலையடைந்தார். அவர் ஆரம்பித்து வைத்த கந்தபுராண படனத்தை அவர் மருகரான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் தொடர்ந்து செய்தனர். அவருக்குப் பின் அவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் பலரும் யாழ்ப்பாணத்திலுள்ள கிராமக் கோயில்களிலெல்லாம் புராண படன ஒழுங்குகள் செய்துவந்தனர். நாளடைவில் அதன் மீது மக்கள் கொண்டிருந்த ஆர்வம் குன்றியது. இடையில் நின்றுவிட்டதென்று கூடக் கூறலாம்.

இடைக்கால மறுமலர்ச்சிக்குக் காரணராய் இருந்தவர்களுள் முக்கிய இடம் பெறுபவர்கள் புலோலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ

தம்பையாக் குருக்களும், வரணியைச் சேர்ந்த ஸ்ரீசோமசுந்தரேச சிவாசாரியர்களுமாவர். முந்தியவர் வடமராச்சியிலும், அனுராதபுரத்திலும் கந்தபுராண படனத்தை நடாத்தியவர். பிந்தியவர் நெடுங்காலமாக நிகழாதிருந்த புராணபடனத்தை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் திரும்ப ஆரம்பித்து வைத்தவர்கள். இருவருக்கும் வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை அவர்களின் ஆசியும், ஆலோசனையும் கிடைத்திருந்தது. இருவரும் வள்ளியம்மை திருமணத்திற்கு ஞானவிரிவுரை வரைந்தவர்கள். சிவாசாரியர்களின் உரை "தெய்வ மெய்ப்பொருட்டிருவருள் விரிவுரை" என அழைக்கப்பட்டு, திருச்செந்தூர் சண்முகவிலாச மகாமண்டபத்தில் பிரபவ வருஷம் ஐப்பசி மாசம் கந்தசஷ்டி உற்சவ திருக்கல்யாண சுபதினத்தில் அரங்கேற்றப்பட்டது. அதனை அச்சேற்றப் பொருள்திரட்ட அவர் அனுபவித்த கஷ்டம் சொல்லும் தரத்தன்று. நாவலர் பெருமான் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தபோது அனுபவித்த பொருள் மிடியை அதற்கு இணையாகச் சொல்லலாம். இன்று யாம் கண்டு களிக்கும் மறுமலர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கும் போது முன்னோடிகளாக முருகன் புகழைப் பரப்ப முயன்றவர்களின் சேவையை நினைவூட்டாமல் விடுவது நன்றி மறந்த முறையாகிவிடும்.

அம்மையாரின் ஒன்பது பிரசங்கங்களுள் முதலாவது பிரசங்கம் பதினெண் புராணங்களை வேதவியாசர் அருளிய வரலாற்றுடன் ஆரம்பிக்கின்றது. இது நடந்த இடம் மகதநாட்டில் கோமதி ஆற்றங்கரையில் இருந்த புண்ணிய ஷேத்திரமான நைமிசாரணியத்தில் என்பதை இந்துக்கள் சகலரும் நன்கறிவர். ஆனால் அந்த இடத்தைச் சென்ற நூற்றாண்டிலோ இந்த நூற்றாண்டிலோ தரிசித்தவர்கள் கிடையாது. அடிக்கடி நடந்த வெள்ளப்பெருக்கால் கோமதி நதிக்குப் பலமுறை திசைதிருப்பங்கள் நேர்ந்து வனங்களும், சோலைகளும் மணல் திடலாக மறைந்து விட்டன. ஏதோ இன்றைய இந்துக்கள் செய்த புண்ணியத்தால், 1960ஆம் ஆண்டில் நிகழ்ந்த பெரும் வெள்ளப்பெருக்கால் அநேக மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தநிலையில் அங்கு சென்ற தூய அன்னை ஸ்ரீலஸ்ரீ ஆனந்தமாய் அம்மையார் தமது ஆத்மசித்தி கொண்டு பழைய இடத்தைக் கண்டுபிடித்தனர். மனிதப் பெண்ணுருவில் நடமாடும் பராசக்தி இவர். கோடிக்கணக்கான மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்கள் தேடிச் சென்று கருணை பாலிக்கும் பரதேவி இவர் அன்னார் சுட்டிக்காட்டிய இடத்தைப்

புதைபொருளாராய்ச்சியாளர்கள் ஆழத் தோண்டிப் பார்த்தபோது, மொஹாஞ்சதாரா, ஹரப்பாவிற் போல் மூன்று யுக நாகரிகங்கள் ஒன்றன்மேலொன்றாகப் புதைந்து கிடப்பதனைக் கண்டனர். அன்னையாரின் ஆத்மசக்தியின் அற்புதத் தன்மையை உணர்ந்து ஆனந்தக்கண்ணீர் விட்டனர். புனருத்தாரண வேலை உடனே ஆரம்பிக்கப்பட்டு வியாசருக்கும் சுகதேவருக்கும் ஆலயமும், ஒழுங்காகப் புராணபடனம் நடக்க ஒரு பெரிய மண்டபமும் எழுந்துள்ளன. சென்ற வைகாசி மாசத்தில் ஓர் அழகிய ஆலயம் எழுப்பி அதில் புராணபுருடன்" என்ற அஷ்டலோக விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடஇந்தியாவில் தேடி எடுக்கப்பட்ட பதிணென் புராணங்களின் ஏட்டுப் பிரதிகளை வைத்துப் பூசிக்க ஒரு வாசிகசாலை கட்டியாய் விட்டது. இந்துமத சரித்திரத்தில் இருபதாம் நூற்றாண்டில் நடந்த முக்கிய அற்புத நிகழ்ச்சியென்று இதனைக் குறிப்பிடலாம். இதன் விபரங்களையெல்லாம் அழகாக விளக்கும் ஆங்கிலக் குறுஞ்சுவடி ஒன்றைத் தூய அன்னையாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாத் தொடர்பில் (சதாபிஷேக மலராக) பிரசுரிக்க அப் பெருமாட்டியின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

முடிவுரையாக, ஸ்ரீதுர்க்கா துரந்தரி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் பூரண ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் மேலும் மேலும் சிறப்புற்ற சேவைசெய்யுமாறு எல்லாம்வல்ல நல்லூர்க கந்தனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் நூல்களெல்லாம் தமிழ் வித்தியாசாலைகளில் சமய பாடப்புத்தகங்களாக இடம்பெற அரசாங்கத்தின் உத்தரவை நமது சபைகளும் சங்கங்களும் ஒத்துழைத்துப் பெறவேண்டுமென்பது எமது இறுதிப்பிரார்த்தனை.

"முருகா! கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி,
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே!"

ஜயந்திபுரம்,
தலங்கமா.

**க. இராமச்சந்திரா**

சிவமயம்

# முன்னுரை

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே

*சொற்பதங் கடந்த அற்புதக் கந்தன் கோயில் கொண்டருளிக் காட்சிதரும் ஈழத்து ஆலயங்களில் மிகப் பழம் பெருமை வாய்ந்த தலம் மாவிட்டபுரமாகும். இவ்வாலயத்திற் பல்லாண்டு காலமாகக் கந்தபுராண படனம் நடைபெற்று வருவது வழக்கம். கந்த புராணத்தைப் போற்றி வாழும் பெருங்குடி மக்கள் பலர் இவ்வாலயச் சூழலில் வாழ்கின்றனர். இத்தகைய விருப்புடையோர் பலரின் வேண்டுதற்கிணங்க மாவையாதீனப் பிரதம குருக்கள் அவர்கள் **1973** ஆம் ஆண்டு ஆனித்திங்கள் உற்சவ காலங்களில் கந்த புராணச் சொற்பொழிவுகளை நடாத்த வேண்டுமென்று பணித்தார்க்ள. அப்பணியைச் சிரமேகொண்டு நிறைவேற்றிய பொழுது பலரும் இதனை நூலாக்க வேண்டுமென்னும் விருப்பத்தையும் தெரிவித்தனர். அதற்கிசைய திரு.க நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் சொற்பொழிவு நேரத்திலேயே உடனிருந்து எழுதி உதவினர். சிறந்த தமிழ்ப் புலமையும், புராண இதிகாசங்களில் நல்ல பயிற்சியுடைமுடைய அன்னாருக்கு முதலில் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். நூலுக்கு ஆசியுரை வழங்கிச் சீர்செய்த மாவையாதீன பிரதமகுரு மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களுக்கும், கருத்துரை உதவிப் பெருஞ் சிறப்படையச் செய்த பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள்* M.A, Ph.D.

அவர்களுக்கும் , சிறப்புரை நல்கிய வேதாகம பூஷணம் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் B.A (சிறப்பு) அவர்களுக்கும் எனது சிரந்தாழ்த்தி நன்றி செலுத்துகிறேன். ஆயிரம் பிறைகண்ட அருளாளர் திரு.க. இராமச்சந்திரா அவர்களின் விழைவுரையொன்றைப் பெற்றுவிட வேண்டுமென ஆவல் கொண்டேன். பெரியார் அவர்கள் மிகத் தளர்ச்சியுற்று, நலிவுற்ற நிலையிலும் மனத்தளர்ச்சி குன்றாதவராய் அருமையான விழைவுரையொன்றைத் தமது திருக்கையாலே எழுதி அளித்துள்ளார். அவர்களுக்கு என்றென்றும் என் நன்றி உரித்தாகுக. 1977ல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இந்நூல் இரண்டாவது பதிப்பாக எனது எழுபத்தைந்தாவது பிறந்த தினமாகிய 7-1-2000ல் வெளிவருவதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். நூலைப் பிழையற அச்சேற்றி அழகுற வடிவாக்கி யாவரும் போற்றும் பெற்றிமைத்தாக அமைத்துத் தந்த சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக அடியேனை இப் பணியில் மாத்திரமன்றி எப் பணியிலும் ஊக்குவித்து எனது தோன்றாத் துணையாய் நின்றுதவும் அன்னை துர்க்கையின் திருவடிகளைப் போற்றி அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

சிவமயம்

# முருகன் துதிப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

*முருகனே செந்தி முதல்வனே மாயோன்*
*மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்*
*தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்*
*நம்பியே கைதொழுவேன் நான்.*

*ஆனா அமுதே அயில் வேல் அரசே*
*ஞானா கரனே நவிலத் தகுமோ*
*யானா கியஎன் னைவிழுங் கிவெறுந்*
*தானாய் நிலைநின் றதுதற் பரமே.*

*நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே*
*நீவந்த வாழ்வைக்கண் டதனாலே*
*மால்கொண்ட பேதைக்குக்குன் மணநாறும்*
*மார்தங்கு தாரைத்தந்து அருள்வாயே*
*வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே*
*வீரங்கொள் சூரர்க்கும் குலகாலா*
*நாலந்த வேதத்தின் பொருளோனே*
*நான் என்று மார்தட்டும் பெருமாளே.*

*திருச்சிற்றம்பலம்*

# பொருளடக்கம்

| | |
|---|---|
| பதிப்புரை | iii |
| ஆசியுரை | v |
| கருத்துரை | vi |
| சிறப்புரை | x |
| விழைவுரை | xiv |
| முன்னுரை | xix |
| திகழ் சரவணத்தோன் | 01 |
| பிரணவமுரைத்தோன் | 15 |
| வேல் கைக் கொண்டோன் | 28 |
| குன்றமெறிந்தோன் | 39 |
| ஞானந்தான் உருவாகிய நாயகன் | 50 |
| சூர்முதல் தடிந்தோன் | 63 |
| குஞ்சரி மணாளன் | 81 |
| விரதியர் முதல்வன் | 94 |
| வள்ளிக்காந்தன் | 110 |

உ

# திகழ் சரவணத்தோன்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி
காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

**சிவநேயச் செல்வர்களே,**

*வணக்கம். மாவைக்கந்தன் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறும் இந்நாட்களில் முருகன் புகழ் கேட்டுக் கூடியிருக்கின்றோம். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் வாழ்நாட்களை வீணாக்காது வாழப்பழக வேண்டும். இதற்கு வழிகாட்டுவது தெய்வ நினைப்பை ஏற்படுத்தி நிற்கும் காலம் மகோற்சவ காலமாகும். இதனாலேயே கந்தபுராணத்தொடர் சொற்பொழிவுகளை நடாத்த ஒழுங்கு செய்திருக்கிறார் ஆலய ஆதீன கர்த்தரவர்கள்: இன்றைய சூழ்நிலையில் கந்தபுராணம் படிப்பதும், கேட்பதும் மிகப்பயன் தருவதாகும். கந்தபுராணமே சைவ மக்களின் சொந்தப் புராணம் என்பதை நாவலர் பெருமான் சென்ற நூற்றாண்டில் எடுத்துக்காட்டி யருளினார். மனிதன் விஞ்ஞானத்தினால் மிக வேகமான முன்னேற்றத்தைக் கண்டுவிட்ட போதிலும் அடிமனதில் ஏக்கமும் தவிப்பும் குடிகொண்டிருப்பதை உணருகிறான். இத்தவிப்புக்குக் காரணம் அடிப்படையான சமய நம்பிக்கையீனமேயாகும்.*

*கலியுகம் என்றால் அதர்மம் தலைவிரித்தாடுகின்ற காலமாக விளங்கப் போகிறதேயென்று ஒரு காலத்தில் காட்டிலுள்ள முனிவர்கள் எல்லோரும் அஞ்சினார்கள்: பதினெண் புராணங்களையும் அருளிய வேதவியாசர் இவ்வச்சத்தைப் போக்கினார். கந்தவேளுடைய இணையற்ற கீர்த்தியே இக்கலியின் துன்பத்தைப் போக்கியருளும் என்றார் வியாச பகவான். முனிவர்கள் அமைதியடைந்து கந்தன் புகழைக் கேட்பதிலே ஆவல் கொண்டார்கள். பெருமானது சரிதையை ஸ்காந்தபுராணமாக வியாச பகவானே அருளினார்.*

**புராணம் கேட்டலின் பயன்:**

*புராணம் என்றால் இறைவனது பழைய வரலாறு என்று விளக்கங் கூறுவர். ஆனால், பழைமையான வேதாகம நுட்பங்களைப் புதுமையான கதை வடிவிலே பாமர மக்களும் விளங்கக்கூடிய வகையில் எடுத்து விளக்குவனவே புராணங்கள் எனப்படும். வேதாகம நுட்பங்கள் உயிராகவும், புராணங்கள் உடலாகவும் நினைக்கப்பட வேண்டியவை. இவற்றைப் படிப்போரும், கேட்போரும் கருத்துப் பொருளையும், கதைப் புணர்ப்பையும் நன்கு உணர்ந்துகொள்ளல் வேண்டும். புராணங்களில் சாத்திரங்களும், சரித்திரங்களும் இணைந்து மிளிர்கின்றன. மயக்கமுற்ற உயிர்கள் மலங்களின் வழிச்சென்று அல்லற்பட்டுப் பின்பு திருவருள் உணர்வு பெற்று எய்தி நிற்கும் நிலையே கந்தபுராணத்தில் விளக்கப்படுகின்றது. அறிஞர்களானோர் இதனை அறிந்து போற்றுவர் என்கிறார் கச்சியப்ப சிவாசாரியார்.*

பிறையணி சடைமுடிப் பிரான்றன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவும் மேன்மையே
மறைபல சான்றுள வாய்மை யேயவை
அறிஞர்கள் நாடியே யவற்றைக் காண்கவே.

*இத்தகைய புராணங்களை வியாச முனிவர் சூதமுனிவருக்குக் கூற சூத முனிவர் ஏனைய முனிவர்களுக்கு எடுத்துரைத்தனர் என்பர். தமிழிலே கந்தபுராணத்தையருளிய கச்சியப்பர் நூற்பயனை எடுத்துக் காட்டிய இடத்தில் "ஓதுவோரும் கேட்போரும் இப்பிறவியில் நல்வாழ்வைப் பெற்றுப் பின் சிவலோகத்தையடைவர்" என்றும், "அரக்கர்களுடைய வலிமையை முருகப்பெருமான் எவ்வாறு கெடுத்தருளினாரோ அதே போன்று கந்தபுராணத்தைக் கேட்போருடைய தீய சக்திகளும்*

*மாய்ந்து அழிந்து விடும்” என்றும் காட்டுகிறார். முருகப் பெருமான் கொடுமையை அழித்தவரேயன்றிக் கொடியவர்களை அழித்தவரல்லர். கொடியவர்களை அடியவர்களாக மாற்றிவிட்டார். இதனையே சூரசங்காரம் காட்டுகிறது.*

**உலக வாழ்க்கை:**

*இவ்வுலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அடைய விரும்புகின்றான். கல்வி கேள்வி முற்றிய சான்றோர்கள் பரிபூரண இன்பத்தையே ஆனந்தம் என்று கண்டார்கள். நாம் அடைய இருக்கும் அந்த ஆனந்தம் எம்மாலே எமக்குள்ளே விளைவிக்கப்படவேண்டியது. ஆன்மா ஆனந்தமயமானது: வியாபகமானது. ஆனால் அந்த நிலையை மறைத்துக் கொண்டு நிற்கிறது ஆணவம். நீரை மூடிய பாசிபோல அது விளங்குகின்றது. இறைவனை ஒன்றியிருந்து நினைப்பவர்களுக்கு இப்பாசியாகிய இருள் நீங்க வாய்ப்பு உண்டாகும். பாசி பிடித்த இடங்களில் வழுக்கல் ஏற்படும். அதேபோன்று ஆணவம் தாண்டவமாடும் உள்ளத்தில் இறைவனுடைய திருவடி பதியாது வழுக்கிவிடும். அசுர சம்பத்துக்கள் இறைவாழ்வைத் தடுப்பன. இறைவனோடு இசைந்த இன்பத்தை உடையோர் அசுர சக்தியை வென்றவர்கள். செம்பொருட் சிறப்பை உணர்ந்து வீடுபேறு பெற்றார்கள் என்பதைப் புராண இதிகாசங்கள் காட்டுகின்றன.*

**பொய்யும் மெய்யும்:**

*நிலையற்றவற்றை நிலையென்று உணரும் மயக்கம் ஆன்மாக்களுக்கு உண்டு. இவ்வுலகத்திலே நாம் காணும் பொருள்கள் அத்தனையும் தோன்றி அழிவதைத் தினந்தோறும் கண்டுகொண்டு இருக்கிறோம். ஆனால் அவற்றை மெயப்பொருள் என்று கருதி மயங்கியும் விடுகின்றோம். இவ்வுடம்பையுமே “ மெய்யென்று பேசும் பாழ் பொய்யுடல்” எனத் தாயுமானவர் கூறுகிறார். நிலையானதும், அழியாததும், மாற்றமில்லாதுமான ஒரு பொருள் என்றும் உண்டு என்று மெய்ஞ்ஞானிகள் கண்டு அதற்கு இறைவன் என்ற நாமத்தைச் சூட்டினார்கள். அதுவே மெய்ப்பொருள். மெய்ப்பொருளைப் போற்றியவர்கள் எல்லோரும் வாழ்ந்தார்கள்*

*என்றும் பொய்ப்பொருளைப் போற்றியவர்கள் வீழ்ந்தார்கள் என்றும் புராண இதிகாசங்களில் காணுகிறோம். திசைமாறிச் செல்பவன் குறித்த இலக்கை என்றுமே அடையமாட்டான். பொய்யை மெய்யாகக் காண்பவர்களை "மங்குவார்" என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். "மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்" என்பது அவர் பாடலாகும். கந்தபுராணத்திலே பொய்ம்மைக்கும் மெய்ம்மைக்கும் இடையில் நடைபெற்ற போர் குறிப்பிடப்படுகிறது. மெய்யைச் சார்ந்து நின்ற தேவர்களுக்கு மற்றொரு பொய்ம்மையினால் இடுக்கண் விளைந்தது. ஆனால் தேவர்கள் மனம்மாறி பொய்ம்மையைச் சார்ந்தபோது அந்த மெய்ப்பொருளாகிய பெருமானே வெற்றியை ஈட்டிக் கொடுத்தான்.*

**அவதாரம்:**

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்

*மெய்ஞ்ஞானிகளுக்கும், அஞ்ஞானிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற கருத்து வேறுபாட்டினை மேற்காட்டிய திருமந்திரப் பாடல் விளங்குகின்றது. முத்தி நெறி அறியாது திகைக்கும் ஆன்மகோடிகளைப் பக்குவம் நோக்கி ஆட்கொள்வதற்கு மெய்ப்பொருள் தன்னிலையில் நின்றும் கீழ் இறங்கி பூர்வஞான நிறைவுடன் வருகிறது. ஆன்ம நிலைக்கு வரும் இதனை அவதாரம் என்று கூறுவர். அவதாரம் என்றால் கீழ் இறங்குதல் என்பது பொருள். உலகில் அரக்கசக்தி மேல் எழுந்து தீமை பெருகிநிற்கும் காலத்தில நன்மையைப் பெருக்குவதற்காக மெய்ப்பொருள் அவதாரம் எடுக்கிறது. சூரன் ஆகியோரால் தேவர்கள் பெருந் துன்பப்பட்டுத் தமது கௌரவத்தை இழந்து நின்ற சமயத்தில் ஓரளவு ஞானம் உற்றனர். பணிவோடு பரம்பொருளை வேண்ட அப்பரம்பொருளே முருகனாக அவதாரம் செய்தார். இந்த அவதாரத்தின் மகிமையை உரைப்பவர்களும், கேட்பவர்களும் முன் செய்த தீவினைகளில் நின்றும் நீங்கி முத்தி பெறுவர் என்பது உண்மை. கந்தனுடைய புராணமே கந்தபுராணம் என்ற பெயர் பெற்றது.*

*இங்கே முருக அவதாரத்தால் சிற்றறிவும், சிறுதொழிலும் உடைய ஆன்மாக்கள் உய்தி அடைந்த திறம் பேசப்படுகிறது. நான்மறைகளில் உணர்த்தப்பட்ட நுண்பொருளை விரிவுபடுத்தி ஆன்மச் சுடர் ஏற்றுவதே புராணம் ஆகும்.குமரகோட்டத்து முருகனின் அருள்பெற்றவர் கச்சியப்பசிவாச்சாரியார். சிவநெறியும் செந்தமிழ் நயமும் கலந்து மிளிரத் தமிழ்பேசும் சைவமக்களுக்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கந்தபுராணக் காவியத்தை அருளிச் செய்த சிவாசாரியாரை நாம் குருபூசை எடுத்துப் போற்றுதற்குக் கடமைப்பட்டுள்ளோம்.*

**தேவர்கள் குறை:**

*அரக்கர்களின் தொல்லைகளுக்கு ஆற்றாத தேவர்கள் ஒன்று கூடினர். முதலில் பிரமதேவனை அடைந்து அங்கிருந்து வைகுந்ததத்க்குச் சென்று திருமாலைக் கண்டு துன்பநீக்கத்துக்குரிய மார்க்கத்தைக் கேட்டனர். திருமாலின் கூற்றுப்படி சிவனுடைய யோகநிலையைக் கலைத்து விடுவதும், உமையை மணக்கச் செய்வதும் முதற்கடன் என்பதை உணர்ந்தனர். அதற்காக மன்மதனைத் தமக்கு உதவிபுரிய வேண்டும் என்று வேண்டினர். முதலில் மன்மதன் மறுத்துவிட்ட போதும் பின்பு ஒருவாறு உடன்பட்டுத் திருக்கயிலை சென்று சிவபெருமான் மேல் பாணங்களை ஏவத் துணிந்துவிட்டான். ஆனால் என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம்.*

விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலும் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமன்
சுட்டது கயிலை முற்றும் சூழ்புகை பரவிற் றன்றே

**மன்மதன் எரிந்தான்:**

*அவன் மனைவி இரதி புலம்பினாள்: எம்பெருமானிடம் தஞ்சம் என்போர்க்கு அஞ்சல் என்று அருளுகின்ற பெருமான் உமையை மணந்தபின்பே மாங்கல்யப் பிச்சை தரலாமென்று இரதியைத் தேற்றி அனுப்பினான். பின்பு உமை தவம் செய்து கொண்டிருந்த இடத்துக்குச் சென்று பல திருவிளையாடல்களைப் புரிந்து பின்பு தன்னை வெளிப்படுத்தித் தேவிக்குத் உண்மையை உணர்த்தித் திருமணம் செய்து கொண்டான் இறைவன். இத்தகைய தெய்வத்திருமணங்கள்*

*அனைத்தும் சிறந்த தத்துவத்தை விளக்குவன. அதாவது தோன்றாது நின்று சக்தி படைத்தலுக்காகத் தோன்றுகின்ற நிலையையே இவை எடுத்துக்காட்டுவனவாகும். திருமணம் நிகழ்ந்த பின்பும் தங்கள் துன்பம் தொலையவில்லையே என உணர்ந்த தேவர் நேரிய வழிக்கு வருவதே முறையென்றும், தமது குறையைத் தாமே சொல்லி முறையிட்டுத் துதிக்கவேண்டுமென்றும் தமக்குள்ளே சிந்திக்கத் தொடங்கினர். நாம் செய்த தீவினைகள் நீங்கும் போதுதான் பிறரால் நமக்கு நேரும் தீவினைகளும் நீங்கும். விருப்பு வெறுப்பு அற்ற இறைவன் ஒவ்வொருவரது வினைக்கேற்றபடியே இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்கின்றான் என்ற நினைப்புத் தேவர்களுக்கு இப்போது வந்து விட்டது.*

> இவறலு மிகலு மின்றி யார்க்குமோர் பெற்றித் தாகி
> அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்
> சிவனையாம் வெறுத்தல் குற்றம் சிறந்தநோன் பியற்றிடாதே
> தவறுசெய் தனமென் றெம்மை நோவதே தக்க தென்றார்.

**குற்றமும் குணமும்:**

*பிரமனின் நினைவு எம்மனோர் அனைவராலும் சிந்திக்கற்பாலதாகும். முதலில் அவன் பரம்பொருள் மீது அடுக்கடுக்காக குற்றத்தைச் சுமத்தினான். தமக்குத் தலையளி செய்யவில்லையென்றும் அவுணர்க்கு வரங்களை நல்கி விட்டானென்றும் அண்டங்களின் ஆட்சியை அவுணர்கள் பெறவைத்தானேயென்றும் தாம் நலிவடைய பார்த்துக் கொண்டு யோகி போல் இருக்கின்றானேயென்றும் குற்றம் சாட்டினான் பிரமன். ஆனால் பிறர்குற்றங் காணுமளவிற்கு நமது குற்றத்தையும் காணத்தெரிய வேண்டும். குற்றங்களைந்து குணம் காண்பவர் மேலோர். குணம் காணும் நிலையில் வாழ்ந்து வருவோமானால் சமுதாயத்தில் அமைதி நிலவும். பிரமன் தன் குற்றம் காணுமளவிற்கு முடிவில் வந்து விடுகின்றான். மலரம்பு தொடுக்க மதனனை விடுத்ததும், சிவனை வெறுத்ததும், குழந்தையைத் தந்து தமது துன்பம் தொலைக்கவில்லையென நொந்ததும் தமது குற்றமென நினைத்தனன் பிரமன். இவ்வாறு தன் குற்றம் உணர்ந்த போது தான் மனம் சிவனை நோக்கித் திரும்பியது. கண்களை மூடியவனுக்கு உலகம் இருள் மயமாகத் தோன்றும். திறந்துவிட்டால் ஒளிமயமாய்*

*விளங்குமல்லவா? இதேபோன்று சிவனை நோக்கித் திரும்பிய போது மனம் திருந்துகின்றது. அத்திருப்பமே திருத்தமாகிறது. இறைவனை நோட்டம் பார்த்து நன்மையடைய முடியாது. அன்புற்றமர்ந்த நிலையிற்றான் அவனை நோக்கி அவனருள் பெறலாமன்றோ!*

**வினை தீரும் காலம்:**

*நாம் செய்த வினையை நாமே அனுபவிக்க வேண்டும். இறைவனிடம் அன்பு செலுத்தும் போது வினையனுபவம் தீர்ந்து மெய்யனுபவம் உண்டாகிறது. திருவாவினன் குடியில் முனிவர்கள் கந்தருவர்கள், தேவர்கள் வழிபாடு செய்கிறார்கள். ஆனால் மூவகையினரும் மூவகை நோக்கத்தோடு வழிபாடு ஆற்றுகிறார்கள். பிறவியற வேண்டுமென்று வேண்டுகின்றனர் முனிவர்கள் உள்ளத்தில் இறைவன் இசைமயமாக ஒலியெழுப்பிக் கொண்டிருக்க வேண்டுமென்று இசை பாடுகின்றனர் கந்தருவர்கள். போக போக்கியங்கள் பதவிகள் நிலைபெற வேண்டுமென்று வழிபடுகிறார்கள் தேவர்கள். எல்லாவற்றையும் இறைவன் ஏற்றுக்கொள்கிறான். வேண்டிய வேண்டியபடி வரங்களை நல்குகின்றான். மணிவாசகப் பெருமானும் திருவாசகத்தில் தேவர்களின் வழிபாட்டு நோக்கத்தை காட்டுகிறார்.*

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தரமுயர்ந்து தம்மையெல்லாந்தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோடியை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே

*திருவாவினன் குடியிலும் தேவர்களுடைய வாழ்த்து இவ்வாறே அமைந்துள்ளது. சங்கச் செய்யுள் ஒன்றில் முருகனைப் பார்த்துப் பாடுவதாக அமைந்த ஒரு பாடலில் நின்பால் இரப்பது பொன்னும் பொருளும் போகமுமல்ல அன்பும் அறனும் அருளும் மூன்றே என குறிப்பிடப்பட்டுள்ளது. வினை தீரும் காலத்திற்றான் இத்தகைய மெய்யனுபவம் கிடைக்கும்.*

**தேவர் திருப்பம்:**

*மனம் மாறினார்கள் தேவர்கள்: இறைவன்பாற் பேரன்பு பூண்டார்கள்: அக்கினி தேவனைக் கயிலை மால் வரைக்கு அனுப்பினார்கள். அங்கு நந்தியெம்பெருமான் சீறி உரப்பியதைக் கேட்டு அக்கினி தேவன்*

அஞ்சினான். இடியோசை கேட்ட நாகம் போல் அஞ்சி நின்ற அவன் ஒருவாறு எழுந்து நந்திதன் கழல்களை வணங்கிப் பின்வருமாறு கூறினான். இந்திரனாதியோரின் கட்டளைப்படி இறைவனை வணங்குவதற்கு உரியநேரம் பார்த்து வருவதற்கு இங்கு வந்தேன் என்றான் அக்கினி. நந்தியெம்பெருமானும் முனிவு தீர்ந்து அவனுக்கு நல்விடை கொடுத்து அனுப்பினார். ஆலய வழிபாடு செய்வோர் உரிய காலமறிந்து வழிபாடு செய்வது முக்கியமாகும். திருச்சந்நிதிக் கதவுகள் அடைக்கப்பட்டுக் கிடக்கும் காலத்தில் கோபுர தரிசனம் மாத்திரம் செய்து வெளிவீதியில் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பலாம். இவை சிவாலய வழிபாட்டு முறைகளில் அமைந்த நெறிகளாகும். கந்தபுராணம் இதற்குச் சான்று தருகிறது. அக்கினித் தேவன் நடந்தவற்றைக் கூறியவுடனே தேவர்களெல்லோரும் உரிய காலம் பார்த்துத் திருக்கயிலையை நோக்கி வருகின்றனர். அங்கு திருநந்தியைத் தொழுதுகண்ணுதற் பெருமானை வழிபட வந்திருப்பதாகக் கூறினர். நந்தியும் விண்ணவர் வருகையைக் கண்ணுதற் பெருமானுக்குத் தெரிவித்தனன். இறைவனின் கட்டளைப்படி தேவரை வருவிக்கலாம் என்றவுடன் மகிழ்ச்சியுடன் இறைவன் முன் சென்றனர் தேவர்கள். அம்மை அம்பன் சென்னி தாழ்த்தி வணங்கிப் பொய்தீரன்பினாற் போற்றினர் தேவர்கள்.

நோக்கினும் நுழைகிலை நுவலு கின்றதோர்
வாக்கினும் அமைகிலை மதிப்ப வொண்கிலை
நீக்கரும் நிலைமையின் நிற்றி எந்தைநீ
ஆக்கிய மாயமீ தறிகி லேமரோ.

பெருமானே, தேவரீரை முற்றாக நோக்கவும் முடியவில்லை. ஏனென்றால் கண்ணின் பார்வையே அங்கு நுழையவில்லை. துதிக்கலாமென்றால் தேவரீருடைய பெருமை, வாக்குக்கு அமையவில்லை. நினைக்கவும் முடியவில்லை. நீர் அமைத்த மாயத்தை எம்மால் அறியவும் முடியவில்லை எனக்கதறி நிற்கிறார்கள் தேவர்கள். இந்தத் திருப்பநிலையில் திருந்திய மொழியால் துதிக்கத் தொடங்கிவிட்டார்கள். சேய்மையில் நின்றவர்கள் இப்பொழுது ஆண்டவனுக்கு அண்மையில் வந்துவிட்டார்கள். “எந்தை, நீ” என்ற வார்த்தைகள் தேவர்களின் உள்ளக்குழைவைக் காட்டுகின்றன. நோக்குக்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டவன் இறைவன். அவன்

*காட்டினாலன்றி நாம் காண்பது இயலாது. திருவாசகத்தில்,*

சிந்தனைநின் தனதாக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

*சிந்தனையையும் நோக்கையும் வாக்கையும் ஆண்டவனுக்கு ஆக்கும்பொழுதுதான் அவன் உட்புகுந்து தன்னை எமக்கு அறிவிக்கின்றான் என்ற உண்மையை இந்த இடம்காட்டுகின்றது.*

**பஞ்சகிருத்தியம்:**

*ஆன்ம ஈடேற்றத்துக்காக இறைவன் அருளொடு புணர்ந்து ஐந்தொழில் புரிகின்றான். உருவும் பெயரும் தொழிலும் இல்லாத இறைவன் ஐந்தொழில் புரியும் நோக்கமாகவே வடிவத்தையெடுக்கின்றான். பஞ்சகிருத்தியத்தில் அருள் உதயமே முடிந்த முடிபாகும். இவ்வருள் உதயத்தைத் தேவர்கள் பெற்றதும் இறைவனை நோக்கி வேண்டி நிற்கும் வரத்தைக் காண்போம்.*

ஆதியும் நடுவு மீறும் அருவமு முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பு மின்றி
வேதமுங் கடந்து நின்ற விமலஓர் குமரன் றன்னை
நீதரல் வேண்டு நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.

*என மிக அழகாகக் கூறுகின்றார் கச்சியப்ப சிவாசாரியசுவாமிகள். நின்னையே நிகர்க்க நீ தரல் வேண்டும் என்ற அடி சிந்திப்பதற்கு உரியது. இறைவன் போக்கும் வரவும் அற்றவன். பிறப்பு இறப்பு இல்லாதவன். ஆனாற் பிறப்பு அறுக்க வல்லவன் ஆதலின் "பெரும, நின்னைப்போல் ஒரு குழந்தையை நீயே தரல்வேண்டும்" எனத்தேவர்கள் குறையிரந்தார்கள். நீயே தரல் வேண்டும் என்றதால் கருவினுருவாகாத ஒரு சிறப்பைக் காட்டுகிறார்கள் "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்பதும் ஈண்டு நினைத்தற்குரியது.*

"உதித்தனன் உலகமுய்ய":

*மலரோன் முதலிய தேவர்கள் இங்ஙனம் வந்தனை புரிய எம்பெருமான் அருள்புரிந்து அறிஞரானோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகமாறுங் கொண்டான். அருளொடு கூடிய நிலையில் சிவத்துக்கு ஈசானம், தற்புருடம், வாமனம், அகோரம், சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களுடன் அதோ முகமும் கூட அறுமுகச் சிவனாக காட்சியளித்தார். இத்திருமுகம் ஆறிலுமுள்ள நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு பொறிகள் தெறித்தன. இவ்வனற் பொறிகளின் வெம்மை கண்டு தேவர்கள் அஞ்சினர். பரம்பொருளைத் தஞ்சமடைந்தனர். பெருமானும் அவர்கள் அச்சத்தைப் போக்கிய பின் அப்பொறிகளை வாயுவிடம் கொடுத்தருளினார். வாயு அக்கினியிடம் கொடுத்துக் கங்கைக் கனுப்பக் கங்கையும் பொறியனலை ஆற்றாது வரண்டு பின் அரனருள் கொண்டு சுரந்தது. பொறிகளைச் சிரமிசை தாங்கிச் சரவணப் பூம்பொய்கையிற் கொண்டுபோய்ச் சேர்த்தது: அங்குதான் முருகன் உதயமாகின்றான்.*

அருவமும் உருவு மாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழும்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.

*என்பது கந்தபுராணம். இங்கே முருக அவதாரத்தை மிக அழகாகக் காட்டுகின்றார் கச்சியப்ப சுவாமிகள். சோதியாய்ச் சுடராய்ச் சூளொளி விளக்காய் விளங்குகின்ற பெருமானே முருகொளியாகத் தோன்றினான். ஆறு பிரிவாகச் சரவணப்பொய்கையில் சேர்க்கப்பட்ட அப்பொறிகள் வடிவமெடுத்தன. அம்பிகையின் வடிவமே சரவணப்பொய்கை. இப்பொய்கையில் சேர்க்கப்பட்டவுடன் அறுமுக வடிவத்துடன் வெளிப்பட்டான் முருகன். புறத்திலே காணப்படும் அப்பொய்கை நம்மகத்திலும் காணப்படுகின்றது. அன்பர்களின் இதயமாகிய சரவணப்பொய்கையிலே அறுமுகன் உதயமானவுடன் அரக்கசக்தி மாண்டுமடிந்து விடுமன்றோ? பொறிகள் ஆகாய அம்சமான பரப்பிரமத்தில் தோன்றி வாயுவாலும் தீயாலும் சுமக்கப்பட்டுக் கங்கையைச் சேர்ந்து மலராசானாகிய பிருதுவியில் அமர்ந்தது. இதனால் ஐம்பூதங்களும் தூய்மையடைந்தன. அரு, அருவுரு, உரு என முத்திறத் திருமேனியுடையவர் பெருமான். அருவம் என்பது மறைந்து நிற்கும் நிலையாகும். ஒளி வடிவாய் நிற்கும் நிலை அருவுருவம். வெளிப்பட்டு*

வடிவத்தோடு நிற்கும் நிலை உருவம் எனப்படும். வடிவமில்லாத இறைவனுக்கு நாம் வடிவம் கொடுக்கிறோம். அவ்வடிவத்தையே விக்கிரகம் என்கிறோம். மெய்ப்பொருளாகிய இறைவன் தங்குவதற்குரிய மேலான இடம் என்பது அதன் விளக்கமாகும். ஆலய வழிபாட்டிலே விக்கிரகத்தினூடே மெய்ப்பொருளைக் காணவேண்டும்.

**ஒருதிருமுருகன்:**

இறைவன் ஒருவனே, அவன் ஏகனாக இருக்கின்றான். ஆயினும் ஆன்மாக்களின் பலதிறப்பட்ட பக்குவங்களுக்கேற்ப அனேகனாகவும் காட்சியளிக்கிறான். பன்முகப்பட்ட மனத்தை ஒருமுகப்படுத்துவது தான் வழிபாடு. ஆலய அமைப்பும் பருமையிலிருந்து நுண்மையை நோக்கிப் போகிறது. மணிவாசகப் பெருமானும் 'ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க' என மொழிந்திருப்பதைக் காணலாம். இங்கே முருகனை ஒரு முகமாகவும், திருமுருகனாகவும், ஒருதிருமுருகனாகவும் காட்டுகிறார் புராணகாரர். சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவனே முருகன் அதே நெற்றிக்கண்ணால் எரிந்து சாம்பராகியவனே மன்மதன். எனவே அனுக்கிரகம், நிர்க்கிரகம் ஆகிய இரு செயல்களையும் நெற்றிக்கண் நிகழ்த்தியுள்ளது. முருகப்பெருமான் நிர்க்கிரகம் செய்யும் பொழுது சக்தியின் அம்சமாகவும் அனுக்கிரகம் செய்யும்பொழுது சக்தியின் அம்சமாகவும் விளங்குவான். அம்மை அப்பர் அம்சத்தோடு உதித்தவனாகையால் ஒரு முருகனாகவும், திருமுருகனாகவும் காட்சி அளிக்கிறான். முருகுஎன்ற தாதுவில் இருந்து பிறந்ததே முருகன் என்ற சொல்லாகும். ”ன்” என்ற எழுத்து தமிழுக்கே சிறப்பானது. தமிழர்களின் தனிப்பெருந் தெய்வமாக முருகன் போற்றப்பட்டுள்ளான். முருகு என்றால் இளமை, மணம், அழகு, தெய்வத்தன்மை, தேன், திருவிழா என்னும் பல பொருள்களைத் தருவது. இக்கருத்துக்கள் எல்லாம் அடங்கத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் “பெரும் பெயர் முருக” எனப் பாடியுள்ளார். முருகு என்பதில் அமைந்த மூன்று எழுத்துக்களிலும் உகரம் கலந்து ஒலிக்கிறது. அது காத்தல் செய்யும் அடையாளத்தைக் காட்டுவது. ஆதி நடு அந்தம் என்ற மூன்று இடங்களிலும் காத்தல் பொருளில் வருவதால் முருகன் மூன்று காலத்தும் மூவுலகிலும் உயிர்களைக் காப்பவன் என்பது புலனாகிறது. காத்தல் என்பது இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் அருளுதலாகும். உலகம்

உய்ய அவதரித்தான் முருகனென்றால் உயர்ந்தவர்களாகிய நல்லவர்கள் வாழவே முருகன் அவதாரம் ஏற்பட்டது என்பதாகும். உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று என்றார் தொல்காப்பியர். ஆன்மாக்கள் பிறவிக்கடலில் இருந்து நீந்தி முத்திக்கரைசேர வேண்டும் என்னும் கருணையோடு அவதரித்தவனே முருகன். முருகன் அவதாரத்தின் இந்நோக்கை நாம் சிந்தித்தால் முருக ஒளி நம் இதயமலரிற் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

**முருகன் எழுந்தருளல்:**

மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னானே.

சரவணப் பூம் பொய்கையில் அறுமுகப்பெருமான் அருளொடு வீற்றிருந்தருளிய சிறப்பைக் கச்சியப்பர் இவ்வாறு காட்டி அருளுகின்றார். அன்பர்கள் இவ்வருமந்த அருட்பாடலை என்றும் மறவாது மனப்பெட்டகக் கவசமாய் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். அப்படி வைத்திருப்போமானால் எங்கள் இருதய கமலங்கள் ஞான மனம் கமழத் தொடங்கிவிடுமன்றோ. முருகனும் அருளோடு இருதய கமலத்தில் வீற்றிருந்தருளுவான். பாசஞானம் பசுஞானங்களால் அளக்கொணாமல் பதி ஞானத்தினாலேயே அறியப்படத்தக்கவன் இறைவன். அவன் பரிபூரணப் பொருள். அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக நிற்பவன். எரியுறு நீர்போல இரண்டறக் கலந்தும் விளங்குபவன். அவனே தனித்தும் நிற்பவன். சிவச்சுடராகிய முருகன் சரவணப்பொய்கையில் அழாமல் அழுகின்றான். இளம் பூரணனாகிய அவனுடைய அழுகை எமது உய்வுக்காக ஏற்பட்ட அழுகையாகும்.

கடலழ குன்றழ சூரழ விம்மி அழும்
குருந்தகைக் குறிஞ்சிக் கிழவன்என் றோதும் குவலயமே.

என்றார் அருணகிரிநாதர். பெருமான் அழாமல் அழுது விற்றிருந்த பொழுது மும்மலங்களும் வலி குன்றிக் காட்சியளித்தன என்பதே இதன் பொருளாகும். முருகன் வீற்றிருந்த பீடம் வாசனை வீசுகின்ற தாமரை மலர். மருவும் அடியார்கள் மனதில் விளையாடுகின்ற

*பெருமான் எழுந்தருளுகின்ற மலர்கள் எல்லாம் வெற்று வாசனை வீசுகின்ற மலர்களாய் இல்லாமல் ஞானமலர்களாகவே அமையும். ஆனால் சரவணப் பொய்கையில் மலர்ந்திருந்த ஏனைய தாமரைப் பூக்களும் தம்மிடத்திலே வந்து முருகன் எழுந்தருள வேண்டும் என்றும் தவஞ்செய்கின்றனவாம். அவற்றின் தவம் ஒற்றைக் காலில் நின்று தண்ணீரில் நடைபெறுகிறது.*

முண்டக மொன்றில் வைகும் முருகனைச் சுற்றிச் செங்கேழ்
வண்டுளர் கமலக்காடு வான்புனற் றடத்தி
அண்டர்கள் முதல்வ ஓர்பால் அன்றியெம் மெல்லாம் பீடங்
கொண்டருள் முறையினென்று நோற்றிடுங் கொள்கைத்தன்றே.

*ஒரு பூவிலே தான் தங்கி விட்டாயே, இது தகுமா? முருகா. எங்களிடத்தேயும் நீ முறைமுறையாக வந்துதங்கி அருள்புரிவாயாக என்று தாமரை மலர்கள் வேண்டுவது போல நாமும் முருகனை வேண்டி நிற்க வேண்டும் அல்லவா!*

**கார்த்திகைப் பெண்கள்:**

*திகழ் சரவணத்தோன் கமலப்போதில் வீற்றிருந்து திருவிளையாடல் செய்த போது அமரர்கள் கண்டுகளித்தார்கள். கார்த்திகைப் பெண்களை அழைத்துச் சண்முகத் தொருவனுக்குப் பாலமுது ஊட்டும்படி பணித்தார்கள். அவர்கள் அறுவரும் அங்ஙனமே சென்று அமலனைப் போற்ற அறுமுகப்பொருமான் அறு சிறுவர் வடிவில் அவர்களிடத்தில் பால் உண்டான். ஆனால் அன்னை உமாதேவி அங்குசென்று ஆறு வடிவங்களையும் கட்டி அணைத்த பொழுது ஒரே வடிவமாகினான் அறுமுகவன்: பாலூட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்களை நோக்கி எம்பெருமான் வரம் கொடுக்கிறார்.*

கந்தன் தனைநீர் போற்றிய கடனால் இவனுங்கள்
மைந்தன் னெனும்பெய ராகுக மகிழ்வா லெவரேனும்
நுந்தம் பகலிடை யின்னவன் நோன்றாள் வழிபடுவோர்
தந்தங் குறைமுடித் தேபரந் தனை நல் குவமென்றான்.

*அதாவது இவன் உங்கள் மைந்தன் என்னும் பெயரைப் பெற்றுக் கார்த்திகேயன் என வழங்கப்படுவான் எனவும், கார்த்திகைப் பெருநாளில் இவனை வழிபடுபவர் அனைவருக்கும் அவரவர் குறைகளை முடித்துப்*

பேரின்பத்தையும் நல்குவோமெனவும் அருள் புரிந்தான். இது இவ்வாறு இருக்க இந்த அற்புதக் காட்சியைத் தேவர்கள் எல்லாம் கண்டுகளித்து நிற்கிறார்கள். தமக்குத் துன்பம் தொலையும் காலம் அண்மிவிட்டது என்பதை அறிந்து அவர்கள் அனைவரும் உவகைக் கடலில் மூழ்கி முருகக் குழந்தையைத் துதிக்கிறார்கள். இதனை அடுத்து முருக நாமங்கள் தரும் விளக்கங்களைக் கவனிப்போம்.

**முருக நாமங்கள்:**

கண்ணுதற்பெருமானின் நுதற்பொறிகளைக் கங்கை ஏந்திச் சென்றமையால் காங்கேயன் என்றும், சரவணப் பொய்கையில் வீற்றிருந்தமையால் சரவணபவன் என்றும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் என்றும் நாமம் பெற்றான். ஆறு வேறு உருவும் ஒன்றாகச் சேர்ந்தமையால் கந்தன் என்றும், செம்மை நலமாகிய முத்தி நலத்தை அருளியவனாகையால் செவ்வேள் என்றும், அஞ்ஞானத்தை நீக்குவதால் குமரன் என்றும் போற்றப்பட்டான். பெருமானுக்கு அன்பர்கள் கொடுத்து அழைக்கும் நாமங்கள் இன்னும் பலப்பல. இருதயகுகையில் வீற்றிருப்பதால் குகன் எனப்பட்டான். இத்தகைய நாமங்களுள்ளே கந்தன் என்ற நாமம் நூல்களில் மிகுதியும் பயிலப்பட்டு வருகின்றது. கந்து என்பது பற்றுக்கோடாகும் யானையை கட்டுந்தறி “கந்து” எனப்படும். ஆன்மாக்களுக்கு பற்றுக்கோடாக விளங்குபவன் அவனே: அன்பர்கள் தமது உள்ளமென்னும் கூடத்தில் அவனை நிறுத்திவிடலாம். புலன்களாகிய யானைகளை அவன் பிணித்து விடுவான். கந்தபுராணம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தர்கலிவெண்பா என்பவற்றில் எல்லாம் கந்த நாமமே பேசப்படுகிறது. கந்தபுராண சொற்பொழிவுகளைத் தொடர்ந்து கேட்டுப் பயனடைய இருக்கும் முருகன் அடியார்கள் கந்தன் என்னும் நாமத்தை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அது எல்லா நலத்தையும் அருளும் பெற்றி வாய்ந்தது. இவ்வளவில் இன்றைய சொற்பொழிவைப் பூர்த்தி செய்து கொண்டு நூற்பயன் பாடலை நினைவு கூருவோமாக.

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

# பிரவணமுரைத்தோன்

அடிமுதல் முடியின் காறும் அறுமுகன் உருவம் எல்லாம்
கடிதவன் அருளால் நோக்கிக் கணிப்பிலா அண்டம் முற்று
முடிவறும் உயிர்கள் யாவும் மூவருந் தேவர் யாரும்
வடிவினில் இருப்பக் கண்டு வணங்கிய வழுத்திச்சொல்வார்

*குகநேயச் செல்வர்களே!*

*இன்றைய சொற்பொழிவிலேயே, அப்பனுக்கு பிரணவப் பொருளை உணர்த்திய ஆறுமுகவனின் அற்புதத்தை காணப்போகின்றோம். முதலிற் பிரணவப் பொருளின் விளக்கத்தை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இறைவனுடைய பொருள்சேர் புகழை நாம் போற்றும் போது அட்சரங்களை நினைக்கின்றோம். மந்திரங்களை ஜெபிக்கின்றோம். நாமங்களை நவில்கின்றோம். திருமுறைகளை பண்ணோடு ஓதுகின்றோம். இவ்வழிபாட்டு முறைகளெல்லாம் எம்மை சிவநெறியிற் செலுத்தி நிற்பன. அட்சரம் என்றால் அழியாதது என்பது பொருள். அழிவறியாத இறைவனை வாழ்த்த அழியாத அட்சரங்கள் பயன்படுகின்றன. உள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்க உதவுவன இவை. நினைப்பவரை காப்பதும் மந்திரம். அதாவது உள்குவாருள்ளத்தில் ஒளிமயமாக எழுந்தருளச் செய்து உயிர் காப்பது எதுவோ அதுவே மந்திரம் ஆகும். இறை நாமத்திலேயே எமது மனதில் உள்ள காமம், வெகுளி, மயக்கம் ஆகிய நோய்கள் தீர்க்கப்படுகிறது. நோய் என்பது அச்சத்தை வித்தாகக் கொண்டது. அவ்வச்சத்தை போக்குவது இறை நாமமே. நாமுற்ற நடுக்கத்தை தீர்ப்பது நமச்சிவாயவே என்றார் திருநாவுக்கரசர் சுவாமிகள். முருகனுடைய நாமம் சடாட்சரம் எனப்படும். ஆறு எழுத்துக்களையுடையது. அது ஆறுதலை தரும் "சரவணபவ" என்ற ஆறெழுத்து மந்திரம் அதுவாகும். முருகப்பெருமானுடைய பெருமையை உமாதேவிக்கு சிவன் எடுத்து மொழிகின்ற இடத்தைக் காண்போம்.*

நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி

முன்மொழி கின்ற கந்த மூவிரண்டெழுத்து மொன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற வன்றே

நமக்கு ஆறு திருமுகங்களுண்டு. அவையே முருகனுடைய ஆறுமுகங்கள் ஆகும். உன் ஓம் என்ற குடிலையுடன் நமது மந்திரம் ஆறெழுத்தும் உன்மகனுடைய சடாட்சரமாகியது என எடுத்துக் கூறுகிறார் எம்பெருமான். பிர+ நவம் என்பதே பிரணவம் என வந்தது. நன்றாகத் துதித்தல் என்பது அதன் பொருள். வேதங்களெல்லாம் "ஐயா" என்ற பிரணவ சொல்லால் ஆண்டவனைத் துதிக்கின்றன. உள்ளக் குறும்பகற்றித் தூய்மையைத் தருவது பிரணவம். உலகியலில் உழலும் உயிர்களைத் தெய்வ நிலைக்கண் மாற்றும் புதுமையை இக்குடிலை மந்திரம் செய்கின்றது.

**ஓங்காரத்துள்ளொளியில் முருகன்:**

ஐம்புல காட்டை வேரறுத்து ஞான விளைவை ஏற்படுத்துவதற்காகச் செவ்வேட்பரமன் மயிலேறி விளையாடுகின்றான். நாம் தினந்தோறும் உள்ளத்தை காணவேண்டிய காட்சியை கோலக்குமரன் மயில்மீதேறி உணர்த்தி அருளுகின்றான். ஓங்கார வடிவமாய் நிற்பது மயில். பிரணவமுரைத்தோனுக்குப் பிரணவ வடிவமான மயிலே வாகனமாய் அமைந்துள்ளது. மயிலேறுதல் என்பது "ஓம்" என்னும் நாதத்தில் அடங்கியிருத்தல் என்ற விளக்கத்தை தருகின்றது.

ஓங்காரத்துள்ளொளியில் முருகனுருவங் கண்டு
தூங்கார் தொழும்பு செய்வார் பின்னென்ன செய்வார் இமயதூதருக்கே.

என்றார் அருணகிரிநாதர். ஓம் என்பதற்குச் சம்மதம், இசைவு, உடன்பாடு என்னும் பொருள்களும் உண்டு. உலகியலில் ஒருவனுடைய எண்ணத்திற்கு மற்றவர் இசையும் போது ஓம் என்று சொல்வதை நாம் கேட்கலாம். காதலனின் பின் செல்லும் காதலி தன் செயலெல்லாம் அற்று, நினைவெல்லாம் மறந்து, அவன் செயலும் நினைவுமே பற்றுக்கோடாகக் கொண்டு செல்வதை உடன்போக்கு என்பர். உடன்போக்குக்கு இசையச் செய்வதை ஓம்படுத்தல் என்பர். இதேபோல ஆன்மாவும் இறைவனும் இசைவதையே ஓங்காரம் உணர்த்துகிறது. சைவக் கிரியைகள் அத்தனையினூடேயும் பிரணவமே விளங்கிக் கொண்டிருப்பதை காணலாம். தேங்காய் அருகம்புல்லோடு கூடிய சாணி உருண்டை, தீபாராதனைச்சுற்று, திருவாசி அனைத்தும் பிரணவ

*விளக்கமே என்பதை யாவரும் அறிவர். எனவே நம் மனத்தாலும் வாக்காலும் செயலாலும் ஓங்காரத்தையே ஆதாரமாகக் கொள்கிறோம். அதுவே எம்மை ஆண்டவனிடம் ஆற்றுப்படுத்துகிறது. ஏறுமயில் ஏறி விளையாடும் முருகன் இப்பிரணவ தத்துவத்தையே உலகுக்குக் காட்டியருளுகின்றான்.*

**குமரகுருபரனும் அருணகிரிநாதரும்:**

*முடியா பிறவித் தொல்லையில் நின்றும் விடுபட்டவர் அருணகிரிநாதர். இளம் பூரணனாகிய கந்தவேளின் அருள் வாரியில் மூழ்கியவர் பெருமானைத் தாழ்ந்து வேண்டுகின்றார்.*

*"நாதா குமரா நம என்று அரனார் ஓதா என ஓதிய தெப்பொருள்தான்" அப்பொருளை சிறியேற்கும் வினை சிதற ஓதி அருளல் வேண்டுமென இரந்து நிற்கிறார். விண்ணோர் சிறை மீட்ட வேலவன் கருணை கூர்ந்து அப்பொருளை உணர்த்தி அருளினார்.*

செவ்வா னுருவிற் திகழ்வே லவன் அன்று
ஒவ்வா ததென உயர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க்கு இசைவிப் பதுவே.

*என்று இவ்வாறு அருணகிரிநாதர் உரைக்கின்றார். பெருமான் உணர்த்திய அந்த ஒருமொழியின் பெரும்பொருள் அறிய இரகசியமானது. இந்தப் பரம இரகசியத்தையும் அருணைமுனி கூறிவிட்டார். அவர் கூறாதிருந்திருந்தால் நாம் எவ்வாறு அறிய வல்லோம்.*

அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதா ஒளிதிகழ்
அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே.

*என்ற திருப்புகழில் அறிவை அறிவது எனப் பிரணவத்தின் பொருளை வெளிப்படுத்தியுள்ளார்.*

**அயனைச் சிறைப்படுத்தல்:**

*நாரதர் இயற்றிய யாகத்தில் ஏதோ ஒரு மந்திர உச்சரிப்பின் குறைபாட்டினால் ஆட்டுக்கடா ஒன்று அதிலிருந்து எழுந்தது. தேவர்களுக்கெல்லாம் அது பெரிய ஊறு விளைவித்தது. அவர்கள்*

கயிலைக்குச் சென்று ஆறுமுக அண்ணலை வேண்டி நின்றனர். இளம் பூரணனாகிய முருகன் அஞ்சாதீர் என்று அபயம் அளித்தான். வீரவாகுதேவரை நோக்கி யாகத்துக்கு இடையூறு விளைக்கும் ஆட்டுக்கடாவை வென்று வருகவென அனுப்பி வைத்தார். தேவரும் நன்றென அதற்கு இசைந்து கந்தப் பெருமானை வணங்கி கயிலையை விட்டு நீங்கினார். தகரை அடக்கி, கந்தவேள் முன் கொண்டு சென்று உய்த்தார். பெருமான் அந்த ஆட்டுக்கடாவையே ஊர்தியாகக் கொண்டு நாரதரின் யாகத்தை காத்தருளினார். இது இவ்வாறு இருக்க ஒரு நாள் இந்திரன் முதலிய தேவர் கூட்டம் கயிலை மலைக்குச் சென்று சிவனை வணங்கி வரும் வேளையில் கந்தப்பெருமான் அவ்வாலய முன் கோபுரத்துள் வீற்றிருந்து அருளினார். சிவனை வணங்கச் சென்ற பிரமன் கந்தப் பெருமானை வழிபடாது சென்றனன். பின் திரும்பி வரும்பொழுது முருகனே அப்பிரமனை அழைத்தான். அயன் வந்து பணிந்து தொழுது நின்றான். அவனை இருக்கும் படி பணித்து நீ புரிந்திடும் தொழில் என்னவென்று கேட்டான் முருகன். அதற்கு விடையாக நாதன் ஆணையால் அனைத்தும் நான் படைப்பேன் என்றான் நான்முகன். அதுகேட்ட முருகவேள் புன்முறுவல் பூத்து அங்ஙனமாயின் வேதங்கள் அனைத்தும் உனக்கு வருமோ என்றான். ஆமென்று பிரம்மன் கூறுதலும் அவற்றுள் ஒன்றை ஓதும் படி முருகன் பணித்தான். உடனே நான்முகன் முறைப்படி தனிமொழியாகிய பிரணவத்தை முன்மொழிந்து ஓதத் தொடங்கினான். குமரவேள் அதனை நிறுத்தி "ஓம்" என்ற தனிமொழியின் பொருள் எதுவென கேட்டார்.

தாமரைத்லை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை எடுத்தனன் பகர்தலும் வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேள் நிற்றிமுன் கழறும்
ஒமெனப்படும் மொழிப்பொருள் இயம்புகென் றுரைத்தான்

ஆனால் இத்தனை வேதங்களையும் ஓதி உணர்ந்த பிரமனுக்கு அப்பொருள் தெரியவில்லை. அவன் திகைத்தான், வெட்கினான், விழித்தான். ஏனெனில் குடிலையின் பொருள் மிகப்பரந்தது. எடுத்துச் சொல்ல முடியாதது. பிரமனே மயக்கமடைந்தான் என்றால் அதன் பொருளை யார் தான் உரைக்க வல்லவர். கச்சியப்ப சிவாசாரியார் இந்த இடத்தில் மிக நயம்பட உரைக்கின்றார் மலரோனே இதன் பொருளைத்

தெரியாது மயங்கியபொழுது நாம் ஏதோ தெரிந்துவிட்டோம் என்று கூறிக் கொள்வது வியப்பானது என்பது அவருடைய கருத்து.

> தூம றைக்கெலாம் ஆதியும் அந்தமும் சொல்லும்
> ஓமெ னப்படும் ஓரெழுத் துண்மையை யுணரான்
> மாம லர்ப்பெருங் கடவுளும் மயங்கினான் என்றால்
> நாமி னிச்சில அறிந்தனம் என்பது நகையே.

குடிலை மந்திரத்தின் பொருளுரைக்கத் தெரியாது மயங்கிய மலரோனைக் குட்டிச் சிறைவைத்துப் படைத்தலைச் செய்யத் தகுதியற்றவனெனக் காட்டித் தானே படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். கந்த வெற்பிலிருந்து ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களுங் கொண்டு ஒரு திருக்கரத்தில் செபமாலையும் மற்றொரு கரத்தில் கமண்டலமும் தாங்கி மற்ற இரு கரங்களை வரதம் அபயமாக அமைத்துப் பிரமதேவரைப்போல் படைத்தலைச் செய்தருளினார். "செவ்வேள் அயன் எனப் படைக்கின்தும் அற்புதமாமோ" எனப்பாடுகிறார் கச்சியப்ப சுவாமிகள்.

**தேவர்கள் குறை:**

இவ்வாறு அயன் படைத்தல் நிறுத்தப்பட்டமையால் திருமால் முதலியோர் துன்பப்பட்டனர். தேவர்கள் தலைவர்கள் ஒன்று கூடி கயிலையை அடைந்து சிவபிரானிடம் முறையிட்டனர். அயனைச் சிறைவைத்த வரலாற்றை எடுத்துக் கூறினர். எம்பெருமானும் தேவர்கள் குறைபாட்டு க்கிரங்கி நந்தியெம் பெருமானை கந்தவேளிடம் அனுப்பி வைத்தார். கந்தவேள் பிரமனைச் சிறை நீக்க உடன்படாமையால் சிவபெருமானே மைந்தன் கந்தனிடம் நேரில் சென்றார். அயனைச் சிறை நீங்கும்படி அன்பாக கேட்டார் .மறுத்தார் கந்தவேள் காரணம்இ பிரணவத்தின் பொருள் தெரியாதவன் படைத்தலை எங்கனம் ஆற்றுவான் என்பதாகும்.

அன்றியும் பிரம்மன் செருக்குடையவன். அவ்வகந்தை நீங்கும் வரை அவன் சிறையிலே இருப்பதே நலம் என்றார் கந்த பெருமான். இவ்விடத்தில் அகந்தையைப்பற்றி நாம் சிறிது சிந்திக்க வேண்டும். ஆன்ம அறிவை அணுவாக்கும் ஆணவமே அகந்தையெனப்படும்.

நான் எனது என்று அகந்தை மமதை யற்றவர்களே இறைவனடி சேர்வர். ஆங்காரத்தை தொலைப்பதே ஓங்காரமாகும். விண்ணுலகில் அயனைச் சிறைப் படுத்தியதன் வாயிலாக ஓங்கார இரகசியம் வெளிப்படுகிறது.சூரனாதியோரின் அகங்காரம் தொலைக்கப்பட்டு ஓம்படுத்தப்படுகிறது. இவ்விரண்டு செயலையும் முருக அவதாரம் நிகழ்த்துகின்றது. தினம்தோறும் சிவனை வழிபட்ட போதும் பிரம்மனுடைய அகந்தை ஒழியவில்லை. அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுப்பவர்களுக்கே இறைவன் எளிவந்தவனாவான்.

ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்.

என்பது திருவருட்பயன்.

**சிவனுக்கு உபதேசம் செய்த செவ்வேள்:**

கந்தப் பெருமான் மனமிசையாமை கண்டு சிறிது சினமுற்றான்போல் காட்சியளித்தான் பரமன். அப்பொழுது முருகவேள் தந்தையைப் பார்த்து “ஐயனே பிரமனைச் சிறைநீக்குகின்றேன்” என்று மொழிந்தார். பராபரன் கருணை கூர்ந்து “ ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள் உனக்குப் போமோ?” என கேட்டார். இளம்பூரணன் மூலம் குருமுகமாக உணர்த்தும் முறையை உலகுக்கு காட்டும் பொருட்டு தானே சிஷ்யனாகவும், குமரனைக் குருவாகவும் காட்டி பிரணவ உபதேசம் பெறும் முறையை காட்டினார். குருமூர்த்தியாக நின்று பிரணவத்தின் பொருளுரைத்தமையால் தகப்பன் சாமி என்றும், குமரகுரு என்றும் குருபரன், குருசாமி என்றும் போற்றப்படுகிறார் கந்தப் பெருமான்.

நாத போற்றிஎன முது தாதை கேட்க அனுபவ
ஞான வார்த்தை யருளிய குமரோனே

எனவும்

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிகு
செவிமீதி னும்பகர்செய் குருநாதா

எனவும் அருணகிரிநாதர் போற்றுகிறார்.

உபதேசம் என்பது கிட்ட இருந்து கேட்டல் என்பதாகும். மெய்ப்பொருளை அறியும் அவாவுடையோர் அணுக்கராக இருக்க

வேண்டும். அவநெறியை விட்டுத் தவநெறியைச் சேர்ப்பவர்களே இறைவனை அணுகுவார்கள். ஆன்றோர்கள் உலக வாழ்வை நச்சாது அறிவு நூல்களின் பொருளை நச்சி நின்றனர்.

அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இமைப்பொழுதில் அறிவித்த வேதியன்

எனக் கூறுகிறார் அருணகிரிநாதர். அன்றியும் அநுபூதியில் மிக விளக்கமாக வெளியிடுகிறார்.

யாமோ தியகல் வியும்எம் மறிவும்
தாமே பெறவே லவர் தந் ததனால்

என்று பாடி முருகப்பெருமான் குருமுகமாக உணர்த்தும் திறனை காட்டுகிறார். இங்கே அறிவு என்றது அறிவை அறியும் அறிவு. இவ்வறிவைக் குரு வாயிலாகப் பெறுவதே உபதேசமாகும்.உபதேச முறையிலேதான் குருசிஷ்ய பரம்பரை தோன்றுகிறது. உபதேசம் செய்பவர் குரு. குருசேவையில் மனப்பக்குவம் அடைபவன் சிஷ்யன். பிரணவ முரைத்தோன் வாயிலாக இத்தகைய உபதேசமுறையை உலகுக்கு காட்டுகின்றான் இறைவன்.

**குழந்தை முருகனின் திருவிளையாடல்கள்:**

ஆன்மகோடிகளை ஆளுகின்றவன் இறைவன். ஆள் + தல் என்பதே ஆடல் என வந்தது. இறைவனே ஆள் எனப்படுபவன். ஆளுங் குறிப்பு இருப்பதால் உயிரையும் ஆள் என உரைப்பர். ஆண், ஆண்டவர் என்னும் சொற்கள் ஆள் என்னும் அடியிலிருந்து பிறந்தவை: ஐந்தொழில் புரிதலே இறைவனின் திருவிளையாடலாகும். முருகப்பெருமான் புரிந்த திருவிளையாடல்கள் அளப்பில. ஆடல் புரியவே அவதரித்தார் என்றும் கூறும் அளவிற்கு அவனுடைய அருள் விளையாட்டு அமைந்துள்ளது.

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவினோ தனும்நீ யலையோ
எல்லா மறஎன் னை இழந் தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

என்பது அநுபூதி. தேவர்களுக்கும் மூவர்களுக்கும் அரக்கர்களுக்கும் இடையில் அவன் ஆடல் நிகழ்ந்திருக்கிறது. ஆனால் திருவிளை

யாடல்களின் மூலம் பேரருளை வழங்கி அன்பர்களை ஆளாக்கிக் கொண்டவன் அவன். வித்தில்லாத ஞானப்பழமே முருகன். பேரருளை வழங்குவதால் அவனைப் பெருமாள் என்றும், ஆறுதலை பெறுவதால் ஆறுமுகசாமி என்றும் தந்தைக்குபதேசித்ததால் குமரகுருவென்றும் பல நாமத்தில் அழைக்கின்றோம். பாலமுருகனின் திருவிளையாடல்கள் அன்பர்களின் நெஞ்சக் கனகல்லை நெகிழச் செய்கிறது. கச்சியப்ப சிவாச்சாரியார் குழந்தை முருகேசனின் திருவிளையாடல்களை அற்புதமாகச் சுவைக்கின்றார்.

தட்டைஞெகி ழுங்கழல் சதங்கைகள் சிலம்பக்
கட்டழகு மேயவரை ஞாண்மணி கறங்க
வட்டமணி குண்டல மதாணிநுதல் வீர
பட்டிகை மினக்கமர னாடல்பயில் கின்றான்.

என்று அழகாக வருணிக்கின்றார். அழகுக்கு அழகுசெய்யவல்லவர்கள் யார். கழல்களும், சதங்கைகளும், அரைஞாணும், குண்டலமும், பட்டிகையும் அழகினைச் சார்ந்தமையால் அழகைப் பெறுகின்றன. அந்தப் பெருமையிற் சத்தமிடுகின்றன: ஒளி வீசுகின்றன: மின்னுகின்றன. தேவரையும் அசுரையும் ஆடல் செய்பவன் முதலிலே சரவணப் பொய்கையில் மலர்மிசை ஆடல் செய்து பயின்றான். 'வளரும் பிள்ளையை மண் விளையாட்டிற் தெரியும்' என்பர். இங்கே தேவர்கள் எல்லோரும் பாலமுருகனின் அற்புதத் திருவிளையாடல்களைக் கண்டு வரப்போவது என்ன என்பதை அறிந்து விட்டனர். இவ்விடத்தில் திருச்செந்தூர்க் கடற்கரைக்குச் சென்று பார்ப்போம்.

**பிள்ளைத் தமிழ்:**

திருச்செந்தூர் முருகனை பிள்ளைத்தமிழிலும் பாடினார்கள். அலைவாயில் மண்ணிலே சிறு பெண் குழந்தைகள் சிற்றில்கட்டி விளையாடுகிறார்கள். கடல் அலைகள் அவர்கள் சிற்றிலை அழிக்கின்றன. மீண்டும் மீண்டும் கட்டி எழுப்புகிறார்கள். அலைகளோ மீண்டும் மீண்டும் அழிக்கின்றன. குழந்தைகளுக்கு கைசலித்து மனம்சலித்து விடுகின்றது. ஐயா எனத் திருச்செந்தூர் அப்பனை நோக்கிக்குரல் கொடுக்கின்றனர். "காக்கும் தெய்வமாகிய முருகா, நீ எம்மைக்காவா திருப்பது முறையோ" என ஓலமிடுகின்றனர். பாடலைப் பார்ப்போம்.

பொய்ய வளமை தரும்பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டும் கலன்கள் வகைவகையியே
பூட்டி எடுத்து முலையூட்டி
மெய்யா வணைத்து மறுகுதன்னில்
விட்டார் தம்மை வெறாமலுனை
வெறுக்க வேறு வகையுமுண்டோ
விரும்பிப் பாலைக் கொழிந்தெடுத்து
கையா லிழைத்த சிற்றிலைநின்
காலா லழிக்கை கடனலகாண்
காப்பா னழிக்கத் தொடங்கில் எங்கள்
கவலை யாரோ டினியுரைப்போம்
ஐயா, உங்கள் வழியடிப்போம்
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியும் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

*என்பது ஒரு பாடல்.*

*முருகு என்றால் முக்காலமும் காக்கின்ற தெய்வம் என்பதாகும். கையால் இழைத்த எம் சிற்றிலைக்காப்பானாகிய நீ காலால் அழித்தால் எங்கள் கவலையை யாரோடு உரைப்போம் என்று கேட்கின்றார்கள் சிறுமிகள். இன்னும் “ஐயா நாங்கள் உங்கள் வழியடியோம் எங்கள் சிற்றிலை அழியாதே” என முறையிடுகின்றனர். குழந்தையை நீராட்டி கலன்பூட்டி, முலையூட்டி மெய்யால் அணைத்து மகிழ்கிறாள் தாய். குழந்தையை அலங்கரிப்பது அனைத்தும் கடவுளை அலங்கரிப்பதற்குச் சமனாகும். முருகக் குழந்தையை அலங்கரித்தமையை இந்த உண்மையை காட்டுகிறது. அழியும் அழகையுடைய நாம் நம்மைச் சிங்காரித்து இடர்ப்படாமல் ஆண்டவனைச் சிங்காரித்து அவன் அழகைக் காண வேண்டும். அந்த அழகையே கந்தரலங்காரத்தில் காட்டுகின்றார் அருணகிரிநாதர். கந்தபுராணத்திலும் கச்சியப்ப சிவாச்சாரியார், பல இடங்களில் முருகக் குழந்தையை அலங்காரம் செய்கிறார்.*

**முருகன் திருவுலா:**

குழந்தைக்கு அலங்காரம் செய்ததும் அது உலாவுகின்றது. உலாவும் அழகே ஒரு தனி அழகு. மன்றுகள் தோறும், மலர் வாவிகள் தோறும், சோலைகள் தோறும், ஆறுகள் தோறும், குன்றுகள் தோறும் உலாவுகின்றான். குழந்தை முருகன், குளங்கள், மன்றங்கள் களங்கள், தலங்கள், செந்தமிழ் மேடைகள், வடமொழி அரங்குகள் ஆகிய எங்கும் முருகன் உலாவுகின்றான். இவ்விடங்களில் மட்டுமல்ல நம் உள்ளத்திலும் உலாவுகின்றான். எங்கள் உள்ளங்கள் ஒவ்வொன்றும் முருகன் உலாவும் கோயில்களாகும். அவனுடைய உலாவினால் உள்ளத்தில் ஆனந்தம் விளைகின்றது.

**சோமஸ்கந்த மூர்த்தம்:**

ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவோடு பகலுக்கம் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்.

அன்னைக்கும் அப்பனுக்கும் நடுவே குழந்தை முருகன் சோமஸ்கந்த மூர்த்தியாக எழுந்தருளுகின்றான். உலக மாதாவாகிய உமையம்மையைப் பசுமை நோக்கி இரவுக்கும், எம்பெருமானை செம்மை நோக்கிப் பகலுக்கும் ஒப்பிட்டு நடுவில் காட்சியளிக்கும் குமரவேளை மாலைக்காலமாக அனுபவிக்கின்றார் கச்சியப்பர். மூவுலகிற் தோன்றும் மாலை மயக்கத்தையூட்டிச் சிறுபொழுதில் மறைப்பது போகும். ஆனால் இந்த முருகனாகிய மாலைப்பொழுது ஆனந்தமூட்டி என்றும் அழிவின்றி இருக்கும். சிவன் சத்தாகவும், உமை சித்தாகவும், முருகன் ஆனந்தமாகவும் காட்சியளிக்கும் தோற்றமே சோமஸ்கந்த மூர்த்தமாகும். எனவே சச்சிதானந்த பிழம்பே முருகன் என்பது தெளிவு. ஆனந்தப் பொருள் உள்ளத்தில் உலாவ வேண்டுமானால் வழிபாடு வேண்டும். வைராக்கிய சித்தத்தோடு வழிபட்டால் மருவுமடியார்கள் மனதில் விளையாடுவான் கந்தன். அவனை அணைய முடியவில்லையே என்ற பதைபதைப்பு உண்டாக வேண்டும். அந்தப் பதைப்புத்தான் உள்ளப் பாசியை போக்கும். பாசி நீங்கினால் பெருமான் திருவடிகள்

*வழுக்காமற் பதியும். முருகன் அழகைக் கண்ட அம்பிகை சிவனுடைய பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றி முருகனின் பெருமையைப் பற்றி வினவுகிறார்.*

**அவனும் யானும் பேதகமன்றால்:**

*எம் பிராட்டி அறிந்தும் அறியாதவள் போல அப்பனிடம் வினவி அறுமுகன் பெருமையை அகிலத்துக்குக் காட்டுகின்றாள். உலகியலிலும் தாய் காட்டத்தான் தந்தையை காண்கின்றோம்.*

மெய்யருளாம் தாயுடன் சென்று பின் தாயை மறந்து
ஏயுமதே நிட்டை.

*என்றார் பட்டினத்தடிகள் அம்பிகைக்கு அப்பன் அருளுமாற்றைக் காண்போம்.*

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

*"நமது சக்தியே, முருகன்: அவன் வேறு நாம் வேறு அன்று. நம்மைப் போலவே பிரிவின்றி யாண்டும் நீக்கமற நிறைந்தவன் முருகன், பார்வைக்கு குழந்தை போல தோன்றுகின்றான் ஆனால் முற்றும் உணர்ந்தவன். தன்னைப் போற்றினவர்களுக்கு செல்வமும் ஞானமும் முத்திப் பேறும் வழங்குகின்றான் என்பது பாடலின் பொருளாகும்.*

**தாரகப் பிரமம்:**

*பிறவியைத் தாண்டச் செய்வது இதுவாகும். இறைவனின் நாமங்களை அன்புடன் பிழையற ஓதல் வேண்டும். கிரியைகளை முறை வழுவாது தழுவிச் செய்தல் வேண்டும். எழுத்துப்பிழை சொற்பிழைகளோடு நாமங்களை உச்சரித்தால் அடைய வேண்டிய பயனை அடையவிடாது மாறான நிலைக்கு எம்மை உய்த்துவிடும். அயில்வேலவன் கவியை அன்பால் எழுத்துப் பிழையற கற்கின்றிலீர் என்பது அலங்காரம். நாரதருடைய யாகம் ஆட்டுக்கடாவை தோற்றுவித்ததும் இதனாலேயே ஆகும். பரமனை மதித்திடா பங்கையன் தலைக்கனம் மிக்கவன் என்பதையே தலைகிள்ளிய நிகழ்ச்சி காட்டுகின்றது. பிரம்மன் நான்முகன்*

ஆனதும் அவனுடைய குறைபாட்டையே விளக்குகின்றது. தலை என்பது ஆணவத்தை குறிக்கும். சிவ நிந்தனை புரிந்த பங்கையனோடு சேர்ந்த வானவரும் தண்டிக்கப்பட்டனர்.

"ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ" என்கிறார் மணிவாசகர். இந்த நிலைக்கு வருவதைத் தான் உபதேச முறை உணர்த்துகின்றது. பிரணவ முகத்தையுடைய ஆறுமுகன் பிரமனைப் பார்த்து பிரணவத்தின் பொருளை கேட்கின்றான். ஆனால் பிரமன் மந்திரங்களை செப்பத் தெரிந்தவனேயன்றி பொருள் சொல்லத் தெரிந்தவனன்று. எந்த சாத்திரங்களையும் தோத்திரங்களையும் பொருளுணர்ந்து கற்க வேண்டும் என்பதையே எம்பிரான் முருகன் காட்டியருளுகின்றான். தாரக பிரமமாம் பிரணவம் காசியில் இறப்பவர்களுக்கு எம்பிரானால் கழற்றப்படுவது. காசியில் இறக்க முத்தி என்பர். காசியில் இறத்தலாவது நான் கெடுதலாகும். அந்த நிலையில் சிவசோதியும் சீவசோதியும் கலக்கும். பிரம்மனை விடுவித்த பரமன் சீடனாய் மாறி முருகனைக் குருமூர்த்தியாக கொண்டு காலம் இடம் அறிந்து உபதேசம் கேட்கின்றான். பொய்யைக் காதி மெய்யைச் சேவிக்கும் செவியை தாழ்த்தி உபதேசம் பெற்றான் பரமன். பிரமபதியின் செவியழகு உயர்ந்து நின்றான். குருமூர்த்தி சீடன் தாழ்ந்து நிற்க குரு உயர்ந்து நிற்கின்ற உண்மையை இவ்வாறு புலப்படுத்துகின்றது. உபதேச முறை உணர்த்தப்படுகின்றது முருகன் தனிவேல் முருகனோடு சாத்தி வைக்கப்பட்டுள்ளது. ஞானத்தைப் பெற்ற ஞானப் பொருளோடு சார்ந்து நிற்க வேண்டும் என்பது குறிப்பு. அச் சுடர்வேல் இடக்காற் பெருவிரலில் இருந்து வலச்செவியளவு சாத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உபதேசம் கேட்பதுமே பிறவி. அறவழி என்பதையும் அம்மை காட்ட அப்பனைக் கூடுதலே முத்தி என்பதையும் இஃது உணர்த்துகின்றது.

**பிரமன் மெய்யுணர்வு பெறுதல்:**

சிறை விடுவிக்கப்பட்ட பிரமன் மெய்யை உணருகின்றான். நாதனைப் பார்த்து "ஐயனே, உன்றன் புதல்வன் தந்த தண்டனை குற்றமன்று. அதுவே என்னைப் புனிதனாக்கி மெய்யுணர்வை நல்கியது. நான் என்னும் அகந்தையை அழித்து தீது செய்வினைகளை மாற்றியது" என்று கூறி வணங்கி நின்றான். இதனை கச்சியப்பர் கூறுகிறார்.

நாதனித் தன்மை கூறி நல்லருள் புரித லோடும்
போதினன் ஐய உன்றன் புதல்வனாற் றியவித் தண்டம்
ஏதமன் றுணர்வு நல்கி யானெனும் அகந்தை வீட்டித்
தீதுசெய் வினைகள் மாற்றிச் செய்தது புனித மென்றார்.

*உயர்வற உயர்நலம் கொடுக்கின்றவனுக்கே தண்டனை வழங்கும் உரிமையுண்டு. முருகன் தண்டனை அகந்தை வீட்டித் தீது செய்வினைகள் மாற்றி மெய்யுணர்வு நல்கிப் புனிதஞ் செய்தது. இறைவன் அருட்புனலில் புனிதமடைந்தான் பிரமன். பிரணவப் பொருளைத் தந்தைக்கு உபதேசித்த தனயனாகிய முருகப்பெருமான் அகத்திய முனிவர் முதலியோர்க்கும் உபதேசித்தருளினார் என்பது கந்தபுராணம். அவனை வழிபட்டு நிற்கும் அடியவர்களனைவருக்கும் குருவாய் எழுந்தருளி இப்பொருளை உணர்த்துவான் பெருமான் என்பது வெளிப்படை. இவ்வளவிற் அவன் திருவடிகளைப் போற்றி இன்றைய உரையை பூர்த்தி செய்து கொள்வோமாக.*

ஆதி யாகிய குடிலையும் ஐவகைப் பொறியும்
வேதம் யாவையும் தந்திரப் பன்மையும் வேறா
ஓத நின்றிடு கலைகளும் அவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையும் குமரவேள் பொருவிலா உருவம்.

# வேல் கைக் கொண்டோன்

அந்தமில் லொளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த இயற்கையால் சக்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் சொன்ன தன்மையாற் தனிவேற்பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்

*கந்தப்பெருமானடியார்களே!*

*இன்றைய சொற்பொழிவில் வேல் கைக்கொண்ட பெருமான் பெருமை நினைக்கப்படுகிறது. "வேலைச் சிந்தித்தால் வினைகள் சிந்திப்போம்" என்று பாடினார்கள் முருகனடியார்கள். வேற் படையையுடையவன் முருகன். அதனால் வேலவன் என்ற சிறப்புப் பெயரை தாங்குகின்றான். படையைத் தாங்கி நிற்பவன் பகைவனன்றோ. ஆனால் எந்தை கந்தவேள் எமக்கெல்லாம் அன்பன். அவன் தாங்கி நிற்கும் படை அகப் பகையை வீட்டி அன்பர்களுக்கு நலமளிக்கும் ஞானப்படை. படை என்ற சொல்படுத்தல் காரணமாக வந்தது. படுத்தல் வெல்லுதலாகும். அந்த வெல்லுதலைச் செய்கின்றமையால் வேல் எனப்பட்டது. வெற்றி சூடுதல் முருகனுக்கு வேண்டியதா என்றால் இல்லை. ஆனால், அவனடியார்கள் பொருட்டு இப்படைக்களத்தை தாங்கியுள்ளான். விருப்பு வெறுப்பற்ற பெருமான் தமது அறிவு இச்சை செயல்களை அன்பர்கள் பொருட்டே ஏற்றுக் கொண்டுள்ளான். ஆகவே, அவன் கையிலுள்ள செவ்வேல் நன்மையையே தருகின்றது. ஏனைய படைகள் புறப்பகைகளையே சாடும். இவ் வேற்படை அவ்வகைப் படைகளின்றும் வேறுபட்டது.*

**பிறப்பின் அருமை:**

*உணர்வரிய மெய்ஞ்ஞானம் உதயமாவதற்குத் தரப்பட்டது இம் மானுடப் பிறப்பாகும். மதிநல முற்றால்தான் மனநல மடையலாம். ஆக்கைக்கே இரை தேடி அமைந்து காக்கைக்கே இரையாகிக் கழியாமல் இவ்வுடம்பை முத்தி நலம் பெறும் ஏணியாக வைத்திருக்க வேண்டும். மனிதப் பிறவி தவிர்ந்த ஏனைய ஊனுடம்புகளுக்குத் திரையும் நரையும் இல்லை. மனிதப் பிறவிக்கு மாத்திரம் நரைதிரை உண்டு. நாம்*

தவவாழ்வு பெற்றுத் தனிஞானம் அடைய வேண்டும் என்பதற்காக நரையை இறைவன் நமக்கு தந்திருக்கின்றான். “நரைவருமென்றஞ்சி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்” என்று நாலடியார் கூறுகிறது. எனவே திருவடி ஞானம் பெறவே மனிதப்பிறவி நமக்கு வாய்த்துள்ளது என்பதை நாம் மறவாதிருக்க வேண்டும்.

**ஆசை அறுத்தல்:**

பற்றுக்காரணமாக வருவது பிறவி. பிறவி அலைகள் தொடர்ந்து எழுந்தும் விழுந்தும் வருகின்றன. “எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனதிடர் பிறவி அதிமாயம்” என்றார் அருணகிரிநாதர். துன்ப அலைகளைத் தன் திருவடியாற் போக்கிப் புனிதமாக்கிக் கொண்டிருக்கின்றான் அலைவாய் விளங்கும் முருகப்பெருமான். ஆசைகள் அறுமளவுக்கு அறுமுகவனின் திருவடிஞானம் கைகூடுகின்றது. ஆசைகள் பெருகப் பெருக அமைதியின்மையும் அதிகரிக்கிறது. பிறர் பொருட்டு ஆசைப்பட்டால் அது பிறவியை அறுக்கும். தன் பொருட்டு ஆசைப்பட்டால் அது பிறவியைப் பெருக்கும் தாயுமானவரும் ஆசைப்படுகிறார்.

கொல்லா விரதம் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவது என் னிச்சை பராபரமே.

தம்பொருட்டு ஞானிகள் ஆசைப்படுவதில்லை. இராவணன் ஆசைப்பட்டு அழிந்தான். துரியோதனன் ஆசைப்பட்டு துணைவரோடு அணிந்தான், சூரன் ஆசைப் பட்டுக்கிளை முதலோடு தொலைந்தான். எனவே ஆசை அறவேண்டும். இதற்கு இறைவனை நினைக்க வேண்டும்.

வேண்டுதல் வேண்டாமை யிலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில.

என்பது வள்ளுவருடைய கூற்று. துன்பத்தை நீக்கும் வழியை இங்கு காணுகின்றோம். ஆசை அறும்போது தான் உபதேசகுரு வாய்க்கின்றார். முருகனே உபதேசகுரு. பரமனுக்கு உபதேசித்தவன். அகத்தியருக்கு உபதேசித்தான். அருணகிரிநாதருக்கு உபதேசித்தான். பாம்பனடிகளுக்கு உபதேசித்தான் உலகேழும் தானே அகண்டாகார நிலையில் விளங்குகின்றான் என்பதை உணர்த்தி நிற்கின்றான் குருமூர்த்தி. தன்னிடம் ஞானம் பெற்றவர்களுக்கும் இந்நிலையை அடைய

*வைக்கின்றான். இந்நிலை வந்துவிட்டால் விருப்பு வெறுப்பு ஏற்பட இடமில்லை. இன்பமும் துன்பமும் சமனிலையில் அமைந்துவிடும். பகை நட்பு என்பதும் ஏற்படாது.*

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள் கொண்டறியார் அறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

*என்றும் கந்தரநுபூதியிற் காட்டியுள்ளார். முருகப்பெருமான் வேல்தாங்கிக் குருவாய் வருகின்றான். அவனே அறிவும் அறி தத்துவமும் அபரிமித வித்தைகளும் ஊட்டி நிற்கின்றான். உலககுரு அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் புகட்டுகிறார். ஆனால் குமரகுரு மெய்ஞ்ஞானத்தை ஊட்டிநிற்க அஞ்ஞானம் தானே அகல்கிறது. இச்செயலை ஆற்றுவது அவன் திருக்கை வேலாகும். இருளை நீக்கி ஒளி வருவதில்லை. வேல் என்பது மெய்ஞ்ஞானம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.*

**மூன்று சக்திகள்:**

*ஞான மாத்திரையாய் நிற்கும் சிவம் சுத்தசிவம் எனப்படும். இதுவே தொல் பெரும் வடிவமாகும். இவ்வடிவமே ஆனந்தமயமான முருகன், தவக்கனலாய் இருந்த சிவக்கனலே முருகக்கனல். அனலானது தானும் தூய்மையாகித் தன்னைச் சேர்ந்தவற்றையும் தூய்மையாக்குவது. சுத்தசிவம் அருளை வெளிப்படுத்தும் போது பராசக்தி எனப்படும். அதுவே சிவசக்தியாக மாறுமிடத்து முதலிற் திரோதானசத்தி என பெயர் பெற்று இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானாசத்தி என முத்திறமாக அமையும். ஆன்மாக்களின் மலத்தைக் கெடுத்து சிவத்தை அளித்தற்கு இரங்கும் நிலை இச்சாசத்தி. அவரே முருகன் பக்கத்தில் வீற்றிருக்கும் வள்ளி நாச்சியார். சிவத்தை அறிய உதவும் அறிவு நிலையே ஞானாசத்தி. அதுவே அவன் திருக்கையில் வேலாக நிற்கிறது. ஐந்தொழிலை வகுக்கும் நிலை கிரியாசத்தி. தேவகுஞ்சரி இந்த நிலையிலே காட்சி தருகிறார். இச்சையும் கிரியையும் பக்கத்தே விளங்க வேலானது பெருமானைச் சார்ந்து விளங்குகிறது. நமக்குள்ள அறிவு, இச்சை, செயல் மூன்றும் உலகை நோக்கி மாத்திரம் தொழிற்படுகிறது ஞானிகளிடத்தே*

இவை மூன்றும் ஆண்டவனை நோக்கித் தொழிற்படும். ஆனால் ஆண்டவனிடம் தொழிற்படும் சக்திகள் ஆன்மாக்களாகிய எம்மை நோக்கியே தொழிற்படுகின்றன.

**தேவர்கள் முறையீடு:**

அயனைச் சிறை விடுத்து அரனுக்குபதேசம் செய்த பின்னர் குரு மூர்த்தியான குமரக் கடவுள் கந்தமாதன வேற்பில் இனிது வீற்றிருக்கின்றார். இந்திரனாதியோர் திருக்கயிலையை நோக்கி மீண்டும் செல்கின்றனர். முறையிடுகின்றனர்.

அப்படிக் குமரனும் அவத ரித்துளன்
இப்பகல் காறும் எம்மின்னல் தீர்த்திலை
முப்புவ னந்தொழு முதல்வ தீயரேந்
துப்புறு பவப்பயன் தொலைந்த தில்லையோ.

இவ்வாறு செப்பி நின்றான் இந்திரன். முதலிலே தாழ்வை மேற்கொள்ளாது அகந்தையோடு வாழ்ந்த தேவேந்திரன் முதலிய தேவர்கள் இப்பொழுதுதான் தாழ்ந்து வணங்கும் நிலைக்கு வருகின்றனர். அரைகுறையாகத் தன்னை நோக்கித் திரும்புவதை விட்டு முற்றாகத் திரும்புவதை இறைவன் பார்த்துக் கொண்டேயிருப்பான். ஆண்டவனை நோக்கித் தாழ்ந்து நிற்றலே சைவத்தின் உயிர்நாடியாகும்.

தாழ்வெனுற் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரும்
ஊழ்பெற லரிது.

என்றார் அருணந்திசிவம். எனவே, தேவர்கள் அனைவரும் அரக்கர்களின் தொல்லைக்காற்றாது நின்று பெருமானை நோக்கி மேலும் புலம்புகின்றனர்.

சீகர மறிகடற் சென்ற நவ்விசேர்
காகம தென்னவுன் கயிலை யன்றியே
ஏகவோ ரிடமிலை எமக்கு நீயலாற்
சோகம தகற்றிடுந் துணைவ ரில்லையே.

கடலிலே சென்று கொண்டிருக்கும் கப்பலிலே பாய்மரத்தில் தங்கியிருக்கும் காகம் அது வொன்றையேயன்றி வேறு எதனையும்

தஞ்சமாக அடையாது. கப்பற்காரன் துரத்தினாலும் அது பறந்து சென்று விட்டுத் திரும்பவும் பாய்மரத்தையே தஞ்சமாக நினைத்து பறந்து ஓடிவரும். இதேபோன்று நாமும் எம்பெருமானுடைய திருக்கயிலை மலையையன்றி வேறு எங்கே சென்று தஞ்சமடையலாம்! என வினவி நிற்கின்றனர். இறைவன் ஏகனாகி நிற்கின்றார். அவனை பற்றுக்கோடாகக் கொண்டு கனவிலும் நினைவிலும் வாழ்ந்தவர்களே மெய்ஞ்ஞானிகள். நடுக்கடல் நாவாய் உச்சியிலிருக்கும் காகம் கரை காணாது தவித்து மீண்டும் நாவாயையே தஞ்சமாக அடைவது போல பிறவி கடலில் கரை காணாது அலமரும் ஆன்மாவானது ஆத்மநாயகனாகிய நாவாயையே மீண்டும் நாடுகிறது. எமது பாவ வினைகளைப் போக்குபவன் அவனே. அரன் என்ற நாமம் இந்த உண்மையை காட்டுகின்றது. இதனாலேயே இறைவனை துதிக்கும் போது அரகர என போற்றுகிறோம். "அரகர என்ன அமரரும் ஆவர் அரகர என்ன அறும்பிறப்பன்றே" என்கிறான் திருமூலர். "நீயலால் சோகமதகற்றிடும் துணைவரில்லையே" என்கிறான் இந்திரன். தேவர்களின் வினை தொலையுங் காலம் அண்மிவிட்டது.

ஏற்றெழு வன்னிமேல் இனிது துஞ்சலாந்
தோற்றிய வெவ்விட மெனினும் துய்க்கலாம்
மாற்றலர் அலைந்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்பரி தலமிப் புன்மையே

இவ்வாறு அலமந்து தாழ்ந்து நிற்கின்றான் இந்திரன். நெருப்பிலும் துயிலலாம் நஞ்சும் அருந்தலாம். ஆனால் பகைவர் எம்மை அலைத்திடும்படியாக வந்த வேதனையைத் தாங்க மாட்டோம். நெருப்பும் நஞ்சும் உடனேயே உயிரைப் பறித்து விடும். ஆனால் அரக்கர்களோ உயிரை மாத்திரம் பறிக்காமல் உடம்பை வதைக்கின்ற துன்பத்தை இடைவிடாது செய்து கொண்டிருக்கின்றனர். ஆகவே, அத்தொல்லையிலிருந்து நீங்குவதற்கு எம்பெருமான் திருவருளை நாடி நிற்கின்றான் இந்திரன். இதைத்தான் தம்மை இழந்து நிற்கும் நிலை என்று ஞானிகள் காட்டுவர். தீமையை நீக்கவும் திருவை நல்கவும் வேண்டியவனே தந்தை. குழந்தைகள் தந்தையை அன்றி வேறு யாரைச் சரணடைவார்கள் என்று காரணம் காட்டுகின்றான் இந்திரன்.

**ஒப்படைத்தல்:**

எமது வாழ்வு முதலில் உண்மையில் தொடங்கி இடையில் பொய்மையில் கலந்து முடிவில் மெய்யுணர்வில் முடிகின்றது. குழந்தை முதலில் முற்றாகத் தன்னை தாயிடம் ஒப்படைத்து விடுகிறது. குழந்தையின் பொறுப்பனைத்தும் தாயைச் சார்ந்தது. அதுபோல நாங்கள் எம்மை இறைவனிடம் ஒப்படைத்து சும்மா இருக்கப் பயின்று கொள்ள வேண்டும். நமது வாழ்க்கை என்கிற ஆறு கருணா சமுத்திரத்தை நோக்கி ஓடுகிறது. இரு கரைகளுக்கிடையே நீரோடுவதால் தெளிப்புனலாய் அமைகின்றது. நமது வாழ்க்கை ஆற்றுக்கும் இரு கரைகள் உண்டு. ஒன்று உலகம். மற்றது உலக முதல்வன். உலகம் என்பது உயர்ந்தோரைக் குறிப்பது மறவற்க மாசற்றார் கேண்மை என்பது பொய்யா மொழி. வேதாகமங்களும், அருள் நூல்களும், சிவனடியார்களும், பெற்றோர்களும், அரசனும், குருவும் நமக்கு நன்னெறியைக் காட்டுகின்றார்கள். இவர்களுக்குத் தம்மை ஒப்படைப்பவர்களே ஆண்டவன் நினைவை மற்றக் கரையாக அமைத்துக் கொள்வர். அதனால் வாழ்வு தெளிவடைந்து தற்பரனாகிய கருணைக் கடலில் கலந்து பிறவியை அறுக்க வழி உண்டாகின்றது. தேவேந்திரன் தாழ்ந்து நின்று கூறிய முறையீடுகளை எம்பெருமான் செவி சாய்த்தான். அவர்களுக்கு அருள் கொடுக்கும் காலம் இதுதான் என்பதை நினைத்தான்.

இகபரம் உதவுவோன் இவற்றைக் கேட்டலும்
மிகவருள் எய்தியே விடுமின் நீர்இனி
அகமெலி வறலென அருளி ஆங்கமர்
குகன்முகம் நோக்கியே இனைய கூறுவான்.

**வேல் வருகின்றது:**

இகத்தையும் பரத்தையும் அவரவர் பக்குவம் நோக்கி உதவுகின்ற பரமன் இந்திரனுடைய உரையைக் கேட்டதும் கருணை கொண்டு “கவலையை விடுமின்” என்று அருளி அங்கு வீற்றிருந்த குகப் பெருமானுடைய திருமுகத்தை நோக்கி எடுத்துக் கூறுகிறார். மைந்தனே, பூமியை அலைத்து உயிர்களுக்கு எல்லாம் துன்பத்தைச் செய்து தேவர்களையும் வாட்டிக் கொடுமைகள் ஆற்றுகின்ற சூரன் என்ற அரக்கனை அவன்

சுற்றத்தோடும் அடக்கி வேத நெறியை நிலைநாட்டித் தேவர்களின் பதத்தை மீண்டும் நல்கி எம்பால் வருக என அருளிச் செய்கின்றார். இதற்குரிய கந்தபுராணப் பாடலை இந்த இடத்தில் நோக்குவது மேலும் விளக்கத்தை தருவதாகும்.

பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும்
பருவரல் செய்துவிண் ணவர்தம்
ஊரினை முருக்கித் தீமையே இயற்றி
யுலப்புறா வன்மைகொண் டுற்ற
சூரனை யவுணர் குழுவொடுந் தடிந்து
சுருதியின் நெறிநிறீஇ மகவான்
பேரா சளித்துச் சுரர்துய ரகற்றிப்
பெயர்தியென் றனன்எந்தை பெருமான்

தீமையே இயற்றி வெற்றிகண்டவன் சூரன். எந்தவொரு கருமத்தையும் ஏதோ ஒரு அறிவு இல்லாமல் செய்ய முடியாது. எனவே தீமை என்று அறிந்தும் ஆற்றிக் கொண்டிருக்கின்ற சூரன் தண்டனைக்குரியவன். அவனைத் தண்டிப்பதற்காக வேதநாயகனாகிய இறைவன் தன்னின் வேறாக முருகனைப் பணிக்கின்றார். மூவுலகமும் இறைவனின் ஆணைக்குட்பட்டு ஒழுங்காக இயங்குகின்றது. தேவர்கள் அதிசயமான இன்பத்தையும் மக்கள் துன்பத்தையும் நரகர் துன்பத்தையும் அநுபவிப்பதுதான் இறைவன் ஆணையில் அடங்கிய ஒழுங்காகும். இவ்வொழுங்கை மீண்டும் வேதநெறியில் நிலை நிறுத்தலே முருகனுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. இதன் பின்னர் சிவபெருமான் முருகனுடைய பதினொரு கரங்களில் பதினொரு படைகள் அருளப்பட்டதை அடுத்து வேற்படை அருளப்படுகிறது.

ஆயதற்பின்னர் ஏவின்மூ தண்டத்
தைம்பெரும் பூதமும் அடுவ
தேயபல் லுயிரும் ஒருதலை முடிப்ப
தேவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி
மன்னுயிர் உண்பதெப் படைக்கும்
நாயக மாவ தொருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைகைக் கொடுத்தான்.

இந்த வேற் படையானது எல்லா அண்டங்களையும் ஐம்பூதங்களையும் அழிக்க வல்லதாகவும் எல்லா உயிர்களையும் ஒரே தலையாக ஒரே மூச்சில் முடிக்க வல்லதாகவும் எவர் மேல் விடுத்தாலும் அவர்களின் வீரத்தையும் வரங்களையும் சிந்தச் செய்வதாகவும் அத்துடன் உயிரைக் குடிக்கக்கூடியதாகவும் எப்படைக்கும் நாயகமாகி உள்ளதாகவும் அமைய அருளப்பட்டது. இது சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தன்மை வாய்ந்தது. அந்தச் சுடரும் ஒப்பற்ற தனிப்பெரும் சுடராகும். திருக்குமாரரின் திருக்கையிலே எம்பெருமான் இத்தகையவேலைக் கொடுத்து தேவர்களின் இன்னல்களைப் போக்கும்படி அருள்செய்கின்றார். படைக்கு நாயகமான ஒரு தனுச்சுடர் வேலைப் பரம்பொருள் தாமே படைத்து நல்கினர் என்றார் கச்சியப்பர். பதினொரு உருத்திரர்களும் பதினொரு படைகளாக இருந்தாலும் இவ்வேல் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஏனெனில், தருமத்தை மறந்த சூரனைத் திருத்த இந்த அற்புத வேலே உதவியது. அதனாற்றான் குமரன் திருக்கைவேல் படைக்கு நாயகமாய் விளங்குகின்றது. இந்த இடத்தில் மற்றொரு சம்பவத்தை நாம் நினைவூட்டிக்கொள்ள வேண்டும்.

கந்தவேளை நினைத்து அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்னும் இது கன்னியரும் அருந்தவம் புரிந்த சரவணப்பொய்கைக் கரையிலே எம்பெருமான் அவர்களுக்குக் காட்சி கொடுத்து வரமருளினான். அவர்களுக்கு வரமீந்த பின்னர்தான் வேல் வந்தது. அழித்தற்றொழில் முன் நிகழ்வாதலில் இச்சா சக்தியாகிய வள்ளியையும், கிரியா சக்தியாகிய தெய்வானையையும் திருமணம் செய்தலைப் பின் வைக்கிறார். வேலின் வேலை முடிந்த பின்னர் தான் மங்கல காரியம் நிகழப்போகிறது.

**சிறை மீட்கும் வேல்:**

பழந்தமிழ் இலக்கியத்தில் பத்துப்பாட்டும் ஒன்று. இந்நூல் மேற்கணக்கைச் சேர்ந்தது. இந்நூலில் முதலாவது பாட்டு திருமுருகாற்றுப்படை, இதனை முருக பக்தர்கள் நித்திய பாராயணம் செய்து பயனடைகின்றனர். நெற்றிக்கண்ணை காட்டிய போதும் உன்பாடல் குற்றமே குற்றம் என வாதிட்ட நக்கீரர் ஒரு பெரும்புலவர். இவர் கயிலை நோக்கிச் செல்லுங்கால் ஒரு மாலைவேளையில்

ஆற்றங்கரையில் சிவபூசை செய்ய அமர்ந்தார். அச்சிவபூசையில் வழுவக்கூடியதாக அங்குள்ள கற்கிமுகி என்ற பூதம் சதி செய்தது. பின்பு சிவபூசையில் வழுவிய குற்றத்தை வைத்து அதுவே ஒரு மலைமுகத்தில் அடைத்துவிட்டது. முன்னரே பலர் இவ்வாறு அகப்பட்டுக் கிடந்தனர். இருட்குகையை ஒளி குகையாக்கினார் நக்கீரர். முருகனை நினைத்து அவன் வேலினைப் போற்றிப் பாடத்தொடங்கினார். பாட்டுக்கிரங்கிய குமரன் தனது கைவேலினால் அக்குகையை பிளந்தார். நக்கீரர் உட்பட்ட ஆயிரவரும் சிறை விடுவிக்கப்பட்டனர். பூதமும் கொல்லப்பட்டது.

மலைமுகம் சுமந்த புலவர் செஞ்சொல்கொண்டு
வழிதிறந்த செங்கை வடிவேலா

என்ற திருப்புகழ் இவ் வரலாற்றை எடுத்தோதுகின்றது. இங்கே திருமுருகாற்றுப்படையை "செஞ்சொல்" என்று குறிப்பிடுகின்றனர். வேலின் மகிமை சங்க காலத்தில் இருந்தே தமிழகத்தில் உணரப்பட்டு வந்துள்ளது. திருப்புகழில் வேலுக்கு என்று ஒரு பிரிவு இருக்கின்றது. வேல் வகுப்பின் வேல் பெருமை தனித்தெடுத்து புகழப்படுகிறது. இன்றுங் கூட முருகன் அடியார்கள் "வேல் வேல் வெற்றி வேல்" என பக்தி பரவசமாய் ஓதுவதை காணலாம்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவே லுண்டே துணை.

**வெற்றிவேல்:**

புறப்பகையை வெல்வது எளிது. ஆனால் அகப்பகையை வெல்லுவதே மிகக் கடினம். இந்த கடினமான செயலை செய்வதுதான் முருகன் கைவேல். முருகனுக்குரிய பதினாயிரம் நாமங்களில் சிறந்தவை முறையே முந்நூறு, நூற்றெட்டு, பதினாறு என்பனவாம். இவற்றில் உயர்வுற உயர்ந்து நிற்பது ஞானசக்தி என்ற நாமமே யாகும். இதுவே சிறப்பு நாமமும் ஆகும். வேல் என்று இதனையே குறிப்பிடுகின்றோம். முருகப்பெருமான் முன்னிலையிலே சிரத்தின் மேலே கைகூப்பி நிற்கும் போது வேலின் வடிவமே உண்டாகின்றது. இந்நிலையில் பக்தனே

முருகன் கைவேலாக மாறிவிடுகின்றான். கந்தபுராணத்தில் வேல் பல இடங்களில் பல நாமங்களோடு பேசப்படுகின்றது. தனிவேல், சுடர்வேல், வடிவேல், உடம்பிடி, படைகள்நாயகன் என்றும் போற்றப்படுகின்றது

நன்றி மறந்த சூரனின் அடலைக் கெடுத்தும் சேவலும் மயிலுமாக ஆட்கொண்டதும் இவ்வேலே. சூரனின் அரக்க உடம்பு வேலினால் ஞான உடம்பாக மாறியது. சூரனிடமிருந்த கொடுந்தன்மையை மாற்றி அவனையே தூயவனாக்கிவிட்டது. கொடுமையை அழிக்குமேயன்றி இது கொடியவரை அழிக்காது. அதனாற்றான் தனிவேல் எனப் போற்றப்படுகின்றது. காமனை எரித்த நெற்றிக்கண்ணினின்றும் தோற்றுவிக்கப்பட்ட பெருமையும் இதற்குண்டு. அதுவுமன்றிப் பாசஞான பசு ஞானங்களை வடித்து பதிஞானத்தை தருவதும் இதுவே. அதனாலேயே வடிவேல் எனப்பட்டது. மும்மலங்களை நீக்கும் சிறப்பு நோக்கி "வேல்பட்டழிந்தது வேலையும் சூரும் வெற்பும்" என்கிறார் அருணகிரியார். ஐம்புலக் குறும்பையும் இவ்வேல் அகற்றுகின்றது.

பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் வந்து வெறியு மடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே.

அஞ்ஞானத் தழைகளையுண்டு ஐம்புலப் பசுக்கள் வெறித்து திரிகின்றன. அதற்கு மாறாக மெய்ஞ்ஞானத் தழைகளை உண்டு விட்டால் வெறியடங்கிவிடும். அதுவுமன்றி ஞானப்பாலையும் சொரியும். வெறித்து திரிந்த சூரனாதியோரைப் புறங்கண்டது இந்த ஞானவேலே யாகும் திருமுருகாற்றுப்படையில் "எய்யா நல்லிசைச் செவ்வேற் சேய்" என்று குறிப்பிடப்படுகிறது.

**கந்தனே வேல்:**

கருணை செய் கந்தன் வேறு ஞானவேல் வேறு அன்று. அசுர மாயையின்று வேலால் மீட்கப்பட்டபோது வீரவாகுதேவர் போற்றுகிறார். "கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்" என துதிக்கின்றார். ஒளிமயமானமையினாலும், அறுமுக

*வடிவத்தாலும், சிவனிடத்து தோற்றம் பெற்றமையாலும், சத்தியெனும் பெயராலும் வேலே கந்தன் என்கிறார். இதே நிலையிலேயே நாமும் வேலினைப் போற்றி அகப்பகை வீட்டி உய்தி அடைவோமாக என்றும் கூறி இன்றைய உரையைப் பூர்த்தி செய்வோம்.*

**செங்கேழ் அடுத்த சினவடி வேலும் திருமுகமும்**
**பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்**
**கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரனென**
**எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந் தெதிர்நிற்பனே.**



# குன்றமெறிந்தோன்

முழுமதி யன்ன வாறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமலரடியுங் கண்டான் அவன்றவம் செப்பற் பாற்றோ.

*குகநேயச் செல்வர்களே,*

*இன்றைய சொற்பொழிவில் குன்றமெறிந்த கோலக்குமரனைப் பற்றி அறியும் வாய்ப்புப் பெற்றிருக்கிறோம். முருக பெருமான் மும்மலங்களையும் வேரறுக்கும் ஞான சொரூபி: அவனை நினைந்தால் மாயையின் மயக்கமும் கன்மத்தின் தொல்லையும் ஆணவத்தின் வலிமையும் தானாக அகன்று விடும். வேல்பட்டு அழிந்தது வேலையும், சூரும் வெற்பும் என்றார் அருணகிரிநாதர். மும்மல நீக்கத்தில் முதலாவதாக நினைக்கப்பட வேண்டிய மாயையின் அகற்சியைக் காட்டி நிற்பதுவே இன்றைய சொற்பொழிவின் சாரமாகும்.*

*தாரகனுடைய உறைவிடமாய்த் தன்னுட் புகுந்தாரை வாட்டி அழித்தது கிரவுஞ்சம் என்னும் குன்றம். கிரவுஞ்சம் என்பது பறவையாய் நின்று மாயைகள் பல புரிந்து தேவர்களுக்கு இடும்பை செய்த ஒரு அவுணனின் தோற்றமே. இவன் தாரகனுக்கு நெருங்கிய துணைவன். ஒரு காலத்திலே அகத்திய முனிவரை மயக்கத் துணிந்த பொழுது அவருடைய சாபத்தினால் மலையாக நிற்கும் நிலை பெற்றான். தனு, கரண, புவன போகங்களாக விரிந்து நிற்கும் மாயை வினைக்கிடமாகப் பிறக்கும் ஆன்ம உடலை உறையுளாகக் கொண்டிருக்கிறது. வினையே ஒரு தேகம் என்பர் பட்டினத்தடிகள். இங்கே தாரகனை இடமாகக் கொண்டு சஞ்சித வினையாகக் கிரவுஞ்சம் விளங்குகிறது. இந்த கிரவுஞ்சத்திலே ஆட்சி செலுத்துபவன் தாரகனே. வினையிலேயே கிடக்கின்ற நிலை மயக்க நிலை இதனையே மணிவாசகரும் "வினையிலே கிடந்தேனை புகுந்து நின்று போதுதான் வினைகேடன் என்பாய் போல இனையன் நான் என்றுன்னை அறிவித்து என்னை ஆட்கொண்டாய்க்கு" என்று எம்பெருமான் குரு மூர்த்தியாக வந்து ஆட்கொண்ட திறத்தை*

எடுத்துக்காட்டுகிறார். சஞ்சிதவினையே பிறவிக்குக் காரணமானது என்பதும் அதனை அறுப்பது திருவருள் என்பதுஞ் சைவத்தின் பெரும் கொள்கையாகும்.

**அமரர் அவுணர்:**

அமிர்த குணங்களை உடையவர் அமரர். அது அற்றவர்கள் அவுணர். அருள்நெறிப்பட்டவர்கள் அமரர். மருள்நெறிப்பட்டவர்கள் அவுணர். அவுணர்களுக்கும் அமரர்களுக்கும் எக்காலமும் போட்டியே நிலவியது என்பதைப் புராணங்கள் சொல்லுகின்றன. இப்போட்டியில் வெற்றியீட்டித் தருபவன் ஆண்டவன் ஒருவனே. பாதக மலங்களை நீக்க பாதக்கமலங்களை வணங்கி நிற்க வேண்டும். அக்கிரமர்கள் ஒருபோதும் விக்கிரக திருவடிகளை வணங்க மாட்டார்கள். நல்லோரை வாழ்விக்கவும் தீயோரை அழிக்கவும் தான் ஆண்டவன் அருள் வடிவம் எடுக்கின்றான். அந்த அருள் வடிவமே வேல் தாங்கிய குமரனின் வடிவமாகும். அவன் கால் பட்டாலே எமது தலையெழுத்து அழிந்து விடும் என்கிறார் அருணகிரி. அநுபூதியிலும்

கெடுவாய் மனனே கதிகெள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
கடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

என்று பாடி வினை போக்கும் மார்க்கத்தை எடுத்துரைக்கிறார். வினைக்கேற்றபடி பிறவி விதிக்கப்படுகின்றது. விதிப்பவனாகிய பிரமனுக்கு விதி என்ற மற்றொரு பெயருமுண்டு. இந்த விதியின்படியே அவுணர்கள் அமரர்கள் என்ற நிலையில் இருவேறுபட்ட வாழ்க்கையை மேற்கொண்டார்கள். இதனால் போட்டியும் சதா நடந்துகொண்டே இருந்தது. புறத்தினிலே மாத்திரமல்ல எமது அகத்திலேயும் இப்போட்டி எந்நேரமும் நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. திருவருளைத் துணை கொண்டவன் நல்ல பக்கம் திரும்புவான் என்பது வெளிப்படை.

**படை எழுச்சி:**

வேலைத் தனது கைக்கொண்ட முருகப்பெருமான் அம்மை அப்பரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு இலக்கத்தொன்பது

வீரர்களையும், கணநாதர்களையும் இரண்டாயிரம் வெள்ளப் பூதங்களையும் உடன் கொண்டு தேவர்களும், மூவர்களும் சேர்ந்து செல்ல புறப்பட்டார். வாயுதேவன் தேர்ப்பாகனாக அமைந்தான். போருக்குப் புறப்பட்ட காட்சியைக் கண்ட தேவர்கள் அனைவரும் தமக்கு வாழ்வு வந்துவிட்டது என்று ஆரவாரித்தனர். இவ்வாறு சேனையுடன் செல்லும்போது கிரவுஞ்சம் என்ற மலை வழியில் வந்து தடுத்தது. தேவர்கள் நடுங்கினார்கள். அம்மலையின் வரலாற்றை முருகப்பெருமானுக்கு நாரதர் எடுத்துக் கூறினார். அந்த இடத்திலேயே தாரகனுடைய வரலாற்றையும் எடுத்துக்காட்டினர்.

இன்ன வன்றனை அடுதியேல் எளிதுகாண் இளையோன்
முன்ன வன்றனை வென்றிட லெனமுனி மொழிய
மின்னு தண்சுடர் வேலவன் அவற்றினை வினவி
அன்ன வன்றனை முடிக்குதும் இவணென அறைந்தான்.

தாரகனை வென்று விட்டால் சூரனை வெல்லுவது மிக எளிது என்பதை எடுத்துக்காட்டினார் நாரதர். சூரனின் தம்பியை எதிர்ப்பதற்கு முருகப்பெருமானின் தம்பி எனப்படுகின்ற வீரவாகுதேவர் உத்தரவு பெற்று புறப்படுகிறார். தாரகன் யானைமாமுகத்தை உடையவன். ஐம்பொறிகளின் வாயிலாக ஓடி ஆடித்திரியும் மன மாயைக்கு யானையை உவமை கூறுவர். ஐங்கரனை ஒத்த மனம் என்பது திருப்புகழ். யானை அசையும் பொழுது ஒரே நேரத்தில் ஐம்பொறிகளும் அசைகின்றன. அதனால் அடக்கமில்லாத ஒரு கீழ்நிலை குறிக்கப்படுகிறது. பொல்லாங்கு விளைக்கும் நிலை இதுவாகும். தாரகன் எனும் பெயர் தரித்து என்று கூறுவதிலேயே இவற்றை அறிந்துகொள்ளலாம். வஞ்சனையும், தந்திரமும், மந்திரமும் செய்ய வல்லவனாக மாயாவி என்ற அரக்கன் வழங்கினான். இவனே தாரகனின் நண்பனென முன்பு குறிப்பிடப்பட்டது. வீரவாகுதேவர் முதலியோர் பூதப்படைகளுடன் தாரகனை எதிர்த்து மாயாபுரியைச் சென்றடைந்தனர். அங்கு அசுரப்படையுடன் பூதப்படை போர்புரியும் போது இப்போரின் வருகையைத் தெரிந்த அசுரர்கள் சிலர் ஓடிச்சென்று தாரகனின் தாளடியை வணங்கி பின்வருமாறு கூறியருளினர்.

எந்தைமற் றிதுகேள் நும்முன் இமையவர் தொகையையிட்ட
வெந்துயர் சிறையை நீக்க விரிசடைக் கடவுள் மைந்தன்

கந்தனென் றொருவன் வந்தான் அவுணரைக் கடக்கு மென்னா
அந்தர நெறிசெல் விண்ணோர் அறைந்திடக் கேட்டு மன்றோ.

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் மைந்தன் கந்தன் என்ற பெயரைக் கொண்டவன் எனக்கூறுவதால் அவுணர் வெள்ளத்தைக் கடக்க வல்லவன் என்னும் அரியகருத்து புலப்படுகின்றது. விண்ணோர் அந்தரத்தில் செல்பவர் என்பதால் அவுணர்கள் வழி தடுக்கப்பட்டவர்கள் என்பதும், அவர்கள் பலராக இருந்தும், முடிக்க முடியாத ஒரு கருமத்தைக் கந்தனே முடிக்கப் போகின்றான் என்பதும் இப்பாடலின் நயமாக புலப்படுகிறது.

**தாரகன் போர்:**

தாரகன் தன் சேனை வெள்ளத்துடன் ஆர்ப்பரித்து வருவதைக் கண்ட பூதப்படைகளும் எதிராக ஆர்த்தெழுந்தன. மாயப்போர் மும்முரமாக நடந்தது. தாரகன் வீரவாகுதேவரை முதலில் எதிர்த்தான். ஆனால் வீரவாகுதேவர் முருகப்பெருமானை உள்ளத்திலே வைத்துக் கொண்டு போரினை நடத்தினார். தாரகனும் போராடி ஆற்றாது வீரவாகுதேவரின் அற்புதச் சமராடலை வியந்தான். போரறம் நழுவி மாயத்தன்மையால் வாகைசூட மனங்கொண்டான். அவர்களை மயக்கினான். தேரை விட்டு ஓடியவன் போலப் புறமுதுகு காட்டி ஓடிச்சென்றான் இப்படி ஓடுபவன் மீது படையை விடுவது வீரமன்று என்று வீரவாகுதேவர் நினைத்தார். போராடுதலையும் அறமாக கருதி வாழ்ந்தவர்கள் நமது முன்னோர்கள். அறப்போர் செய்வதனாற்றான் சுவர்க்க நிலையை அடையலாம் என்ற கருத்து அவர்களிடம் இருந்தது. போர் என்ற சொல் பொரு என்ற அடியிலிருந்து பிறந்தது. பொரு என்றால் ஒப்பு என்பது பொருள். எனவே போராடல் என்றால் சமநிலையில் நின்று இரு பாலாரும் நிகழ்த்தும் செயலாகும் என்பது பெறப்படுகிறது. வில்லொடு வில்லும், வாளோடு வாளும், வேலோடு வேலும், தேரோடு தேரும், கரியோடு கரியும் என்று இன்ன நிலைகளிலேயே போராடலறம் மேற்கொள்ளப்பட்டது. தாரகன் இவ்வறத்தை மறந்து ஓடி மறைதலும் வீரவாகுதேவர் தொடர்ந்து சென்று கிரவுஞ்சத்துக்குள் நுழைந்து கொண்டார். அவருடன் சென்ற அத்தனை படைகளும் இருள் மண்டிய அக்குகைக்குள் அடைபட்டனர். மீளும் வழி தெரியாது திகைத்து நின்றனர். தாரகன் பெரு மகிழ்ச்சி அடைந்தான். இதைக்

*கண்ட தேவர்கள் மனம் மறுகி ஓடிச்சென்று அறுமுகவனை வணங்கி நடந்தவைகளை கூறினார்கள். பெருமான் அவர்கள் முறையீட்டை ஏற்று*

ஆருமிது கேண்மினம ராடுகளன் ஏகித்
தாரகனை வேல்கொடு தடிந்தவுணர் வைகும்
ஓராண மானகிர வுஞ்சகிரி செற்றே
வீரர்தமை யோரிறையில் மீட்டிடுவன் என்றான்.

*தாரகனைத் தடியவும் கிரவுஞ்ச கிரியை அழிக்கவும் வேல் இருக்கிறது. மாயையின் வலியைக் கெடுத்தலும் வினைத்தொகுதியை அழித்தலும் வேறு எப்படைக்குமில்லாத வேலாகிய ஞானத்துக்கு மாத்திரம் உடையதான செயலாகும். மாயை இருளால் மூடப்பட்டிருக்கும் ஆன்ம ஒளி முருகொளியோடு கலக்கப்பட வேண்டுமானால் வேல்தான் துணைபுரிகின்றது. கற்கிமுகி என்னும் பூதத்தால் சிவபூசையில் வழுவிய நக்கீரர் ஒரு மலைக்குகையில் அடைக்கப்பட்டபோது அந்த மாயை இருளில் அமிழ்ந்தினாரெனினும் திருமுருகாற்றுப்படை பாடி அருள் பெற்றார். அங்கு அடைபட்டவர்களை காப்பாற்றியது அவன் திருக்கைவேலாகும். நமது உடம்புதான் மாயாபுரிக் கோட்டையாகும். இது மிகப் பொல்லாதது. இறையொளியைத் தரிசிக்க விடாமற் பந்த பாசங்களில் மூழ்க வைப்பது இதுவே.*

"அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நல்தா னிலாத சிறியேற்கு"

*என்று மாணிக்கவாசக சுவாமிகள் உடம்பாகிய இந்தமாயையை விளக்குகின்றார்.*

**தாரகன் முருக சம்பந்தம் பெறல்:**

*மனத்தினும் விரைந்து செல்லக் கூடியதாக வாயு பகவான் தேரைச் செலுத்த பூதகணங்கள் சூழ்ந்து செல்லப் போருக்கு புறப்பட்டார் முருகப்பெருமான். அங்கே பூதப் படைகளுக்குப் புதிய உற்சாகம்*

ஏற்பட்டது. இப்படைகளைக் கண்ட தாரகன் கடும் கோபம் கொண்டான். அவைகளைத் துரத்திக் கொண்டு வந்து முருகன் திருமுன்னிலையை அடைகின்றான். போர்க்களத்தில் தாரகன் தன் கண்களால் முருக வேளின் அருள் முகங்களைக் காணும் பாக்கியம் பெறுகின்றான். மயக்குறு முகங்களை காணும் பாக்கியம் பெறுகின்றான் மயக்குற உலகக் காட்சிகளைக் காண்பவர் அறியாமை என்னும் இருளில் மயங்குவர். தெய்வத்தை காண்பவர் மாசறு காட்சியராய் விளங்குவர்.

கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னை
கண்காள் காண்மின்களோ

என்பது அப்பர் சுவாமிகளின் வாக்கு. எங்கள் கண்களைத் திருக்கண்கள் ஆக்க வேண்டுமேயானால் ஆண்டவன் தரிசனத்தாற்றான் அது முடியும். அவன் திருவடியைக் காணாத கண்களை கலநீர் சொரிந்த அழுகண் என்றும் திருவடியைக் கண்ட கண்களை மிக்க ஒளி மேவு கண்கள் என்றும் வள்ளலார் குறிப்பிடுகின்றார். கொடியவன் ஆனாலும் தாரகன் எந்தை கந்தவேளின் திருமேனியைக் காணும் வாய்ப்புப் பெற்றுவிட்டான். அதனால் அவன் கண்கள் ஒளிமேவு கண்கள் ஆகிவிட்டன.

முழுமதி யன்ன ஆறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமல ரடியுங் கண்டான் அவன்தவம் செப்பற் பாற்றோ.

என்கிறார் கச்சியப்பர். இப்பாடலே சொற்பொழிவின் தொடக்கத்திலும் காட்டப்பட்டது. முருகப்பெருமானைத் தியானிப்பதற்கு மிகச்சிறந்த பாடல் இதுவாகும். பூரண சந்திரனை ஒத்த ஆறு திருமுகங்களையும் பன்னிரு கண்களிற் பொழியும் திருக்கருணையையும் வேலாயுதத்தையும் ஏனைய ஆயுதங்களின் சிறப்பையும் பன்னிரு திருக்கரங்களையும் இரத்தினமணித் தண்டையொலிக்கும் திருவடி மலரையும் பார்த்தான் என்றால் அவனுடைய தவத்தின் தரத்தைக் கூறமுடியுமோ என்பது பாடலின் பொருளாகும். நாம் காண வேண்டியதும் அடையவேண்டியதும் அவனுடைய செழு மலரடியே யாகும். எனவே காண்டல் என்ற முதற்படியைத் தாண்டிய தாரகனின் தவம்

சிறந்தது என்பது சிவாசாரியார் கருத்து. இறைவன் பேரருள் வடிவைத் தரிசிப்பது ஞானிகளுக்கும் அரியது. அவன் வழங்கும் அருள் ஒளியைக் கொண்டுதான் அவனருள் வடிவை காணலாம். அவனருளாலே அவன்தாள் வணங்கி என்கிறார் மணிவாசகர். மனம் அலை அடங்கி ஒடுங்குமிடமே திருவடி. செருக்கற்ற இடம் திருவடி என்பர். எனவே கடவுட்காட்சி பெறுகின்றவர் முடியிலிருந்து அடியை கண்டாற்றான் பயன் பெறுவர். சிதம்பர நடராசனைத் தரிசித்த அப்பரடிகள் முடியிலிருந்து அடிவரை கண்டார். கண்டவுடன் மனிதப்பிறவியை போற்றுகிறார். இங்கே தாரகன் பன்னிரண்டு கண்களைக் கண்டானே யன்றி நெற்றிக்கண் ஆறையும் காணவில்லை. இவை மேல் நோக்கிய கண்கள் ஞானிகளுக்கு மாத்திரந்தான் இக்கண்கள் புலப்படும். ஏனென்றால், இறைவன் ஞானவடிவாய் உள்நின்றுணர்த்த காண்பவர் ஞானிகள்:

ஆனா வறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்.

என்பது சாத்திரம். எல்லாவற்றிலும் மேலாகச் செழுமலரடியையும் காணும் பெறு பெற்றான் தாரகன். மலரடி என்பது அன்பர்களினது உள்ளங்களிலே மலருகின்ற அடியாகும். அது அரக்கனுடைய உள்ளத்திலே மலராவிட்டாலும் புறத்திலே கண்களாற் காணக்கூடியதாக வந்துநிற்கிறது. சிவபெருமானின் தூக்கிய திருவடி ஆன்மாக்களுக்கு அருளலைக் குறிக்கிறது. “அரனடி என்னும் அனுக்கிரகம்” என்பது திருமந்திரம். “மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்” என்று போற்றுகிறார் சேக்கிழார். அன்பர்களின் உள்ளத்திலே மலருகின்ற போது உள்ளொலி கேட்கும். அது ஞானிகளுக்கு மாத்திரம் கிட்டும். ஆனால் அரக்கனாக இருந்தும் புறக் காட்சி சிறந்து விட்டது அவன் செய்த நல்வினைப் பயனாலேயன்றோ.

**தாரகன் அமைதி நிலை:**

முருகவேளின் அருளொழுகு தனி வடிவைகக் கண்ணுற்ற தாரகன் உள்ளம் அமைதி நிலை அடைந்து அறிவு வடிவைப் பெறுகின்றது. வஞ்சனையுடைய மனத்தினனாகிய தாரகன் இவ்வாறு ஞான மூர்த்தியாய குமரக் கடவுளின் திருவுருவனைத்தையும் நோக்கி அதிசயமடைந்து

*“இப்பாலகன் நம்மீது போர் செய்ய வந்தானென்றால் கற்பனை கடந்த ஆதிக் கடவுளே போலும்” என்று அமைதி பெறுகின்றான்.*

தற்பம துடைய சிந்தைத் தாரகன் இனைய வாற்றால்
சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு வனைத்தும் நோக்கி
அற்புத மெய்தி நம்மேல் அமர்செய வந்தா னென்றால்
கற்பனை கடந்த ஆதிக்கடவுளே இவன்கொல் என்றான்.

*என்று கச்சியப்பர் அழகாக அனுபவிக்கின்றார். “ஆதிக்கடவுளே” என்று தாரகன் அற்புத விம்மிதமடைகின்ற போது அவனையறியாமல் செருக்கு அடங்குகிறது. ஆண்டவனையே அழைக்கின்ற ஒரு நிலையும் வந்து சேருகின்றது. இந்த அமைதியோடு முருகனோடு பேச நினைக்கிறான். சீற்றமிருந்தாலும் அறிவுத்தன்மை பளிச்சிடுகின்றது.*

நாரணன் தனக்கும் மற்றை நான்முகன் தனக்கும் வெள்ளை
வாரணன் தனக்கு மல்லால் மதிமுடி யமல னுக்கும்
தாரணி தனிலெ மக்கும் சமரினை யிழைப்ப விங்கோர்
காரண மில்லை மைந்தா வந்ததென் கழறு கென்றான்.

*குழந்தாய், திருமாலுக்கும் நான்முகனுக்கும் வெள்ளை யானையையுடைய இந்திரனுக்கும் எமக்கும் பகையுண்டு. ஆனால் சிவபெருமானுக்கும் நமக்கும் பகையில்லையே. ஆகவே சிவகுமாரனாகிய நீ போருக்கு வந்த காரணம் யாது? கூறுக என்பது இப்பாடலின் பொருளாகும். அனுக்கிரக சக்தி தான் முருகன். சிவனும் அனுக்கிரக சக்தியே. எனவே முடிவில் அவுணர்களாகிய தாமும் அனுக்கிரகத்திற்குரியவர்களேயென்பது காட்டப்படுகிறது. இவ்வாறு சமாதானம் பேசுகின்றான் தாரகன்.*

**செவ்வேளின் அருட்கூறு:**

*தாரகன் இவ்வாறு மதிமுடியமலனின் குமரனை “மைந்தா” என விளித்து உரிமைக்குரல் காட்டி நின்ற போது குமரன் எடுத்து மொழிகின்றான். இமையவரைச் சிறைவைத்து வருத்துகின்ற அவுணர்களைத் தண்டித்து வெற்றிபெறவே ஈசன் தன்னை விடுத்ததாக கூறுகின்றான் குமரன். அடியவர்க்கெளியவனாகிய இறைவன் தன்னை மறந்தவர்களையும் மன்னிப்பான். ஆனால் தன்னடியார்களை நிந்திப்பவர்களை கண்டித்தே தீருவான். வெய்யவன் தரும் வெப்பத்தைத் தாங்குகின்றோம். ஆனால் வெய்யவனுடைய வெப்பத்தை ஏற்று நிற்கும் மணலின் சூட்டை*

தாங்க முடியாமல் இருக்கிறது. இதுதான் இறைவன் அடியார்க்கு அருள் புரியும் நிலையாகும். ஆகவே அடியவர்களின் அருள் நிலை மேலானது. அது ஆண்டவனே ஏற்படுத்தி வைத்த நிலை.

**தாரக வதம்:**

முருகன் திருக்காட்சியால் தெளிவு பெற்ற தாரகன் விதியின் காரணமாக மயக்கநிலை எய்துகின்றான். மீண்டும் முருகனை எதிர்க்கும் நிலைக்கு வருகிறான். தாரகன் ஏவும் கணைகளைச் செவ்வேற்பெருமானின் கணைகள் அழிக்கின்றன. ஒரு கணம் அகந்தை மேலீட்டால் தாரகன் சீறி, சங்கரன் கொடுத்த தொல்படையை ஏவுகின்றான். கந்தவேள் அது கண்டு தந்தையை நினைந்து தனது செங்கையை நீட்டி அப்படியே பற்றிக்கொண்டார். அது எவ்வாறு இருந்தது என்பதை கந்தபுராணத்திற் பார்ப்போம்.

கந்தவேள் அனையது கண்டு தந்தையைச்
சிந்தையில் உன்னியோர் செங்கை நீட்டியே
அந்தவெம் படையினை அருளில் பற்றினான்
தந்தவன் வாங்கிய தன்மை யென்னவே.

இதனால் மனங்கலங்கிய தாரகன் மறைந்து நின்று மாயப்போராற்ற முனைந்தபோது முருகப்பெருமான் வேலைச் செலுத்தினார். அவ்வேலானது தாரகன் மார்பென்னும் தடம்பெரு வரையைக் கிழித்துக்கொண்டு அப்பாற் சென்று கிரவுஞ்சகிரியிற் பட்டு ஊடுருவிச் சென்று வீரமும் புகழும் தன்பால் சேர்த்துக் கொண்டு இரத்தத்திலே நீராடி மீண்டு வந்தது. தாரகனையும் கிரவுஞ்ச கிரியையும் ஏககாலத்தில் ஒரே கணத்தில் வீழ்த்தியது முருகன் கைவேல்.

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது அருளென்னும் - கத்தியினால்
மோகக் கொடிஅறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடிஎழுங்காண் என்று.

என்ற சாத்திரக் கருத்து அருள்ஞான வேலின் தூய தன்மையையும் தொன்மையையும் வடிவத்தையும் விளக்குகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலக் கோட்டைகளில் மாயைக் கோட்டை அழிந்த

செய்தியை இன்று நாம் அறிந்தோம் தாரகனையும் கிரவுஞ்சத்தையும் ஒருசேர அழித்து,

> மீண்டிடு சீற்ற வைவேல் வெற்பினுள் துஞ்சு கின்ற
> ஆண்டகை வீரர் தம்மை ஆயிடை எழுப்பி வான்போய்
> மாண்டகு சங்கை தோய்ந்து வாலிய வடிவாய் ஐயன்
> தூண்டிய கரத்தில் வந்து தொன்மைபோல் இருந்ததம்மா

என்று வேலின் தூய தன்மை நன்கு கூறப்படுகிறது. எந்தை குமரன் எறிந்த தனிவேற் படையால் தாரகன் மாண்டுவிட்டான் என்ற செய்தியைச் சில தூதர்கள் அவன் மனைவிக்குச் சென்று செப்பினர். அவள் மிகத் துன்புற்றதுமன்றி அவுணன் மனைவியாக இருந்தாலும் கற்பின் மேம்பாட்டைக் காட்டி எரிமூட்டி உடன்கட்டை ஏறினாள். தன் கணவனுடைய உடம்பின் மேல் விழுந்து நீ இறந்தாலும் கங்கைச்சடையான் கையிலையே செல்கின்றாய் என்றும் அவனால் நீ ஆளப்பட்டவன் என்றும் கூறிப் போற்றிய நிலை, நினைத்தற்குரியது. கணவன் சிறுமையைத் தன் கற்பு நெறியினாற் பேணிக் காத்தபெருமை சவுரி என்ற அந்த மங்கை நல்லாளுக்கு உண்டு.

**தேவர்கள் மகிழ்ச்சி:**

மாயையின் வலையிலிருந்து ஆன்மா விடுவிக்கப்பட்டது போலத் தேவர்கள் தாரகன் பிடியில் இருந்து மீட்கப் பட்டார்கள். திருமால், பிரமன், இந்திரன் முதலியோரும் முனிவரும் ஏனையோரும் ஆர்ப்பரித்தனர். ஆடிப்பாடிக் குமரனைப் போற்றி அங்கைகளை உச்சிமேற் குவித்து, பூமாரி பொழிந்து அவனைச் சூழ்ந்து நின்று பாடி நின்றார்கள் பலர். பலமுறை பணிந்து நின்றார்கள் பலர். மகிழ்ச்சி என்ற கடலிலே மூழ்கினார்கள் இன்னும் பலர். அந்நேரத்தில் கிரவுஞ்சகிரிக்குள் அடைக்கப்பட்டு கிடந்த தேவர்கள் மயக்கம் நீங்கி வெளிப்போந்து முருகப்பெருமான் திருவடிகளை வணங்கி நின்றார்கள். வீரவாகுதேவர் முதலியவர்களை முருகன் ஆசீர்வதித்து நின்றபோது அவர்கள் அனைவரும் தாம் பெருமான் திருவடியில் இருந்தது போன்று இன்ப அனுபவத்தையே பெற்றுக்கொண்டு அம்மலைக்குகைக்குள் இருந்ததாக செப்பினர். தாரகனிடமிருந்து தான் பற்றிக்கொண்ட சிவப்படைக் கலத்தை வீரவாகுதேவரிடம் கொடுத்து மேலும் அருள்புரிந்தான்

முருகப்பெருமான். இத்துடன் இன்றைய சொற்பொழிவை நிறைவு செய்து கொள்ளுவோம்.

எங்க ணும்பணி வதனங்கள் எங்கணும் விழிகள்
எங்க ணும்திருக் கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங்க ணும்திருக் கழலடி எங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே.

"உயிர்கள் உய்தியடைய" வேண்டுமென்று எடுத்த அவதாரமே முருக அவதாரமாகும். ஐந்து திருமுகங்களும், பத்து திருக்கரங்களும், போதாதென்று ஆறு திருமுகமும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு தோன்றினான்.

சிவத்தமிழ் இன்பம்

# ஞானந்தான் உருவாகிய நாயகன்

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளிவாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்

சைவப் பெருமக்களே,

இன்று வெள்ளிக்கிழமை தினமாகும். இத்தினத்திலே ஞானந்தான் உருவாகிய நாயகனுடைய இயல்பை சிங்கமுகாசூரனோடு சேர்ந்து காண்பதற்கு நாம் கூடியிருக்கிறோம். அத்துடன் இன்று நாம் அறிய இருப்பது சூரனுடைய அமைச்சியலாகும் "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானுங் கெடும்" என்ற வள்ளுவர் வாக்குப்படி அறந்தப்பிய அமைச்சரவையே சூரபன்மன் அழிவுக்கு முதற் காரணமாக இருந்தது என்பது வெளிப்படை. வெள்ளிக்கிழமைகளில் மனத்தூய்மை, வாக்குத்தூய்மை, செயற்றூய்மை முதலியவற்றை ஏற்படுத்த வேண்டும் என்று பலர் விரும்புகிறார்கள். ஆனால் எல்லா நாட்களிலும் இதே நிலையில் வாழ வேண்டியது சைவ மக்களின் பெருங்கடனாகும். என்றாலும் வாரத்தில் ஒரு நாளையாவது புலனடக்கத்துக்கு ஒதுக்கி வைத்தார்களே! அதை நாம் போற்றத்தான் வேண்டும். இறை சிந்தனையுடன் ஒழுக்க வாழ்வும் இணைந்துள்ளது. அசுரசக்தி படைத்த சுக்கிரன் இந்நாளுக்கு உரியவன். இதனால் சுக்கிரவாரம் என்றும் அழைக்கின்றோம். அசுரகுருவின் சேர்க்கைகள் உள்ளத்தை மாசுபடுத்துவன. ஒழுக்கக்கேடுகளும் இதனால் விளைகின்றன. இதனைத் தடுக்கவே இந்த ஒரு நாளையாவது தெய்வத்திருவொளியோடு இணைக்க வேண்டிய நாளாக அமைத்து வைத்தனர். நல்லவற்றை நினைக்கவும், இனியவற்றை பேசவும், தக்கனவற்றை செய்யவும் விடாது அசுரசக்தி தடுக்கிறது. ஆனால் தெய்வ சக்தியை வளர்க்கக்கூடிய தியானமும் வழிபாடும் இருந்தால் அசுரசக்தி தானாகவே மறைந்துவிடும்.

*இதற்காகவே நாம் விரதம் இருக்கின்றோம். முருகனுக்குரிய விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதமும் தலை சிறந்ததாகும்.*

**அறியாமை:**

*இந்த உலகம் ஐம்பெரும் பூதங்களின் பரிணாமம். எமது அறியாமையினால் உலக வாழ்வு இன்பம் போல் தெரிகிறது. ஆனால் முற்றிலும் துன்பமயமானது. துன்பத்தையே இன்பமாக எண்ணி மயங்குவதற்கு காரணம் அறியாமையையேயாகும்.*

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் மிலர்

*என்றார் வள்ளுவர். ஞான உணர்வு வழியால் உணரப்படுகிற பொருள் பரம்பொருள். உலகக்காட்சி தெரிகின்றவரை கடவுட்காட்சி தெரியாது. கடவுட்காட்சி தெரியத்தலைப்பட்டார்க்கு உலகக்காட்சி தெரியாது. உலகக் காட்சியில் மயங்கி நிற்கும் நிலைதான் அறியாமை. இதை ஆணவமென்று சாத்திரமும்; சூரன் என்று புராணமும் குறிப்பிடுகிறது. இந்திரியவய மயங்கி உழலும் எல்லாரும் சூரனுடைய வாழ்க்கையினரே. புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புகளாய் பொருந்துவது கன்மம். மண் முதல் மாயாதத்துவம் முடியக் காணப்படுவது மாயை. சுட்டி அறிவதாகிய விபரீத உணர்வைப் பயப்பது ஆணவம். அவ்வாணவ மலமே ஆன்மாக்களோடு அநாதியே பற்றி உள்ளது. இதனை மூலமலம் என்று சொல்வர். கன்மமும் மாயையும் தனுகரணாதியோடு ஆன்மா தோன்றிய பின் வருவனவாம். மூலமலத்தை வேரறுக்கவே ஐந்தொழிலை ஆண்டவன் மேற்கொள்ளுகின்றான். மூலமலத்தை வேரறுத்த திருவிளையாடலே சூரப்பன்மன் வதையாகும். சங்கார மூர்த்தி முருகன் சூரனை முருக்கித் தன்னோடு சம்பந்தப்படுத்துகின்றான். சேவலும் மயிலுமாக சூரன் முருக சம்பந்தம் பெற்று எமது வந்தனைக்கு உரியவனாகின்றான்.*

**திருச்செந்தூர்:**

*தாரகாசூரனை அழித்தபின் கந்தவேட் பெருமான் தேவர் முதலியோர் துதிக்க அலைவாய் என்னும் திருச்செந்தூரில் தங்கி அருளோடு வீற்றிருந்தார். சூரசங்காரத்தின் பொருட்டு வீரவாகுதேவரை*

முதலிலே தூது அனுப்பிவிட்டுப் பெருமான் தங்கியிருந்த தலம் இதுவாகும். கடற்கரையில் இயற்கை அழகும் எல்லார் கண்களையும் கருத்துக்களையும் ஒருங்கே கவரவல்லதாய் விளங்குகின்றது. ஆறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடாக அமைந்துள்ளது. கலாதிட்டான சேத்திரமென்று இதனைப் போற்றுவர். இங்கே நினைவுகளாகிய அலைகள் வந்து இறைவன் திருவடிகளில் ஓய்ந்து ஒடுங்கி விடுகின்றன. அதனாலேயே அலைவாய் என்று மற்றொரு பெயர் இதற்கு ஏற்பட்டது. அதாவது பிறவிப் பெருங்கடலின் துறைமுகப்பட்டினமாக இது கருதப்படுகிறது. கடலைத் தாண்ட உதவுவது தோணி, பிறவிப் பெருங்கடலில் கரை காணாது கலங்கும் ஆன்மாக்களுக்கு முருகன் திருவடியே சிறந்த தோணி

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

என தெய்வப்புலவர் கூற்றும் ஈண்டு நினைக்கத்தக்கது. தன்னைச் சிந்திக்கும் அடியவர்களைத் தனது திருவடியாகிய ஓடத்தைக் கொண்டு பிறவிப் பெருங்கடலை கடக்குமாறு செய்து முத்திக்கரை சேர்ந்து அருளுவதனால் முருகப்பெருமானை ஓடக்காரன் என்று அருணகிரியார் குறிப்பிடுகிறார். வேறொரிடத்தில்

அலை முகம் சுமந்து சினை முதிர்ந்த சங்கம்
அலறிவந்து கஞ்ச மலர்மீதே அளிகலந் திரங்க
இசையுடன் துயின்ற அரிய செந்தில் வந்த பெருமாளே

என்ற திருப்புகழில் மேற்காட்டிய கருத்து பொதிந்து கிடக்கிறது.

**வீடு பேறு:**

பிறவிக்கடலைத் தாண்டுவது தான் வீடுபேறு. முத்திக்கரை என்பதும் இதுவே. விடு என்ற அடியிலிருந்து வீடு என்ற சொல்லும், பொருள் என்ற அடியிலிருந்து பேறு என்ற சொல்லும் பிறந்தன. விடு என்றால் பந்த பாசங்களை விடுதல் என்றும், பெறு என்றால் திருவடியை பெறுதல் என்றும் பொருள் விரிகிறது. தந்தது உன்றன்னை என்கிறார் மணிவாசகர். இறைவன் தந்தது திருவருட்பேறு. எம்மிடம் இருந்து அவன் பெற்றது எமக்கு வேண்டாத ஆணவம் முதலிய பாசங்கள்.

அவன் பெற்றது என்றால் அவற்றை நீக்கி விட்டான் என்பதே பொருள். "சித்த மலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்பது இதனைக் காட்டுகிறது. எனவே மலநாசம் ஏற்பட வேண்டுமானால் உள்ளத்தில் முருகனை எழுந்தருளுவிக்க வேண்டும்.

ஊரிலான் குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.

முருகன் ஒருவனே திருவருளும் குருவடிவும் சேர்ந்த கோலத்தினன். அவனை உள்ளத்திற் தரிசித்தால் மகமாயை விலகிவிடும். அவனுடைய திருக்கைவேல் ஞானம் நல்கி நிற்கும். இந்த ஞானத்துடன், அனுபவப்பட்டவர்களுக்கு முருகன் திருக்காட்சி அருளுவான். குமரனே அனுபவப்பொருள். ஆனால் படைப்பு, இடம், நாமங்களுக்கு அப்பாற்பட்டவன். அடியார்களுக்கு எளியவனாவான். இச்சிறப்பையே கந்தபுராணத்தில் பல இடங்களிலும் கச்சியப்பர் காட்டுகிறார்.

**ஈன்று புறந்தருதல்:**

காசிப முனிவருக்கு மாயையின் சேர்க்கையால் பிறந்தவர்களே சூரன் முதலிய அவுணர்களாவர். காசிபருவுடைய மனைவியர் பதின்மூன்று பேர். அவருள் அதிதி பெற்ற மக்கள் தேவர்கள். திதியின் மக்கள் தைத்தியர்களாவர். சூராதி அவுணர்கள் தைத்தியர் மரபில் வந்தவர்கள். இவர்கள் மாறுபட்ட குணங்களை மேற்கொண்டமையால் மாற்றாராக விளங்குகின்றனர். சமம்,தமம் முதலிய அமிர்த குணங்களைக் கொண்ட தேவர்களே மேலானவர்களாகவும் கொலை, களவு, காமம் முதலிய நச்சு குணங்களைக் கொண்ட அவுணர்கள் கீழானவர்களாகவும், புராணத்தில் பேசப்படுகின்றனர். தந்தையின் சொல்லை மீறி மாயையாகிய தாயின் சொல்லை கேட்டு நடந்தமையே அவுணர்களின் அழிவுக்கு காரணமாகும். மாயையானவள் தனது மக்களை உலோகாயுத நெறியில் நின்று மேன்மை அடைய புத்தி கூறினாள். அன்னை தான் குடியிருந்த கோயில். தந்தை உபதேசம் செய்து வாழ வைப்பவன். ஈன்று புறந்தருதல் தாயின் கடன். சான்றோனாக்குதல் தந்தையின் கடன். ஆனால்

*காசிபருடைய நற்சிந்தனைகளை மாயை தடுத்துவிட்டாள். அதனால் மக்கள் தவறான வழியில் செல்ல நேரிட்டது. காசிபர் கலங்குகிறார்.*

அல்லவை புரியா ரேனும் அறிவினற் பெரியா ரேனும்
எல்லவர் தனக்கும் நண்பாய் இனியவே புரிதற் பாற்றோ
பல்லுயிர்த் தொகைக்கும் இன்பம் பயந்திடு மதிகண் டன்றோ
புல்லிய கமல மெல்லாம் பொலிவழிந் திட்ட வன்றே.

*எல்லா உயிர்களுக்கும் இன்பத்தை தரும் குளிர்ந்த சந்திரனைக் கண்டு தாமரைகள் மாத்திரம் குவிந்து சுருங்கிக் கொள்கின்றன. ஆகவே எத்துணை பெரியவராக இருந்தாலும் எல்லோருக்கும் நண்பராக இருந்து மகிழ்ச்சியைத் தர இயலாது என்பதை இப்பாடல் காட்டுகிறது. இவ்வாறு காசிபர் நினைந்து பின்பு தமது மைந்தர்களை அழைத்து உபதேசம் செய்கின்றார்.*

**காசிபர் உபதேசம்:**

*சூரபன்மன் முதலிய மூவரும் தமது இது முதுகுரவராகிய காசிபரையும் மாயையினையும் அடிதொழுது வணங்கி தாங்கள் செய்ய வேண்டும் கருமம் என்ன என்று வினாவினார்கள். அது கேட்ட காசிப முனிவர் "மைந்தர்களே! அரிய மாதவ நெறியில் நீவீர் நிற்பீராக" எனக்கூறி மேலும் செப்புகிறார்.*

சான்றவ ராய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலா மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி யாரு யிர்த்தொகை
வான்றிதழ் தளையெனன் வகுப்ப ரன்னவே

*பெரியோர்கள் ஓதி உணரும் வேதாகமங்களால் உணர்த்தப்படும் பொருள்கள் மூன்றாகும். அவை பதி, பசு, பாசம் என்பன. இம்முப்பொருளும் அநாதியானவை. ஐந்தொழில் இயற்றும் சிவமே பதி. மும்மலப்பிணிப்புடையனஉயிர், ஆணவம், கன்மம், மாயை மூன்றும் மலங்கள். இவற்றை உணர்ந்து தவத்தினில் நின்று பதியை வழிபட்டால் விரும்பிய எல்லா பேறுகளும் அடையலாம் என்று உபதேசம் செய்தார் காசிபர். அடுத்து மார்க்கண்டேயருடைய ஒப்புயர்வில்லாத் தவத்தின் பெருமைகளையெல்லாம் எடுத்துக்*

கூறினர். தவத்தினால் யமனையும் வெல்லலாம் என்ற சிறப்பு காட்டப்பட்டது. தமது மக்களையும் மார்க்கண்டேயரைப் போல அருந்தவம் செய்து நிரந்தர வாழ்வு பெற்று அமைய வேண்டும் என ஆசீர்வதித்தார். ஆனால் தவமும் கைகூடுவது தவம் உடையாருக்கே அன்றி மற்றையோருக்கு இல்லை. “ஒண்ணாத்திறலும் உகந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும்” என்ற குறட்பாவுக்கு இயைய பெருமை பெற்றவர்கள் பல முனிவர்கள். “கூற்றங்குதித்தலும் கைகூடும் நோட்டலின் ஆற்றல் தலைப்பட்டவருக்கு” என்பதற்கியைய மார்க்கண்டேயர் காலனை வென்றதும் எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் மாயை இந்த அறிவுரைகளை தடுத்து உலகியல் வாழ்வை தன் சிறுவர்களுக்கு உணர்த்தி நிற்கின்றாள். மாயையின் உபதேசமும் சுக்கிராச்சாரியாருடைய உபதேசமும் சூரபன்மன் ஆகியோருக்கு ஊக்கத்தை கொடுத்தது. தேவர்களை வெல்ல வேண்டும், சிறைப்படுத்த வேண்டும், ஏவல் கொள்ள வேண்டும் என்ற உபதேசமும் அவுணர்களுக்கு ஊட்டப்பட்டது. குற்றங்களை நீக்க வேண்டியவர் குரு. ஆனால் குற்றங்களைச் செய்யும்படியாகத் தூண்டிவிட்டிருக்கிறார் இந்தக் குரு. இதனாலேயே சூரபன்மன் ஆதியோர் அழிவுப் பாதையில் தள்ளப்பட்டனர்.

**அசுர நாட்டின் நிலை:**

சூரனை எதிர்த்து போரிடுவதற்கு முன்பு அவனுடைய மனக்கருத்தை அறிவதற்காக வீரவாகுதேவரை அறுமுகப்பெருமான் தூதராக அனுப்புகின்றார். வீரமகேந்திரபுரிக்கு தூதாக செல்லுகின்றார் தேவர். சென்றவர் சூரன் அரசு புரியும் வீரமகேந்திர நாட்டைத் தன் கண்களால் காண்கிறார். கச்சியப்பசிவாச்சாரியர் இந்த காட்சியை வெகு அழகாக சித்திரிக்கிறார்.

நாடி மேலெழுத் தசையிலா துலறியே நரையாய்க்
கோடு பற்றிமூத் தசைந்திடு வோரையுங் கூற்றால்
வீடு வோரையும் பிணியுழப் போரையும் மிடியால்
வாடு வோரையுங் கண்டிலம் இதுதவ வலியே.

வீரமகேந்திரபுரியில் நரம்புகள் மேலெழுந்து சதைகள் வற்றி நரைத்து கிழப்பருவமுற்று நடுங்குவோர்களையும், இறந்து

போகின்றவர்களையும், நோய்வாய்ப்பட்டவர்களையும் வறுமையால் வாடுகின்றவர்களையும் காண முடியாது. இதற்கு காரணம் தவ வலிமையாகும் என்பது இப்பாடலின் பொருள். இவ்வொரு பாடலின் வாயிலாக சூரனின் நாட்டின் நிலை நன்கு புலப்படுத்தப்படுகிறது. மக்கள் மூப்படைவதில்லை. எனவே என்றும் கட்டமைந்த உடலோடு இளமையாக இருக்கிறார்கள் என்பதும் இறப்போர் இல்லை என்பதும் அவுணப் பெருக்கம் அதிகரிக்கிறது என்பதும் பிணியில்லை எனவே அக்கிரமங்களை எச்சந்தப்பதிலும் ஆற்றும் ஆற்றல் உள்ளவர் என்பதும் வறுமை இல்லை என்பதால் எந்நேரமும் உண்டு கழிப்பவர் செருக்கு மிக்கவர் என்பதும் புலப்பட வைத்தார். மூப்பும் இறப்பும் நோயும் வறுமையும் ஒரு நாட்டின் நாட்டு மக்களின் நன்னெறியையும் நன்னோக்கையும் நிர்ணயிப்பன. இதனால் மக்கள் தருமம் என்றொரு பொருள் உள்ளது என நினைந்து அடக்கமும் பணிவும் உடையவராய் வாழ்வர். இவர்களை வீடு பேறுக்குரியவர் என்பது தெளிவாகின்றது. மூப்பு, இறப்பு, நோய், வறுமை இல்லை எனில் தருமம் என்றொரு பொருள் அங்கு வளரவோ பண்பை வளர்க்கவோ முடியாது. நாட்டையும் மக்களையும் தீ நெறிக்கேயுய்த்து அழித்துவிடும். ஒரு நாட்டின் சிறப்பை அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை கொண்டு அறியலாமே தவிர நிலவளங்களைக் கொண்டு அறிய முடியாது. அநுமான் சீதையைத் தேடிக் கொண்டு இலங்காபுரிக்கு வருகின்றான். இலங்காபுரியின் இயற்கை அழகுகள் அநுமான் கருத்தை கவருகின்றன. ஆனால் இலங்காபுரி மக்களின் பண்பு நிலைகள் அந்நாட்டின் பலவீனத்தையும், அழிவையும் புலப்படுத்துகின்றன. மிருகசக்தி மனிதன் இடத்தில் உண்டாகும் போது அது மனித சமுதாயத்தையே அழிக்கும் ஒரு அறிகுறியாகும். இலங்காபுரியில் அநுமான் கண்ட மக்கள் நிலையைக் காண்போம்.

> அளிக்கும் தேறலுண்டு ஆடுனர் பாடுன ராகி
> களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்

இது அனுமானுடைய கூற்றாகும். இலங்காபுரி மக்கள் வெறியாட்டம் ஆடுகிறார்கள். கவலையற்றவர்களாகவும் ஆடுதல், பாடுதல் போன்ற குதூகல நிகழ்ச்சிகளில் ஈடுபடுபவர்களாகவும் விளங்குகின்றார்கள் என்பதும் உணர்த்தப்படுகின்றன. கவலை தெரியாத மக்கள் என்பதால் தருமம் உணரும் பெற்றியில்லாதவர்கள் என்பதும் புலப்படுகின்றது.

**வீரவாகுதேவர் தூது:**

*தேவர்களும் இந்திரன் மகன் சயந்தனும் மகேந்திர சிறையில் கடும் துயர் எய்தினார்கள். அவர்களைக் காக்க அறுமுகத்தமலன் திருவருள் கொண்டு சயந்தன் கனவிற்றோன்றி "வீரவாகுவாாம் தூதனை யாம் இங்கு விடுத்தாம் அவன் சூரன் மைந்தனையும் மற்றும் பலரையும் தொலைத்து மகேந்திரபுரியையும் அளித்து நீறாக்கி மீளுவான்". அதன் பின்பு "சூரனையும் அவுணர்களையும் யாம் வந்து அழித்து நின்னை வானவருடன் சிறை நீக்குவேன் உனது துன்பத்தை விட்டுவிடு" என்று உரைத்தருளி மறைந்தார். அவ்வாறே வீரவாகுதேவரும் அமலன் அருளால் சயந்தன் சிறைத்தளம் சென்று நேரில் கண்டு ஆறுமுக ஐயனுடைய தூதன் என்று அறிமுகம் செய்துநின்றார். இதன்பின்பு சூரன் அவைக்களத்திற்குச் சென்றார். கர்வம் கொண்ட சூரன் தேவருக்குரிய ஆசனம் கொடுக்கவில்லை. தேவர் தன்னை தாழ்த்தியமையும் முருகப்பெருமானை சூரன் அறியாமல் மயங்குவதையும் மனதிற் கொண்டு அமலனை நினைத்தார். அவனருளால் கனக மாமணிதவிசு ஒன்று அங்கே தோன்றியது. விம்மிதம் உற்ற வீரபாகுதேவர் அத்தவிசில் எழுந்தருளிச் சூரனின் மிக்க பெருமிதம் உடையவராய் விளங்கினார். அது கண்டு சினந்த சூரன் நகைத்து, "சிற்றுணர்ச்சி உள்ள சித்தர்கள் செயல் இது. அதுவும் இன்றி என்னை மதியாது என் எதிரே வீற்றிருக்கின்றாய். இந்த வாட் படையால் உன்னை அழித்தொழிக்க வேண்டியது என் கடன் என்றாலும் நீ வந்த கருமத்தை ஆராய்ந்தபின் முடிவுக்கு வர எண்ணுகின்றேன்" என்றான். பின்பு யார் நீ என்று கேட்டான் அப்பொழுது வீரவாகுதேவர்,*

"புரந்த ரன்குறை அயன்" முத லமரர்தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலா நீக்கிமற் றவர்தந்
திருந்து தொல்லிறை யுதவுவான் செந்திமா நகர்வந்
திருந்த வாதியம் பண்ணவ னடியனேன் யானே.

*என்று விடையளித்தார். இந்திரனுடைய குறையையும் அயன் அரி முதலிய அமரர்களது சிறையையும் வானவர்களது சிறையையும் நீக்கி அவர்கள் பழையபடியே உரிய பதவிகளைப் பெற்று வாழும் பொருட்டு செந்திமா நகரத்தில் வந்து எழுந்தருளி இருக்கின்ற அறுமுகப்பெருமானுடைய அடியவன் நான் என்பதும் இப்பாடலின் பொருள். அடியவர்கள் துயர்*

*தீர்க்கவே திருச்செந்தூரில் முருகப்பெருமான் தங்கி இருக்கின்றார். திருவும் செம்மையும் விளையும் ஊர் திருச்செந்தூர். அது நமது இதயமே. இதயம் திருவாலும் செவ்விதாந் தன்மையாலும் தூய்மையடைந்து திருந்திய போது தான் குமரன் அங்கு எழுந்தருளுவான். இக்கருத்துப்பட முருகன் பெருமையை எடுத்துரைத்து தான் தூதாக வந்தமையையும் கூறி நிற்கிறார் தேவர். சூரசங்காரத்தையே ஒரு திருவிளையாடலாகக் கொண்டவன் முருகன். மாற்றாரை வசப்படுத்தச் சதுர்வித உபாயங்களில் இன்னுரை வழங்குதல் என்பது முதலாவது உபாயமாகும். இன்னுரை வழங்குதல் என்பது முதலாவது உபாயமாகும். தேவர்களைச் சிறையிலினின்றும் விடுவிக்க தூது ஒன்றைச் சூரன்பால் அனுப்பி வைப்பது முதலாவது செய்யத்தக்கது என பெருமான் காட்டினார். இராமாயணத்தில் இராமரும் பாரதத்தில் தருமரும் இதே நிலையில் தூது அனுப்ப நினைத்த பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.*

*தூதாக வந்த வீரவாகுதேவரை சூரன் கண்டிக்க நினைத்தானாயினும் அவ்வாறு செய்யவில்லை. தூதுவன் கருத்தை முதலிற் தெரிய வேண்டும் என்று எண்ணினான். இது சூரனிடத்திற் காணப்பட்ட நல்ல பண்பாகும். இராவணன் தூதாக வந்த அநுமனை கொல்ல நினைத்தபோது அருகில் இருந்த விபீடனன் நீதி கூறி தடுத்தான். துரியோதனன் வஞ்சனை செய்து கிருஷ்ண பகவானை படுகுழியில் வீழ்த்த நினைத்தான். இவர்களிலும் பார்க்க சூரன் ஓரளவு நியாயம் உணர்ந்தவனாகவும் செயலாற்றும் திறனுடையவனாகவும் காணப்படுகின்றான்.*

**சூரன் சினவுரை:**

*தேவர்களைச் சிறையினின்றும் விட வேண்டும் அல்லது அரக்கர் குலத்திற்கும் சூரனுக்கும் அழிவு நேரிடும் என்று கட்டுரைத்த போது அதை கேட்ட சூரன் நகைத்து, பின் சினந்துரைக்கின்றான்.*

மேலை யாயிரத் தெட்டெனும் அண்டமும் வென்றே
ஏலு கின்றதோர் தனியிறை யாகிய எனக்குக்
கோல வாலெயி றின்னமுந் தோன்றிலாக் குதலைப்
பால னேகொலாம் இனையன புந்திகள் பகர்வான்.

*தனக்கு மாற்றானாக வந்திருக்கும் முருகப்பெருமானை "பாலன்" என்று நினைக்கின்றான் சூரன். ஆனால் சூரனின் ஏளனச் சிரிப்பு*

*அறியாமையினால் வந்ததாகும். அறியாமையை அடக்க அறிவே வடிவெடுத்து வந்திருக்கிறது என்பதை அவன் உள்ளம் உணரவில்லை. விதியின் பிடிக்குள் அகப்பட்டு நிற்பவன் சிந்திக்குமாற்றலை இழந்து விடுவான். இதனை உணர்ந்த வீரவாகுதேவர் புன்னகை செய்கிறார். அறியாமையினால் வந்த சிரிப்பு சூரனுடைய சிரிப்பு. தேவர்களுடைய ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்ற தன் பெருமையை நினைக்கின்றானேயன்றி அவ்வண்டங்களையும் படைத்துக் காத்து நிற்கின்ற பரம்பொருளின் நிலையை அவன் நினைக்கவில்லை. நாம் பிறக்கும் பொழுதும் எதனையும் கொண்டு வந்ததில்லை. அதே போல இறக்கும் போதும் எதனையும் கொண்டு போக மாட்டோம். எனவே, இடையில் வந்த இச்செல்வம் அனைத்தும் இறைவன் தந்தது என்பதை உணராது தருக்கித் திரியும் சூரன் போன்றவர்களைப் பற்றி நாம் என்ன சொல்ல முடியும்.*

*"சிவன் கண் நெடுநல் வந்திடு சிறுவனோடு என் எதிர் நிற்பான்" எனவும் அகங்காரத்தோடு முருகனை எதிரி(யாய்) நினைத்து கூறுகிறான். ஆலயங்களில் வழிபாடு செய்யும் நாம்,பெருமானுக்கு எதிரிலே நில்லாது ஒதுங்கி நின்று வழிபாடு செய்கின்றோம். இதுவே பக்தர்களுடைய நிலை. ஆனால் சூரன் தனது குறைமதியினால் பாலன் எனவும் சிறுவன் எனவும் கூறி முருகனை எதிர்க்கத் துணிகின்றான். அவனுடைய இந்த பாம்பாட்டு நிலைக்கு ஏற்றபடி அமைச்சர்களும் மகுடி ஊதும் நிலையும் நாம் காண்கின்றோம்.*

**வீரவாகுதேவர் கூறும் அருள் நிலை:**

*சூரன் ஆதியர் பண்ணவனைப் பாலன் என்றும் சிறுவன் என்றும் பொருட்படுத்திய நிலையில் தருக்கி நிற்கும் அவலநிலையை கண்ட வீரவாகுதேவர் பாலனென்றிகழப் பட்ட பாலமுருகனை,*

மண்ண ளந்திடு மாயனும் வனசமே லவனும்
எண்ண ரும்பகல் தேடியும் காண்கிலா திருந்த
பண்ண வன்நுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்
உண்ணிறைந்த பேரருளினான் மதலையாய் உதித்தான்.

*என்று மனங்கொள வைக்கிறார். அதிதேவர்களாகிய மாலு மயனும் கண்டறியாப் பெருமையன் மைந்தன் எம்பெருமான் அறிவாலும்,*

திருவாலும் அறிய முடியாதவன். நாம் எவ்வாறு அறிவும் திருவும் கொண்டு அறிய முடியும்? இங்கே அறிவு என்றது செருக்குற்ற அறிவு. மால்கொண்ட மனத்தினர் முத்திநெறி அறியாது மயங்கி செல்வர். இங்கும் அடியைக் காண வேண்டிய அயன் முடியையும், முடியை காண வேண்டிய மால் அடியையும் தேட முயன்று முடியாது அலக்கண் உற்றனர். வானாடரே. காண முடியாத வான் பொருளை உள்நின்ற அன்பால் உணரலாமே யன்றி மற்றெவ்விதத்திலும் அறிய முடியாது. அத்தகைய பரம்பொருளே மதலையாய் அருள்செய் கோலத்தோடு வேல் தாங்கி வந்துள்ளான். அன்று வீரவாகுதேவர் தெருட்டும் உரைகளே எமது மருட்கையை விரட்டப் போதியதாகும். இருந்தும் சூரன் மயலுள்ளம் நீங்கவில்லை.

**சூரன் அமைச்சு:**

வீரபாகுதேவருடைய தூதையும் முருகன் எழுந்தருளிச் செந்திலில் வந்திருக்கும் நிலையையும் ஒற்றரால் அறிந்து கொண்ட சூரன் தனது அமைச்சரையும் தம்பிமாரையும் சுற்றத்தாரையும் தானைப் பெருந்தலைவர்களையும் அழைத்து நிகழ்ந்தவற்றை கூறுகின்றான். அப்பொழுது அவர்களும் சூரன் எண்ணத்திற்கு தூபம் போடுவது போல் பேசத் தொடங்கினார்கள். மாற்றான் படைவலி உணராது. காலம் இடம் தெரியாது, உரைக்கும் உணர்வில்லாது விளங்கினார்கள் அமைச்சர்கள். சுற்றமும் இந்த வகையிலேயே அவனுக்கு அழிவுப் பாதையைக்காட்டி நிற்கின்றது. சிங்கமுகன் ஒருவனைத் தவிர மற்றோர் இடித்துரைக்கும் பெற்றி இல்லாதவர்களாக விளங்கினார்கள்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

என்பது வள்ளுவர் கூற்று. இதே நிலையில் சூரனுடைய விருப்பத்தையே தாம் ஆதரிப்பதாக காட்டி முடிவில் அவனுக்கு அழிவையே காட்டி வைத்த அமைச்சரவையே நாம் கண்டித்ததற்கு உரியது. துர்க்குணன் என்ற ஒரு அமைச்சன்.

இறுதியி லாயுளு மிலங்கு மாழியு
மறுவிலா வெறுக்கையும் வலியும் வீரமும்

பிறவுள திறங்களும் தவத்திற் பெற்றனை
சிறுவனொ டேயமர் செய்தற் கேகொலாம்.

*எனச் செப்பியது சூரன்மனத்தினில் எண்ணிய சிறுவன் என்ற கருத்துக்கு தூபம் போடுவதாக உள்ளது. ஒவ்வொரு அமைச்சரும் சூரன் கருத்தையே தங்கள் கருத்தாக கொண்டு உரை வழங்கிய போதெல்லாம் சூரன் அகமிக மகிழ்ந்து முறுவல் செய்தான். தர்மத்தை உணர்த்த வேண்டிய அமைச்சர் அதர்மத்தின் வடிவங்களாக நின்று அவனைக் கெடுத்தனர்.*

**நடுவுளான் நீதி:**

*மாயை பெற்ற மூவரில் நடுநின்றவன் சிங்கமுகன். வீரமும் திருவும் பொருந்தியவன். நீதி உணர்ந்தவன். அசையாது நின்று அண்ணனுக்கு பெருநீதி உரைத்தவன். உடன் பிறந்த பாசத்துடிப்பு கொண்டவன். அவன் சொல்கிறான்.*

தன்னை நேரிலாப்பரம்பொருள் தனியுருக் கொண்ட
தென்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கண் முழுவது மகற்றிப்
பின்னை வீடுபே றருளுவான் நினைந்தபே ரருளே

*சிங்கமுகன் முருகன் பேரருளை முற்றாக உணர்ந்திருந்தான். அமைச்சரும் தானைத் தலைவரும் மக்களும் தங்கள் தங்களுக்கு ஏற்ற முறையில் வன்மை பேசி நின்றனரே அன்றி சூரனுக்கு இயன்ற புத்தி சொன்னவர்கள் அல்லர். இதனாலேயே சிங்கமுகன் தன் அண்ணன் நலன் கருதி பல அறிவுரைகளை செப்பினான். உயிர்களை ஆட்கொள்வதில் ஆண்டவன் விழிப்பாய் இருக்கின்றான். ஆனால் உயிர்கள் தாம் உடல் எடுத்த உடனே மயங்கி மறந்து விடுகின்றன. இறைவன் மும்மலங்களையும் அகற்றி உயிர்களுக்கு வீடு பேறு அருளும் பொருட்டு பல திருவிளையாடல்களைச் செய்கின்றான். ஐந்தொழில்களை இயற்றுகின்றான். அவற்றில் ஒன்றாகிய அழித்தல் என்பதும் அவனுக்கு ஒரு விளையாட்டே. நாங்கள் அனைவரும் அத்திருவிளையாடல்களுக்கு உட்பட்டவரே என்று இவ்வாறு பல கருத்துக்கள் அமைந்த அறிவுரைகளை எடுத்துக் கூறி அண்ணனை நல்வழிப்படுத்தவும் முயன்றான். மேலும் சூரனுடைய அகங்காரத்தையும் குறைக்கக் கூடியதாக சில வார்த்தைகள் சிங்கன் வாயிலிருந்து*

வெளிவருகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் முருகக்காட்சி சிங்கனின் நீதியில் சற்று புலனாகிவிட்டதே ஆகும்.

எத்துணை வரம் பெற்றவராக இருந்தாலும் இறைவனது திருவிளையாடலாகிய அழித்தற்தொழிலுக்கு உட்பட்டு அமைந்தவர்களே என்பதை சிங்கன் அறிந்திருந்தான். இதனால் முருகப்பெருமானுடைய திருவருள் மேன்மையையும் அவன் வடிவம் எடுத்து வந்திருக்கும் சிறப்பையும் அண்ணனுக்கு அடுக்கடுக்காக எடுத்துக் கூறுகின்றான். ஆருயிர் பாசங்களை நீக்கி வீடு பேறு அருளுவதற்காகவே வடிவில்லாத பரம்பொருள் வடிவம் எடுத்தது என்கிறான். ஞானம் தான் பரம்பொருள் வடிவெடுத்தது என்கிறான். "ஞானம் தான் பரம்பொருளின் உருவம் அதுவே வடிவம் எடுத்து வந்திருக்கிறது யானும் நீயும் அதன் பெருமையைத் தெரிந்து கொள்ள முடியாதவர்கள்" என்கிறான். அதாவது தன்மை முன்னிலை இறந்தவன் பெருமான் சுட்டறிவால் அவனைக் காண முடியாது. தன் பெருமை தானறியாத் தன்மையன் முருகன் எனக்கூறி தருமத்தையும் நீதியையும் ஒருசேர எடுத்துக்காட்டி அண்ணனை திருத்த முற்படுகின்றான் சிங்கன். அடுத்து என்ன நடைபெறப்போகிறது என்பதை நாளைய சொற்பொழிவில் கண்டுகொள்வோம். சிங்கமுகாசூரன் சூரனுக்கு எடுத்துரைத்த கருத்தினை சிறந்த ஒரு பாடலின் மூலம் நினைவு கூர்ந்து இன்றைய சொற்பொழிவை பூர்த்தி செய்து கொள்வோமாக.

ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானும் நீயுமாய் இசைந்தும்என் றால் அஃதெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேர்கிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை.

# சூர்முதல் தடிந்தோன்

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் னுற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ ஆடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.

*சைவப்பெருமக்களே,*

*இன்றைய தினத்தில் சூரபன்மனுடைய அரக்க சக்தியையும் அதனை குமரப்பெருமானுடைய கைவேலாகிய ஞானம் வென்று நின்ற வரலாற்றையும் அறியப்போகின்றோம். பெற்ற தாயாலும் குலகுருவாலும் தானைத் தலைவராலும், புதல்வர்களாலும், ஏனைய சுற்றத்தவர்களாலும் அழிநெறிக்கண் நிறுத்தப்பட்ட சூரனின் முடிவை காணப்போகின்றோம். சூரனுடைய போர்க்களம் போன்ற இடங்கள் இன்னும் இவ்வுலகில் இருந்து கொண்டு தான் வருகின்றன. அவை ஒன்றிரண்டு அல்ல. எத்தனையோ பாங்குகளில் உலகம் முழுவதிலும் அமைந்துள்ளன. ஆதிபத்திய போர்க்களம், நிறவெறிப் போர்க்களம், மொழிவெறிப் போர்க்களம், சமயவெறிப் போர்க்களம், வியாபாரப் போர்க்களம், மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் பெற வேண்டும் என்று ஆசை கொள்ளும் போர்க்களம் என இன்னவாறு எத்தனையோ போர்க்களங்கள் இவ்வுலகில் காட்சியளிக்கின்றன. புறலகிலே காணப்படும் இத்தகைய போர்க்களங்களால் மக்களின் வாழ்க்கை சீர்குலைகின்றது. அமைதி குன்றுகிறது ஒழுக்கம் மாசுபடுகிறது. இவை அனைத்தும் புறப்போர்க்களங்களே. அகப்போர்களங்களாக விளங்குவன மிகப் பயங்கரமானவை. புற உலகில் இருந்து விடுபட்டு வாழக் கற்றுக் கொண்டாலும் அகத்திலே நடைபெறும் யுத்தத்தை நாம் வெல்லுவது கடினம். அது ஆணவமாகிய சூரனின் அட்டகாசம் நிகழும் இடமாகும். புறப்போருக்கு அஞ்சி ஒதுங்கி ஓடலாம். ஆனால் அகப்போருக்கு ஒதுங்க இடமில்லை. அதில் வெற்றி காண வேண்டுமானால் எம்பெருமான் முருகனுடைய சரண கமலத்தை தஞ்சமடைய வேண்டும்.*

*புராணங்களிலே கூறப்படும் அரக்கர்கள் எமது உட்பகைவர். கருத்தினுள்ளே புகுந்துவிட்ட வஞ்சகக்கள்வர் அவர்கள். எனவே இவர்களை வெற்றி பெற்று மனத்தை நல்வழிப்படுத்துவதற்கு வழிபாடு முக்கியமாகும்.*

பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் வந்து வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

*என்பது திருமூலர் வாக்கு. செவ்வேளைத் தஞ்சமடைந்தாலன்றி அகப்பகையைச் சாட முடியாது. இதுவே கந்தபுராணம் காட்டும் சிறந்த வழிபாடாகும். காமக் குரோதாதி பகைவர்கள் அகத்திற் புகுந்து சுகத்தைக் கெடுக்கின்றனர். சும்மா இருப்பதுவே சுகம் என்று மறைகள் ஓலமிடுகின்றன. சும்மா இருப்பதை கெடுத்து சுமைதாங்கிநிற்பதை சுகம் என்று அகப்பகைவர்கள் காட்டுகின்றார்கள். மனச்சுமையை தரும் இந்த பகைவர்களை சாடி வெற்றி பெற்ற வரலாறே சூரபன்மன் வதை எனப்படுகிறது. நான் என்றும் எனது என்றும் இருகூறாக நிற்கின்றான் சூரன். அகந்தை மமதைகளே நம்மையும் கூறுபடுத்துகின்றன. ஒருயிரும் ஈருடலும் கொண்டவன் சூரன். அவ்வுடல் வேலால் கூறாக்கப்பட்ட போது நான் என்பது சேவலாகவும் எனது மயிலாகவும் உருமாறி, குணம் மாறி, செயல்மாறி முருகப்பெருமானின் கொடியாகவும் வாகனமாகவும் உருவெடுத்து நிற்கிறது. இதுவே சூரசங்கார கருத்தாகும். பெருவாழ்வு வாழ வேண்டும் எனச் செருக்கடைந்த சூரன் அடங்கிஒடுங்குகின்ற நிலையை முடிவில் காணுகின்றோம். குபேரன் போல வாழ்வதுதான் பெரு வாழ்வு என்று நினைக்கக்கூடாது. தெய்வ நம்பிக்கையோடு கூடிய திருவாழ்வு தான் நமக்குத் தேவை. முதலமைச்சராக இருந்த மணிவாசகர் திருவாசகத்தில் இக்கருத்தைத் தருகிறார்.*

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைபட்
டாழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனர்க்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

வல்வினைப்பட்டு ஆழ்கின்ற வாழ்வை சூரன் மேற்கொண்டான். முடிவில் அவனுடைய நல்வினையை குறிப்பிட்டு வேல்வடிவில் வந்து அவனை திருத்தி விட்டது.

**உபதேசங்கள்:**

சிங்கமுகாசுரன் தனது அண்ணனாகிய சூரனுக்கு உபதேசித்த வாசகங்கள் முன்பு கூறப்பட்டன. ஆனால் அவை யாவும் சூரனுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆகிவிட்டன. அறிவின் வளர்ச்சிக்கும் வாழ்க்கையின் உயர்வுக்கும் அறிஞர்களின் நல்வாக்குகளைக் கேட்பது முக்கியமாகும். விலங்குகள் கூட மனிதனின் வாசகங்களை கேட்டு பணிந்து நடக்கின்றன. பகுத்தறிவு உள்ள மனிதன் பக்குவம் அடைந்த பெருமக்களின் அறிவுரைகளுக்கு செவிசாய்க்க கடமைப்பட்டவன். பயனில் சொல் பாராட்டுவானை விட இன்சொல் வழங்குபவனையே உயிர்த்துணைவனாக கொள்ள வேண்டும் பயனுடைய சொல் நலம், எல்லா நலங்களையும் தரவல்லது. கட்புல அறிவிலும் பார்க்க செவிப்புலன் அறிவே மிகுதியும் எம் வாழ்வில் இயல்பாக அமைகிறது. செவிநலம் வேண்டில் ஞானம் உடையார் வாய்ச்சொல் கேட்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும். சிங்கன் வாயிலாக சூரனுக்கு இது கிடைத்தபோதும் அவனதை உதாசீனப்படுத்தினான். சூரனுடைய காட்சியில் உலக போகம் தெரிந்ததே அன்றி உலக முதல்வனின் காட்சி தெரியவில்லை.

**இருவகைக் காட்சிகள்:**

மலரையும், பாலையும், கடல்நீரையும் முறையே காண்பவர்கள் அவற்றில் கட்புலனாகாதவற்றையும் உணர்வினால் அறிகிறார்கள். மலரிலே மணமும், பாலிலே நெய்யும், கடல் நீரிலே உப்புத் தன்மையும் உணர்வினால் அறியத்தக்கன. இவ்வாறு உணர்வினால் அறிகின்ற காட்சியே கடவுட்காட்சியாகும். கட்புலனால் அறிகின்ற காட்சி உலகக் காட்சியாகும். உலகக் காட்சியை இழந்து நிற்பவன் தான் கடவுளைக் காண்பான். நாயைக் கண்டால் கல்லை காணோம். கல்லை கண்டால் நாயை காணோம். என்பது பழமொழி. திருமூலரும் இக்கருத்தை கூறுகிறார்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்

*யானை என்று பார்த்தவனுக்கு மரம் தெரியாது. மரம் என்று பார்த்தவனுக்கு யானை தெரியாது. இதே போலத்தான் கல்லென்று பார்ப்பவன் கடவுளைக் காணமாட்டான். கடவுள் என்று பார்ப்பவன் கல்லைக் காணமாட்டான். பக்குவமற்றவர்களுடைய நோக்கு அஞ்ஞானநோக்கு, பக்குவமுடையவர்களுடைய நோக்கு மெய்ஞ்ஞானநோக்கு. தெய்வக்காட்சி முடிவிலே குழந்தை நிலையை கொடுத்து நிற்கும். முருகன் குழந்தையாக, பாலகனாக காட்சி கொடுத்தமை கந்தபுராணத்திற் பேசப்படுகிறது.*

மூலமும் முடிவுமில் லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவ தோர்ந்திலை
ஆலம தானதே ஐய என்மொழி
மேலையின் விதியையார் வெல்லு நீரினார்.

*என்று மனம் மிக வருந்துகிறான் சிங்கமுகாசுரன். இறைவன் கட்டளைப்படி உறுத்து வந்து ஊட்டும் விதியின் வேகத்தை யார் தான் வெல்ல முடியும்.*

**ஏமகூடம்:**

*கதிர்காமமே ஏமகூடம் என அழைக்கப்படுகிறது. பாவமே பயிலும் சூரனையும் அவுணர்களையும் அழித்து வானவர் துன்பம் துடைப்பதற்காக வீரமகேந்திரத்திற்கு எழுந்தருளிய அறுமுகத் தண்ணல் மாலையனாதிதேவர் வேண்டுகோளுக்கு இசைய மகேந்திரபுரத்திற்குள் நுழையாது அதனயலிலே ஒரு பாசறை அமைத்து அங்கு தங்கினார். ஏமகூடம் என்றும் கதிர்காமம் என்றும் இப்பாசறை சொல்லப்படும். ஒளிமயமான இவ்விடம் முருகனுக்கு உகந்த தலமாகும் அன்பர்களை ஆட்கொள்ள அமைந்த தலம் இதுவே. "மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகதமயூர பெருமாள் காண்" என அருணகிரிநாதர் புகழ்ந்து பாடும் திருப்புகழ் இத்தலத்துக்கு உண்டு. பக்தர்கள் எல்லோரும் ஒளிமயமான முருகனை அங்கு கற்பூர ஒளியிற்*

*காண்கின்றார்கள். கந்தப்பெருமான் ஏமகூடத்தில் வீற்றிருந்த பொழுது நாரதர் மகேந்திரபுரத்திற்கு சென்று சூரனைச் சந்திக்கிறார். தேவர்க்கு அபயம் கொடுத்து அரக்கரை எல்லாம் அழிப்பதற்கு கந்தப்பெருமான் அந்நகரில் வடபால் பாடி வீடமைத்து தங்கி உள்ளார் என்ற செய்தியை கூறிய போது, அவுணர்கோன் சீறிச்சினந்து நிற்கின்றான். எனது ஆணையை இகழ்ந்து எந்நகர் நண்ணிய சிறுவனின் வீரத்தை அழிப்பேன் என்றும், இன்னும் பலவாறு கூறி பானுகோபனிடம் இச்செய்தியைத் தெரிவித்தான். அவனும் வெஞ்சினம் கொண்டு போர்க்களஞ்சென்று கந்தப்பெருமானால் அனுப்பப்பட்ட வீரவாகுதேவர் தலைமையிலான பூதப்படையுடன் உக்கிரமான போர் செய்தான். பானுகோபன் எண்ணில்லாத பாணங்களை விடுத்தான். அக்கணைகள் எல்லாம் கூர்மழுங்கி உதிர்ந்தன என்பதை ஒரு சிறந்த உவமையுடன் கச்சியப்பர் பாடுகிறார்.*

மைக்கின்ற மேனி நெடும்பூ தனைவஞ் சன்வாளி
தைக்கின் றிலவா னுதிமாய்ந்து தளர்ந்து வீழ்ந்த
மெய்க்கின்ற இன்பும் அறனும் விளையாது வாளா
பொய்க்கின்ற வன்கைப் பெருள்வல் லையிற்போ வதேபோல்.

*பானுகோபன் விடுத்த எண்ணில்லா பாணங்கள் மைநிறம் பொருந்திய உக்கிரன் என்ற பூதவீரன் உடம்பில் தைக்காமல் கூர் மழுங்கி உதிர்ந்தன. அது பொய்யனுடைய பொருள் அறத்தையும் இன்பத்தையும் தராமல் விரைந்து அழிவதை ஒத்திருந்தது என்பதே இப்பாடலின் பொருளாகும். பொய்கின்றவன் என்றால் திருவருளின் தோய்வு இல்லாதவன். இவன் கைப்பொருள் உண்மையின்பத்தையும் அறத்தையும் விளைக்காது திருவருள் தோய்வு இல்லாதவர் ஈயும் அமுது கூட மலம் என்கிறார் வடலூர் வள்ளலார்.*

அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும்
அம்ம லத்தினை அருந்துதல் ஒழிக

*என்பது அவர் அருட்பாடல். இந்த உடம்பை மெய் வைத்த வீடாக வைத்திருக்க வேண்டும்.. பொய் வைத்த வீட்டை மண் உண்ணும். ஆனால் மெய் வைத்த வீட்டைச் சிவமே உண்ணும். அது சிவ சொத்தாகிவிடும்.*

*பானுகோபன் முருகப்பெருமானுடன் போராடவில்லை. இலக்கத்தொன்பது வீரருடன் உக்கிரமாக போராடுகின்றான். மாயத்தனமாக மோகாஸ்திரத்தை விடுத்து நவவீரரை மயக்கி விழச் செய்தான். கந்தவேட் பெருமாள் அம்மோகாஸ்திரத்தால் அனைவரையும் எழுப்பி அருள்புரிந்தார். முடிவில் பானுகோபன் மறைந்து ஓடினான். வீரவாகுதேவர் வெற்றி வாகை சூடி திரும்பி வந்தார். இரண்டாம் நாள் சூரபத்மன் அளவிறந்த சேனைகளுடன் யுத்த களத்திற்கு வந்து வீரவாகுதேவர் உட்பட பூதவீரர்களையெல்லாம் வென்று முருகப்பெருமானுடன் போர் புரிந்தான் .முதன் முதலாக சூரன் முருகப்பெருமானை நோக்குகின்றான்.*

முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்
எண்டகு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டனையும் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந்தெரியக் கண்டான்

*தாமரை மலர்ந்தது போன்ற குளிர்ந்த திருமுகங்களையும், பன்னிரு கண்களையும் பன்னிரு குண்டலங்களையும் திருமுடிகளையும் அழகிய திருமார்பினையும் பன்னிரு திருக்கரங்களையும் விளங்குகின்ற ஆயுதங்களையும் தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்ற திருவடிகளையும் கண்டனன் என்பது இத்தெய்வத் திருப்பாடலின் பொருள். முண்டக மலர்ந்த தனை முகங்களை காண்கிறான் முண்டகம் செந்தாமரை மனத்தகத்து மாசைத் துடைக்கின்ற செம்மை முருகனின் முகங்களில் ஒளி விடுகின்றது. உள்ளம் தானாகவே செம்மையாகின்றது முருகசோதியுடன் இப்போது சூரன் முருகனை நோக்குகின்றான். நோக்கிட விழியில்லாதவனுக்கு நோக்கும் விழியைக் கொடுக்கிறது. மூவிரு முகங்களும் கேசாதி பாதமாக நோக்குகின்றான். தவத்தின் வடிவம் இப்போது சூரன். அறத்தின் வடிவை தவ வடிவமாய் நின்று பார்க்கும் சூரன் தானும் அறவடிவாய் நிற்கும் நிலையையும் அடைகின்றான். ஆ! இவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல்வனன்றோ என்றார் கச்சியப்பர். ஒரு தனிக்குமரன் தன்னை தன்னிரு விழியால் கண்டான். தானவர்க்கிறைவன் என்றால் அன்னவன் தவத்தின் பேற்றை ஆரறிந்துரைக்க வல்லார் என வியப்புக் கடலுள் ஆழ்கின்றார் கச்சியப்பர். முடிவில் அடைய வேண்டிய இடத்தில் பொருந்தி நிற்கிறான் சூரன். தண்டையும் சிலம்பும் ஆர்க்கும் சரணம் தெரியக்கண்டு நிலையாக*

நிற்கிறான். தாரகனும் கண்டுகளித்த காட்சியிது. பாலன் என்று எண்ணியசூரன் பாலரணியும் தண்டையும் சிலம்பையும் காண்கிறான். முருகன் இளம்பூரணன் என்பார் பாம்பனடிகள். வீடு பேறருளும் இளம்பூரணனின் திருவடி காணும் பேற்றை சூரன் முதற்ச் சந்திப்பிலேயே கண்டு மகிழ்கிறான். ஆயிரம் அரக்கர் செய்த தவத்தின் வலிமையும் சூரனின் பேராற்றலும் மீண்டும் சூரன் அகத்தை மறத்தின் வடிவமாக மாற்றிவிட்டது. துறந்தனன் பேரருள் காட்சியை மயக்க உணர்ச்சி மேலிட்டது. ஆணவம் கிளை விட்டு வருகின்ற சக்தி உடையது.

பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றும்
கணவர்க்குந் தோன்றாத கற்பு

என்பது திருவருட்பயன். ஒரே ஆணவம் பல சக்திகளை உடையது. தன்னைக் காட்டாது நின்று கெடுக்கும் இயல்பினது. கடல் அலையிலும் பார்க்கக் கிளைத்து வரும் கன்மம் ஆகிய கடலே பிறவிக்கு காரணம். கன்மம் அடங்க ஆணவம் கிளை விடாது. ஒரு கணம் சூரன் கன்மம் அடங்க முருகொளியிற்கலந்து நின்றான். பின் வேகமாக ஆணவம் கிளை விட மீண்டும் போருக்காயத்தமானான் பலவாயுதங்களை விடுத்தான். அவன் விட்ட படைக்கெல்லாம் ஈசன் மைந்தன் தன் படை தொடாது கிட்டும் எல்லையில் கவர்ந்து நின்று தான் அட்ட மூர்த்தி சேய் எனக்காட்டி நின்றான். பாலன் என்று இகழ்ந்த சூரன் இப்போது என்னோடு போராடுவதற்கு இவனன்றி வேறு யாரும் இலர். அங்கனமே இவனோடு போராடுவதற்குயானல்லாது வேறிலர். இது சரதம் என நினைக்கின்றான். பின் பாலமுருகனோடு உரையாடுகின்றான். முருகனின் உரைகளைப் பிள்ளைமை பேச்சென மயக்கமுணர்வால் மேலும் மதித்துப் போராடுகின்றான். வேற்படைக்கும் வேலன் விற்றொழிற்கும் ஆற்றாத சூரன் மாயையின் மந்திரம் ஒன்றினை உள்ளூறுத்தி விரைவில் மறைந்து மகேந்திர அரண்மனை சென்றான். சூரனின் பேராற்றலை உலகுக்கு அறிவிக்கும்படியாக அமலன் தந்த முருகக் குழந்தை நீண்ட நேரம் விளையாடுகின்றார். மறைந்த சூரனை எறிந்து உயிர்கொள்ளச் செவ்வேள் நினையாது மீண்டும் அத்தீயவன் உய்யுமோ என்னும் திருவருள் கொண்டு வாளாவிருந்தார். மீண்டும் பானுகோபன் போருக்கு வந்து வீரவாகுதேவருடன் மிக்க வலிமையுடன் போர் புரிந்தான். ஆகாயத்திலே மறைந்து நின்று மாயாஸ்திரம் விடுத்து நவவீரர்களையும்

*பூத சேனைகளையும் மயக்கிக் கட்டி எல்லா கடல்களுக்கும் அப்பால் உள்ள நன்னீர் கடலில் வீழ்த்தி வெளிக்கிளம்பா வண்ணம் அழுத்தினான். முருகப்பெருமான் வேலையனுப்ப அவ்வேல் நன்னீர் கடல் சென்று மாயாஸ்திரத்தை அழித்து தேவர்களுக்கு நல்லுணர்வு நல்கி மீண்டது. எல்லோரும் கரையறினர்.*

**இரணியன் உபதேசம்:**

*சூரனுடைய மகனும் மூன்று தலைகளை உடையவனும் நீதி நெறிகளை வரைந்தவனும் ஆகிய இரணியன் சூரனிடம் தேவர்களை சிறை விடுத்து சரவணப்பெருமானை சரணடைமாறு அறிவுரைகள் பகருகின்றான்.*

ஒன்றொரு பயன்றனை உதவி னோர்மனங்
கன்றிட உருவின் கருதிச் செய்வரேற்
புன்றொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ.

*'ஒப்பற்ற ஒரு உதவியை புரிந்தோருடைய மனம் வருந்துமாறு ஒரு தீமையை புத்திபூர்வமாக செய்வாராயின் அத்தீவினையாளரை முன் அவர் புரிந்த நன்றியே அழித்துவிடும். அவரையழிக்கக் கூற்றுவன் வேண்டுவதில்லை' என்பதும் இப்பாடலின் பொருள்.*

*"நன்றி மறப்பது நன்றன்று" என்றார் வள்ளுவர். இறைவன் தந்த செல்வங்களை வைத்துக்கொண்டு இறைவன் செய்த நன்றியை மறப்பது தீது. துரியோதனன் மண்ணாசையால் கெட்டான். இராவணன் பெண்ணாசையால் கெட்டான். கம்சன் பல தீவினையால் கெட்டான். ஆனால் சூரன் நன்றி மறந்தமையால் கெட்டான். ஒரு துட்டன் என்று அருணகிரிநாதர் திருப்புகழில் சூரனைக் குறிப்பிடுகிறார்.*

இமையவ ரனைவர்க்கும் அறையோ அறையோ
அரியயன் முழுதுக்கும் அறையோ அறையோ
எழுபுவி யுலகுக்கும் அறையோ அறையோ பொரவாரும்
எனவரு மொருதுட்டன் முறையோ முறையோ

*பாவங்களுக்கெல்லாம் மிகப்பெரிய பாவம் நன்றி மறப்பது ஆகும். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி*

*கொன்ற மகற்கு என்பது வள்ளுவரறம். செய்ந்நன்றி கொன்றவர்க்கு கழுவாயே கிடையாது.*

ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவாம்
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்திகொன் றோர்க்கு உய்தி யின்றென
அறம்பா டிற்றே....

*என்பது புறநானூறு*

*சூரபத்மனுக்கு சிவபெருமான் எண்ணிலாத வரங்களை நல்கினார். அவன் கேளாத வரங்களையும் வலிதில் வழங்கி வாழ்வித்தார். இந்த நன்றியை மறந்த மாபெரும் பாதகம் சூரனை அழித்தது, வரமளித்த கங்கை வேணியின் மைந்தனோடு எதிர்த்து அமராடியது நன்றி மறந்த செயலாகும். வீரவாகுதேவர் தூது வந்து,*

பூத மைந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியுள்
ஓது கின்றபல் லண்டத்தின் ஓரா யிரத்தெட்டும்
கோதி லாக்கமும் படைகளும் உனக்குமுன் கொடுத்த
ஆதி யீசனே அவனெனில் மாற்றுவ தரிதோ.

*என எடுத்துரைத்து நன்றி மறந்த பெரும் தீங்கை தெளிவு படுத்துகின்றார். மேலும் இரணியன் கூறுகின்றான்.*

கங்கைதன் புதல்வன் என்றும்
கார்த்திகை மைந்தன் என்றும்
செங்கண்மான் மருகன் என்றும்
சேனையின் செல்வன் என்றும்
பங்கயன் முதலோர் தேறாப்
பரஞ்சுடர் முதல்வன் தன்னை
இங்கிவை பலவுஞ் சொல்வ
தேழைமைப் பால தன்றோ.

*“பிரமதேவன் முதலியவர்களாலும் அறிய முடியாத அருட்பெருஞ் சோதியும் தனிப்பெருந் தலைவனுமாகிய முருகப்பெருமானை*

கங்காபுத்திரன் என்றும், கார்த்திகை மைந்தன் என்றும் திருமால் மருகன் என்றும், தேவ சேனாதிபதி என்றும் கூறுவது அறிவின்மையாகும்" என்பது இப்பாடலின் பொருளாகும். காற்றில் தள்ளுண்டு, நெருப்பினில் சூடுண்டு. கங்கை ஆற்றில் தாக்குண்டு, சரவணம் புக்கு அலையுண்டு, வேற்று பேர் முலை உண்டு அழுது விளையாடும் நேற்றைப் பாலன் என்று பரஞ்சுடர் முதல்வனைக் கருதியவன் சூரன். வச்சிரத் தனியாக்கையும் அழிவிலா வரமும் மூவுலகும் ஆளும் பேறும் பெற்ற சூரன், மூலமாகிய தத்துவ முழுவதும் கடந்து மேலுயர்ந்திடும் தனிமுதற்பொருளை கங்காதேவி புதல்வன், கார்த்திகைப் பெண்கள் மைந்தன், செங்கண்மால்மருகன் என்றும், சேனை (இந்திராணி என்றும் பெயர்), யின் செல்வன் என்றும் பெண்பாலிடமாக கருதுகின்ற தன்மை அறிவின்பாற்பட்டதன்று என்று இரணியன் அறியுநெறியினின்னு புகட்டுகின்றான். மேலும் தாரகனை அழித்த கிரவுஞ்சகிரியை பொடியாக்கியதும், நன்னீர்க் கடலுள் அமிழ்த்தியதும், நவவீரரையும் வானவரையும் மீட்டதுமாகிய குமரன் கைவேலைப் போற்றி செய்து குமரன் தாள் பணிவதே மீள்வதற்கு உய்வதற்கு வழி என்று கூறும் இரணியன் சிந்தை அறத்தின்பாலதன்றோ? கரங்கள் பன்னிரண்டு கொண்ட பரஞ்சுடர் முதல்வனை எதிர்த்தால் நந்தம் வரங்களும் படைகள் யாவும் மாயையும் திறலும் சீரும் உரங்களும் திருவும் எல்லாம் பூழிபட்டழியும் என்று அறிவு கொளுத்தினான். அறுமுகத்தமலனைச் சிறுவன் என்றிகழல் வேண்டாம். அவன் செய்கையால் பெரியவன் என்றும், ஆசிலோர் குழவிபோலாய் ஈசனே வந்தான் என்றும் இரணியன் கூறும் வாய்மைகள் சூரனின் புந்தியில் ஏறாவாயின. இறுதியில் இரணியன் போருக்கு புறப்பட்டான். போர் செய்தான். வன்மையிழந்தவனாய் ஏக்கமுற்று எண்ணுவனாயினன். எனக்கும் முடிவு காலம் நெருங்கிவிட்டது. தந்தையாரும் இறப்பது சரதம். சுற்றமானவரும் தொலைந்தார். மற்றவரும் இறப்பது உண்மையாகிவிட்டது. அப்படியானால் தந்தை கடன் செய்வது யார்?

மைந்த னைப்பெறு கின்ற மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
அந்த மில்கட னாற்றுதற் கேயன்றோ

*எனச் சிந்திப்பானாயினன் இரணியன். எல்லோரும் மாய்ந்ததால் பிதிர் கடனாற்ற ஒருவரும் இல்லையே எனக் கவல்கின்றான். இந்த ஞானம் உதயமானவுடன் நீர்க்கடன் செய்ய மீனுருவந் தாங்கி கடலில் மறைந்து விடுகின்றான். அறிவார்ந்த நன்மகனாகக் காட்சியளிக்கின்றான். இரணியன் தந்தையைக் காப்பதற்கு இறை சிந்தனையிலாழ்ந்து நின்றவன் இப்போது தானே தந்தைக்கு நீர்க்கடனாற்றி உய்விக்க நினைக்கின்றான். நல்ல நினைப்புகள் எழுகின்ற போதுதான் நல்ல காரியங்களைச் செய்ய முடியும். அப்பரடிகள் இறைநினைப்பில் ஊன்றிநின்றபோது வல்லவன் இழைத்த தீங்கெல்லாம் நன்மையாய் விளைந்தன. “நற்றுணையாவது நமச்சிவாயவே” என்றருளிச்செய்கின்றார் அப்பர். இனியென்னே உய்யுமாறு என்ற இறுதி எண்ணம் வரும் போது அஞ்செழுத்தின் புணைபிடித்தால் உலகத்துன்பத்திலிருந்து உய்யலாம் என மாணிக்கவாசகரும் அருளி செய்கின்றார்.*

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
 தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
 கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
 அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
 கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

*வேறு நினைவு செயலின்றி இறைநினைவோடு இருத்தலையே “கிடக்கின்றேனை” என்ற சொல்லால் விளக்கி இருக்கிறார். முற்றுந்துறந்த பட்டினத்தடிகள் கூட தாயின் கடமை செய்வதில் தவறவில்லை. துரியோதனன் இறந்த போது தருமரும், இராவணன் இறந்த போது விபூஷணனும் நீர்க்கடன் ஆற்றியதைப் போல சூரனுக்கும் இரணியன் நீர்க்கடனாற்றி நிற்பதை பின்பு காண்போம்.*

இனியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

**வீரவாகுத்தேவர் கவலை:**

*நாலாம் நாள் சூரபத்மனுடைய புதல்வன் அக்கினிமுகாசுரன் சேனைகளுடன் வந்து போர் புரிந்தான். வீரவாகுதேவர் அக்கினிமுகனைக் கொன்றார். சூரன் மக்கள் மூவாயிரவரை இலக்கம் வீரரில் ஒருவரான விஜயர் கொன்றார். மந்திரி தருமகோபனும் வீரபாகுதேவரால் கொல்லப்பட்டான். அக்கினிமுகாசூரனால் கொல்லப்பட்ட தன் தம்பியர் எழுவரைக் கண்டதும் வீரவாகுதேவர் கவலைக்கடலுள் மூழ்கினார்.*

*இவர் பலவாறு புலம்பி அருந்துயரெய்தி இளையர் தம்மை எழுப்பவோர் சூழ்ச்சி கொண்டார். 'மாற்றலனால் இளையர் எழுவர் கொல்லப்பட்டனரெனில் ஆவி பறித்தவன் கூற்றுவனன்றோ?" வானவர் தானவர் ஏனையோர் போல எண்ணினானோ என்று கூற்றுவனை பலவாறு கடிந்து கூறுகின்றார்.*

நீறு முகத்தார் கண்டிகை பூண்டார் நிமலன்பேர்
கூறு முகத்தார் தம்புடை செல்லக் குலைகூற்ற
னாறு முகத்தார் னடியவ ராவி யலைத்தானே
சேறு முகத்தாழ் கரியை யடாதோ சிறுபுள்ளும்.

*நீறணிந்தவர்களை, கண்டிகை பூண்டவர்களை, நிமலன் நாமம் கூறுகின்ற அடியவர்களை, கூற்றன் எவ்வாறணுகுவான்? எனத் திகைக்கிறார் வீரவாகுதேவர். வினைகள் நீக்குவதால் நீறு என்று பெயர். முத்தியைத் தரவல்லதும் உண்மை பொருளாக விளங்குவதும் அன்பை விளைவிப்பதும் சித்திகள் தருவதும் நீறு. பலப்பல பிறப்புகளில் செய்த அறத்தின் பயனாக திருநீற்றைப் பூசும் மேலான பிறப்பு எய்துகிறது. அவ்வாறெய்திய பிறப்பு உய்யத் திருநீற்றை பொன்னேபோற் போற்றிப் பூசிச் சிவனருள் பெறுதல் வேண்டும். "...வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே" என்கிறாா மாணிக்கவாசகர். வெண்ணீறணிந்தவரைக் கண்டால் கூற்றுவன் அஞ்ச வேண்டும் என்கிற வீரவாகுதேவர் புனிதனணியும் புனித நீறு அணிந்தவரிடம் கூற்றுவனுக்கு வேலையில்லை என்பது கருத்து.*

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும்பொய் யாகி விடுகின்ற போதுஒன்று வேண்டுவன்யான்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

*என்ற பட்டினத்தடிகள் திருவாக்கும் நினைக்கற்பாலது. பிரணவத்தின் உட்பொருளே ஐந்தெழுத்து. "சிவாயநம என்றே நீறணிந்தேன்" என்றார் அப்பர். நீறணிந்து நிமலனின் ஐந்தெழுத்தோதுகின்ற அடியவர்களுக்கு மரண பயம் இல்லை. நல்லவர்களின் உயிரை யமனே எடுக்கவருவான். அல்லாதவர்களின் உயிரைத் தூதுவரே கொடுமை பல செய்து எடுப்பர் என நூல்கள் கூறுகின்றன. மார்க்கண்டேயரினுயிரைத் தூதுவரால் அணுகி எடுக்க முடியவில்லை. முடிவில் யமனே வந்தான் என்கிறது புராணம்.*

**வீரவாகுதேவர் வரம் வேண்டல்:**

*ஐந்தாம்நாளும் பானுகோபன் தந்தைக்கு சில தரும உரைகள் புகன்று அவன் திருந்தாமை கண்டு வருந்திச் சேனைகள் சூழப் போருக்கு வந்தான். வீரவாகுதேவருக்கும் அவனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. வீரவாகுதேவர் பானுகோபனைக் கொன்றார். சூரன் மிகவும் வருந்தியழுதான் பானுகோபனை அழித்தபின் அமலன் எழுந்தருளியிருக்கும் சோதிநீடிய பாசறை புகுந்து அடிபணிந்து வீரவாகுதேவர் நிற்றலும் எம்பிரான் தெரிந்து நோக்கி "நீர் சூர்மகனோடு போர் செய்து அவனை அழித்தனை ஆதலின் மகிழ்ந்தோம். நீ வேண்டுவதை கேட்பாயாக!" என்றருளிச் செய்தபோது வீரவாகுதேவர் 'எம்பெருமானையன்றி யான் செய்த செயல் எதுமில்லை. ஆயினும் அடியேற்கொன்று அருளவேண்டும்" என்று உரை செய்கின்றார்.*

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலை யிந்திரன் அரசினைக் கனவினும் வெஃகேன்
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்.

*"அழகிய குபேரசம்பத்தையும் விரும்பேன். மேலான இந்திரனுடைய அரசைக் கனவிலும் விரும்பேன். பிரம விட்டுணுக்களுன் பதவிகளையும் ஒரு பொருளாக மதிக்க மாட்டேன். தேவரீருடைய திருவடியின்*

*அன்பு ஒன்றையே அடியேன் வேண்டுகின்றேன்" என்பது இப்பாடலின் பொருள். முக்தி நலத்தினும் அரியதொரு வரம் 'சால நின்பதத் தன்பு' பெறுதல் என்பதைக் காட்டுகிறார், திருவடியைச் சிந்திக்கின்ற தவசிகளும் இலகுவில் பெற முடியாத திருவடியன்பையே விரும்புகின்றார் வீரவாகுதேவர்.*

கொள்ளேன் புரந்தன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே

*என மாணிக்கவாசக சுவாமிகளும் திருவருளால் இருக்கும் பேறை விரும்புவதும், இங்கு ஒப்பிட்டு நோக்கற்குரியதாகும்.*

*இன்னும் ஓரிடத்தில் அவ்வன்பை நிரந்தரமாக அருளும்படி மெய்யுணர்வு ததும்பக் கேட்கிறார் மணிவாசகர்,*

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தல்எல் லாமெமக் கேபெற லாமென்னு மன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேஉன்றன் வாழ்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே.

*மலரிட்டு அடியிறைஞ்சும் வார்கழற் கன்பு நின்னை முழுவது மேத்த நிரந்தரமாய் அருளினால் இரந்தவெலாம் எமக்கே உரியன என்னும் வாசகவுரைகள் வீரவாகுதேவரின் வரத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். தாயைப் பிரிந்த குழந்தை தாயையன்றி பிறவொன்றையும் வேண்டாது அழும். தாயைப் பெற்றுவிட்டால் குழந்தை நினைத்ததையெல்லாம் இலகுவாகப் பெறும் என்ற நம்பிக்கை பெற்றுவிடும். இறைவன் திருவடியன்பினாலே எல்லா நலன்களும் உண்டாகும்.*

*"ஆன பயபக்தி வழிபாடு பெறுமுக்தி" என்பவர் அருணகிரி. முருகன் திருவடியில் பயபக்தி ஏற்பட்டுவிட்டால் அதுவே முத்தியாகும்.*

**ஆணவ அழிவு:**

*சிங்கமுகாசுரன் தமையனுக்குப் பலவாறு தரும உரை உரைத்தும் திருந்தாதது கண்டு இலக்கம்வெள்ளம் சேனைகள் சூழப்போருக்கு*

*வந்தான். வீரவாகுதேவர் சிங்கமுகாசுரனுடைய ஆயிரம் புதல்வர் களையும் கொன்றார். முருகப்பெருமான் குலிசாயுதத்தால் சிங்கமுகனை வதைத்தருளினார். கும்பகர்ணனைப் போலச் சிங்கமுகனும் நீதியுணர்ந்தானாயினும் உண்ட சோற்றுக்கடனைக் கடமையுணர்ச்சியோடு செய்து ஆவி விட்டான். சூரன் வளர்த்த உடலைச் சூரனுக்கே அர்ப்பணஞ்செய்து முருகன் நினைப்போடு பிரிந்தான். இது சுக்கிலத்தியானம் எனப்படும். உலக நினைப்போடு பிரிபவர் மீண்டும் பிறப்புக்குள்ளாவர். இறைநினைப்போடு பிரிபவர் மீண்டும் பிறப்பதில்லை.*

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. *என்பது குறள்.*

*சிங்கமுகாசுரன் அம்பிகைக்குச் சிங்கவாகனமாக அமர்ந்தான். முருகனை உள்ளத்தாற் பக்திசெய்து ஞானத்தின் சொரூபமாகிய சகலலோக ஏகநாயகியின் வாகனமானான். மங்கையுமை மகிழ வருபாலன் குமரன், 'பார்வதி ப்ரிய நந்தனாய நம': என்பது முருகனுடைய நூற்றெட்டு மந்திரங்களில் ஒன்று. சிங்கனின் அழிவு கேட்டுச் சூரன் செங்கட்புனல் பெருக வாயிற்ப் புகை செல்ல வாடிப் பதைபதைத்து நெருப்பை விழுங்கினவன் போல் வீழ்ந்தான்; அலறினான்; புலம்பினான். மாயையாகிய தாரகனும் அழிந்தான். கன்மமாகிய சிங்கனும் அழிந்தான். ஆணவமாகிய சூரன் எஞ்சியிருக்கிறான்; ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளுடன் இறுதிப் போராட உறுதியுடன் வந்தான் சூரன். தேவேந்திரன் அது கண்டு அஞ்சினான். நாரணன் அவனுக்கு ஆறுதல் அளிக்கின்றார்.*

சூரனே முதலோர் தம்மை
இமைப்பினில் தொலைக்க உன்னின்
மூரலால் அடுவன் கொண்ட
முனிவினால் அடுவன் வாய்மைச்
சீரினால் அடுவன் நாட்டச்
செய்கையால் அடுவன் என்றால்
நேரிலா முதல்வன் வன்மை
யாவரே நிகழ்த்தற் பாலார்.

சூரன் முதலிய அசுரர்களை எம்பெருமான் ஒரிமைக் கணத்தில் அழிக்க வேண்டுமென்றும் திருவுளஞ் செய்வாராயின் திருப்புன்முறுவலால் அழிப்பர்; சினத்தால் அழிப்பர்; ஒரு சொல்லினாலும் அழிப்பர்; பார்வையினாலும் அழிப்பர். ஒப்பில்லாத முழுமுதற் கடவுளின் ஆற்றலை உரைப்பார் எவர்? என்பது இப்பாடலின் பொருள். சூரன் சேனையைக் கண்டதும் ஆண்டகை முருகனோடு அளந்தறியும் அறிவைப் பெறுகின்றான் இந்திரன். யாவையுமாய் அல்லையுமாய் அளந்தறிய முடியாத நங்கட்கெல்லாம் மூலமாயிருந்த மூவிருமுகவள்ளலின் பெருமை இப்பாடலில் உணர்த்தப்படுகிறது. முருகப்பெருமானும் சூரபன்மனும் கடும் போர் புரிந்தார்கள். அசுரவெள்ளத்தை அசுரவேகத்தில் அறுமுகத்தமலன் அறுத்தொழித்தார்; அண்டங்கள் தோறும் இருவரும் சேர்ந்து சென்று போர் புரிந்தார்கள்; சூரன் பல்வேறு உருவங்களைக் கொண்டு போரிட்டான். அண்ணலும் அவனுடைய மாயா வடிவங்களையெல்லாம் விளையாட்டாக அழித்தனர். சூரனுக்குத் தமது தூயவிசுவரூபத்தை காட்டியருளுகின்றார் எம்பெருமான். சூரன் தவத்தின் பெருமையால் அதனைக் காணும் பெரும் பேறடைகின்றான். கண்களிப்பக் காண்கின்றான்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன்என் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்'
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ.

இப் பாடலின் பொருள்: "அழகிய மயிலின் மீது விளங்கிய இந்தக் குமாரரை அந்நாளில் பாலன் என்று எண்ணினேன். இப்பெருமைகளை நான் அறிந்தேனில்லை. திருமால், பிரமா முதலிய தேவர் யாவர்க்கும் மூலகாரணமாக நின்ற கடவுளே இந்த மூர்த்தியாகும்" என்பதாகும். அண்டமும் புவனம் யாவும் அமரரும் புறவுந் தன்பால் காட்டிடும் வடிவம் விசுவரூபம். அவ் வடிவத்தில் மயில்மீது குமரனைக் காண்கின்றான். மயில் பிரணவத்தைக் குறிக்கும். ஓம் என்னும் தனி எழுத்தின் நாதத்துள் அடங்கியிருப்பது மயில்மேல் இருத்தலாகும். குமரன் - அரன்மகன் என்னும் பொருளது. பாலன் என நினைத்தவன் இப்போது அரன்மகனாகக் காண்கின்றான். மாலயன் தமக்கு மட்டுமல்ல; யாவருக்கும் மூலகாரணமாய் நின்றவன். யார்க்கும் என்பதால் எமக்கும் எனத் தன்னேரில்லா இறையெனத் தன்னைத்

*தருக்கிய சூரன் நினைக்கிறான். செருக்கு நீங்கிய நிலையில் முருகனை முன்பாகக் காண்கிறான். 'இம்மூர்த்தி' என்று அண்மை சுட்டாற் கூறி மிக அண்மையிற் காண்கிறான். பாலன் என்றவன் குமரனைக் காண்கிறான். இப்போது வலியடங்கிய நிலையில் குமரமூர்த்தியாகக் காண்கிறான். அருள்செய் கோலமே மூர்த்தம். பாலனுக்கு முன்னாக நின்றவன் குமர சந்நிதியில் நிற்கின்றான். எதிரியாக அல்ல. எதிரித் தன்மையைச் சந்நிதான விசேடம் அழித்துவிட்டது. ஈசன் இவனெனச் சூரன் காண்கிறான். நூற்றெட்டு யுக ஆயுளும் ஆயிரத்தெட்டண்டமும், பிறவும் பெற்றுப் பெருமை தலைக்கேறிய சூரன் அவையெல்லாம் அறுமுகச் செம்மல் தூய பொற்பத உரோமமொன்றிற் கண்டு அற்புத விம்மிதனாகித் தன் சிறுமை யுணரப் பெறுகின்றான். புனிதன் தூய அருள் வடிவில் சூரன் கண்டது திருவடிவில் ஒரு சிறிய உரோமம். அஃ தொன்றே அவனைத் திருத்திவிட்டது. அகந்தை போயது. புகுந்தது, போதம், கும்பிட நினைக்கின்றான்.*

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டு மங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலு
ஆழுதல் வேண்டுந் தீமை யகன்றுநா னிவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மான மொன்றே.

*"நானிவற் காளாகி வாழுதல் வேண்டு' மென்று நினைத்தவனை தடுக்கிறது மானம். மானமே வீரமாகக்கொண்ட மானவீரன் சூரன்; 'எண்ணில்லாத காலம் தேவரைத் துன்புறுத்திய நாம் இப்போது முருகப்பெருமானால் வலிமை குன்றி அழிகின்றோம்" எனப் பானுகோபன் சூரபன்மனுக்குக் கூறிய போது.*

மானமு தழிந்து தொல்லை வலியிழந்து உலகில்' வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வ துண்டோ.

*என மானத்தையே பெரிதாக மதித்துப் பானுகோபனைப் போருக்கனுப்புகின்றான் சூரன். அகத்திலே அண்ணலின் தாள்களை வலம் வந்தான்; அங்கையாற் தொழுதான்; சென்னி தாழ்ந்தான்; நா துதித்தது; தீமையகன்று ஒளி பெற நின்றான். நெஞ்சம் ஆளாகி நின்றவனைத் தடுத்தது மானம். வானவர் செய்த நல்வினை தடுத்ததால் பரிச தீட்சை பெற வேண்டியவன் அதனைப் பெறாது நயன தீட்சையைப் பெற்றான். உடலழிந்தாலும் முருகனுடன் அமராடி நின்ற புகழ்*

என்றுமழியாது எனச் சூரன் எண்ணிநின்ற போது மெய்யுணர்வைச் சிறிது நல்கி மெய்யுணரவைத்த பெம்மான் தன் பெருவடிவம் நீத்துச் சூரன் போதமும் மாற்றித் தொன்மை போலாகி நின்று காட்சி கொடுத்தார். சூரன் மயக்கவுணர்ச்சி மேலிட மீண்டும் போருக்காயத்தமானான். பேரிருள் வடிவம் கொண்டு தேவர்கள் எல்லாரையும் விழுங்க முயன்றான். வெருவிய தேவர்கள்

நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம் ஓலம்

தேவர்கள் தேவே ஓலம் சிறந்நசிற் பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்.

என்று புனித மூர்த்தியின் பொற்கழல் நீழல் நின்று ஓலமிட்டார்கள். ஓலம் -அடைக்கலக் குறிப்பொலி. நின் திருவருளை விரைவில் தந்தெமை யாட்கொள் என்ற குறிப்பில் பலமுறை ஓலமிட்டார்கள். முருகன் திருவருள் பாலித்தான். வேல் சென்றது. கடல் நடுவில் மாமரமானான் சூரன். வேல் அதை பிளந்தது. சூரன் வேலை எதிர்த்தான். அது அவனுடைய வாச்சிர யாக்கைப் பிளந்தது. ஒரு கூறு சேவலாகவும் மற்றொரு கூறு மயிலாகவும் வந்து கந்தவேள் முருகனை நோக்கினால் கொடியாகவும் வாகனமாகவும் வந்திக்கும் வாழ்வை பெற்றான். ஆணவம் திருவருள் ஞானத்தால் வலிகெட்டது என்பது நுட்பம். நான் என்னும் அகந்தையே சேவலாகவும், எனது என்னும் மமதையே மயிலாகவும் விளங்கியது. சேவலும் மயிலும் போற்றி என வாழ்த்துவர் முருகனடியார்கள். முருகனருளினாலே ஆட்கொள்ளப்பட்ட சூரனுக்கே போற்றி சொல்கிறது சைவ உலகம். அம்முறையே நாமும் போற்றி அமைவோம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

# குஞ்சரி மணாளன்

பிறப்பதும் இறப்பதும் பெயரும் செய்கையும்
மறப்பதும் நினைப்பதும் வடிவம் யாவையும்
துறப்பதும் இன்மையும் பிறவும் சூழ்கலாச்
சிறப்புடை அரனடி சென்னி சேர்த்துவாம்

காலமாய்க் கால மின்றிக் கருமமாய் கரும மின்றிக்
கோலமாய்க் கோல மின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞால மின்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்.

*குகநேயச் செல்வர்களே!*

*தேவகுஞ்சரியை திருமணம் புரிந்து தேவர்களுக்கு அருட்காட்சி நல்கிய முருகப்பெருமானுடைய திருமணத்தை நினைக்க இன்று வாய்ப்புப் பெற்றுள்ளோம், கருமமாய்க் கருமமின்றி, கோலமாய்க் கோலமின்றி குணங்களாய்க் குணங்களின்று விளங்கும் குன்றெறிந்த வேலன் தேவகுஞ்சரியைத் திருமணங் கொண்டருளிய வரலாறு அரியதோர் திருவருள் நிகழ்ச்சியாகும். திருமண வாழ்வை மங்கள வாழ்வு என்பர் வள்ளுவர். இல்லறம் தழைக்கும் வாழ்வே மங்கல வாழ்வு. இல்லறமே நல்லறம். விருந்தோம்பற் பண்பு வளரும் இடம் அதுவே. அன்புக்குரிமையாலும் அறிவுடைமையாலும் ஆதரவுபட்டு அறம் வளர்க்கும் யாகசாலை. இல்லறம் இஃதின்றேல் உலகம் அழிந்துவிடும். திருமணம் இறைவன் திருவுளப்படியே நடக்கிறது. இறைவன் பெண்பாலுகந்து அனைத்துயிர்க்கட்கும் தாயும் தந்தையுமாய் காட்சி அளிக்கிறான். உலகியலும் இதுவே. ‘பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே” எனச் சீர்காழிக் குழந்தைச் செப்புகின்றது. உலகத் திருமண நோக்கை தெய்வத் திருமணங்களில் காட்டுகின்றார்கள். தெய்வப்புலவர்களும் தெய்வக்கோயிலாரும் புலவர்கள் கருத்துக்களைக் கதைகளில் வைத்துச் சொல்லுகிறார்கள், வைத்தியர் மருந்தைச் சர்க்கரையில் குழைத்துத் தருவதுபோல, கருத்து மருந்தாகவும்: சர்க்கரை*

கதையாகவும் அமைகிறது. கோயில் மக்களில் கருத்துக்கள் குறிகளால் காண்பிக்கப்படுகின்றன. தெய்வத்திருமணங்களில் தெய்வத் தத்துவம் பேசப்படுகிறது. அதை நாம் உணரவேண்டும் எம்பெருமான் என்றும் பிரமச்சாரி. குமாரன் என்ற முருகனுக்குப் பெயர் உண்டு. இளம்பிராயமுடையவன் எனவே, பிரமச்சாரி எனப் பொருள் தரும். அம்பிகையைக் கன்னியெனவும் சிவனைப் பிரம்மச்சாரி எனவும் நூல்கள் கூறுகின்றன

துன்னிய உயிர்கள் யாவும் தொல்லுல கனைத்து மீன்ற
கன்னிகை உமையாள் தன்னை

எனக் கந்தபுராணம் அனைத்தும் ஈன்றவளைக் கன்னிகை எனக் கூறுகின்றது. சீகாழிச் சிவக்கன்றும் 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்' எனத்தமிழ் பாடுகின்றார். தாயை மலடி என்பதுபோல நோக்குப்பட்டாலும் உண்மையுணர வேண்டும். இவ்வுண்மையை அருணந்தி சிவாச்சாரியார்.

சிவஞ் சத்தி தனை ஈன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்.

என்று கூறி விளக்குதல் காண்க. 'எத்திறம் என்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்' என்ற வாக்கும் நோக்கற்பாலது. இறைவனும் சக்தியும் பிரிக்க முடியாத தன்மையில் இயைந்துள்ளது. சுவையைப் பழத்திலிருந்தும் இசையைப் பண்ணிலிருந்தும் ஒலியை மணியிலிருந்தும் பிரிக்க முடியாதது போலவே சிவமும் சக்தியும் ஒன்றியிருக்கும். இதை உலக வழக்கையொட்டி நாயகன் நாயகி என்று நூலோர் கூறுவர். சத்தி நிலையிலும் இச்சா,கிரியா,ஞான சக்திகள் என முத்திறமாகக் கூறுவர். இறைவன் இச்சாசத்தியோடு கூடுவதையும் கிரியாசத்தியோடு கூடுவதையும் திருமண வைபவமாகக் கொண்டு மகிழ்வர். உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தற்கு இரங்கும் நிலை இச்சாசத்தி. சிவத்தைச் சார்வதற்கு வேண்டப்படும் உபயங்களான ஐந்தொழிலை வகுக்கும் நிலை கிரியாசக்தி. சிவத்தைச் சார்வதற்கு வேண்டும் உபாயங்களை அறியும் நிலை ஞானாசக்தியாகும். இம்மூன்று சக்திகளும் இறைவனுக்குண்டுடென்பது அவன்

ஆன்மாக்கள்பால் வைத்த பெருங்கருணையைக் குறிப்பதுவாகும். முருகனுக்கும் இச்சாசக்தியாகிய வள்ளிப்பிராட்டி, கிரியாசத்தியாகிய தேவகுஞ்சரி, ஞானசக்தியாகிய வேல் ஆகிய மூன்றும் கூறப்படுகின்றன. இவற்றையே மூன்று மனைவியர் எனக்கூறாநிற்பர். தமிழ்க் கடவுளாகிய முருகவேள் தேவகுடியில் வளர்ந்த தேவயானைக் கற்பியலுக்கு இலக்கியமாகவும், தமிழ்க்குடியில் வளர்ந்த தமிழணங்காகிய வள்ளிநாயகியைக் களவியலுக்கு இலக்கியமாகவும் மணம்புரிந்து உலகிற்கு இரு இயல்புகளையும் அறிவுறுத்தினார் என்க.

**மிக்குச் சோதிக்கவேண்டா:**

தெய்வத் திருமணங்களை உலகியலில் வைத்துச் சோதிக்கலாகாது. புகலியர்கோன் புகலுகின்றார்.

ஏதுக் களாலும் எடுத்தமொழி யாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.

மக்களறிவு சோதித்துத்தான் பார்க்கும். இன்றேல் அது விலங்கறிவாகும். ஆனால், மக்கட் பண்போடு சோதிக்க வேண்டும். பண்பு வளரும் வழியில் சோதிக்க வேண்டும். சுடர்விட்டுள்ள சோதியை மிக்குச் சோதித்த மாலயன் மாதுக்கமடைந்ததைப் புராணங் கூறுகிறது. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதித்து மனம் பற்றி வாழவேண்டும் என்கிறார். ஞானத்தின் திருவுரு ஆகும் வழியில் சிந்திக்க வேண்டுமேயன்றி சாகும் வழியில் சிந்திக்கக்கூடாது என்பது ஞானக்குழந்தையின் அறிவுரை. நாம் நமது இயல்புக்கிணங்க இறைவனைப்பல உறவுகளில் வைத்து உறவாடுகின்றோம். பாரதியார் கண்ணனைத் தோழனாகவும், காதலனாகவும், சேவகனாகவும், காதலியாகவும் பல உறவுகளில் வைத்து அனுபவிப்பதை நாம் காணலாம். மணிக்கவாசக சுவாமிகளும் “ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க” என இறைவன் ஒன்றாயும் பலவாயும் இருக்குந் தன்மையை எடுத்தோதுகின்றார்.

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி. ...

*என ஒருவனாயும், அப்பனாயும், குருவனாயும் போற்றி செய்தல் காண்க. உண்மை நூற்பொருளுணர்தலே இத்தகைய திருமணங்களின் உட்கிடக்கையாம். முருகன் கிரியா சக்தியுடன் இணைந்ததுதான் குஞ்சரி திருமணமெனப் பேசப்படுகிறது.*

**இந்திரன் கடனாற்றல்:**

*சூர் தடிந்ததும் முருகப்பெருமான் திருப்பரங்குன்றத்தை அடைந்தார். இந்திரன் தான் வளர்த்த தெய்வயானை அம்மையாரைத் திருமணஞ் செய்து கொடுக்க விரும்பினான்; இதனை மாலயன் தேவராதிய ருக்கு அறிய உரைத்தனன். 'முருகனை மணக்கச் சரவணப் பொய்கைக் கரையில் முன் தவமிருந்தவள் தேவகுஞ்சரி. அத் தவப்பயன் வந்து கூடுகின்றது'. ஒற்றர் மூலம் இந்திரன் மேருமேலையிற் தங்கியிருக்கும் தன் மனைவிக்குப் புதல்வியுடன் திருப்பரங்குன்றத்திற்கு வருமாறு தெரிவித்தான். அவ்வாறே இந்திராணி தேவகுஞ்சரியுடன் வந்தபோது உவகையால் நிறைந்தனன். இந்திரன் வேற்கைப்பெருமான் கழலடியில் மலர் தூவிப்பணிந்து கூறலுற்றான்.*

கன்னின்ற மொய்ம்பின் அவுணக் களை கட்டல்செய்தா
யிந்நின்ற தேவர் சிறைமீட் டனை என்றனக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தா யது முற்றுநாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன் செயத் தக்கதுண்டோ.

*தாழ்ந்துநின்று பெருமான் திருவுளக்கிடக்கையை அறிய விரும்புகின்றான் இந்திரன். அவுணர்களை அழித்துத் தேவர் சிறைமீட்ட இந்திரப்பதத்தை மீண்டுமளித்த செய்ந்நன்றியை நினைக்கின்றான். செய்ந்நன்றி மறந்த ஒரு குற்றமே அவுணர் குலத்தை அழித்தது. அதை மறவாது கடனாற்றலே சிறந்த அறமேனச் சிந்தித்த இந்திரன் திருவுளக்கருத்தை நாடி நிற்கிறான். நன்றிக் கடனை ஒல்லும் வகையால் செல்லும் வாயெல்லாம் செய்யலாம். கரமலர் கூப்புவதால், புகழ் பாடுவதால், கண்ணீர் மல்கி நிற்பதால், கேட்டுளம் நெக்குநெக்குருகுவதால் நன்றிக்கடனாற்றலாம். மாணிக்கவாசகர் கூறுகிறார்.*

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே.

*சிவ அனுபோகத்தில் நின்று, "ஈசனே! என் உடல் இடங் கொண்டு தந்த அந்தமொன்றில்லா ஆனந்தத்திற்கு என்ன கைம்மாறு செய்யவல்லேன்" என்று ஆனந்தமெய்துகின்றார் மாணிக்கவாசகர். ஒன்றைக்கொடுக்கும் போது தான் செய்நன்றி பூரணமாகின்றது. முப்போதும் மலர்தூவி தேவர்கள் நன்றி செலுத்துகிறார்கள். 'பூக்கைக் கொண்டு அரன் போற்றுகிறார் ஆக்கை காக்கைக்கே யிரையாகும்' என்கிறார் அப்பரடிகள். மலரில்லாவிட்டால் ஒரு பச்சிலையாவது இடுங்கள் எனக் கூறுகிறார் திருமூலர். இந்திரனும் தமக்கு நன்மை செய்த பெருமானுக்குக் குஞ்சரியைத் திருமணம் செய்து வைப்பது வாயிலாக நன்றிக் கடனாற்ற விரும்புகிறான். அப்போது எம்பெருமான் "உன் மகள் என்னை யடையவேண்டு மென்று அன்புடன் தவஞ்செய்தவள்; ஆதலால் உன் நினைவுப்படி நாளை மணமுடிப்போம்" என அருளிச் செய்தார். கன்னியர் விரும்புவது சிவனடி பணியுங் கணவரையே. இதற்காக அவர்கள் பாவை நோன்பு நோற்பது வழக்கம். அதனை மாணிக்கவாசகர்,*

உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவர் ஆவார்"

*என்று கூறியருளுவதாலும்,*

எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க

*என்று அருளுவதாலும் அறியக் கிடக்கிறது.*

**சிவ வாழ்வு:**

முருகப்பெருமான் தெய்வயானை அம்மையாரைத் திருமணம் புரியத் திருவுளங்கொண்டதும், அமரேந்திரன் ஆராவுவகை கொண்டு, தூதர்முகம் நோக்கி, முசுகுந்தனாதி காவற்கடவுட் தலைவருக்கும் வானவர்க்கும் திசையோர் முனிவரானோர் அனைவர்க்கும் கந்தவேளின் கடிமண நாளை அறிவிப்பீர்களாக எனக்கூறி அனுப்பிய பின், வானவர் கம்மியனை அழைத்துத் திருமணத்துக்கான அலங்காரச் செயல்களையெல்லாம் முற்றும்படி கட்டளையிட்டான். அவ்வாறே கம்மியனும் குலமணிகுயிற்றிய மண்டபமமைத்து விதானவகை போக்கி மாலைகள் தூக்கி அறுமுகன மர நூலின் முறையாகத் தவிசுமொன்றமைத்து நின்றான்.

மன்றல்பயில் கின்றவது வைக்களன் மருங்கிற்
குன்றுபுரை பல்சிகர கோபுரம்' வகுத்தான்
அன்றிமணி மண்டப மளப்பில வமைத்தா
னின்றியமை யாப்பொதுவு மெண்ணில விழைத்தான்.

அன்றியும், சோலை மலர்வாவிகள் சுனைத்தொகைகளும் தொகுத் தான். வதுவைக்குரிய எல்லாம் அளித்துச் சிவலோகமாக அழகு செய்தனன். அறுமுகத்தண்ணல் வதுவை செய்களம், மன்றல் பயில்கின்ற களம். தேவராதி யனைவரும் தத்தமக்குற்ற ஓர் நிகழ்ச்சியாகக் கருதி மனப்பூரிப்பும் நிறைவுமெய்திச் சிவவாழ்வு பெறுகின்றனர். சிவலோகத்தையே தரிசிக்கின்றார்கள். சிவவாழ்வு பெறுமத்தேவர்கள் நல்ல காரியங்கள் நிகழும் போது நல்லவராக எல்லாரும் மாறுகின்ற நிலையை நாங்கள் காண்கின்றோம். திருமண வைபவம் திருநிறை வாழ்வை எல்லோருக்கும் நல்குகின்றது. சிவலோக வாழ்வை அகக்கண்களால் பெறுகிறார்கள்.

முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்.

என்கிறார் தவயோகி திருமூலர். 'கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி' என்பதும் நோக்கத்தக்கது. ஊனக்கண் களாகிய புறவிழிகள் குறைபாடுடையவை. பொய்க்காட்சியுடையவை.

*ஞானக்கண்ணாகிய அகவிழி குறைபாடில்லாதது. மெய்க்காட்சி யுடையது. மெய்க்காட்சியே ஆனந்தமாகும். இவ்வானந்தம் சிவவாழ்வை நல்கி நிற்கும்.*

**முசுகுந்தன் வரலாறு:**

*அறுமுகத்தண்ணல் திருவுளப்படி முசுகுந்தனும் வதுவை காண வருகின்றான். குரங்கு முகத்தை உடைமையால் முசுகுந்தன் என்று பெயர் ஏற்பட்டது. சோழர் குல மன்னவனாகிய இவனின் தவ வாழ்வும் செங்கோலும் சோழர் பரம்பரைக்கே பெருமையைக் கொடுக்கிறது. இம்மன்னன் முசுமுகத்துடன் பிறந்தது நமது தவ வாழ்விற்கும் வழிகாட்டுகின்றது. முற்பிறப்பில் கயிலைவாழ்வு பெற்றவன் இவன்.*

கல்லருவி தூங்குகயி லைப்பொழிலின் மேனா
ளல்லுறழ்மி டற்றவனும் அம்பிகையு மாக
வெல்லையில் மகிழ்ச்சியொ டிருப்பமுசு வீட்டம்
வில்லுவ மரந்தொறும் வியன்சினையி லுற்ற

*அப்பொழுது ஒரு குரங்கு வில்வமரத்திலைகளை பறித்துக் கறைமிடற்றவனுக்கும் அம்பிகைக்கும் மேல் சொரிந்தது. அம்பிகை இச்செயல் கண்டு கோபித்திடலும், எம்பெருமான் அம்பிகையைப் பார்த்து "அது எம்மையீண்டு வழிபட்டுள்ளது, சினங் கொள்ளா தொழிக" என்றிடலும் அம்பிகை சினந்தணிந்து அருள் செய்தாள். அப்பனும் அம்முசுக்கலையின் மனத்திருளகற்றி மெய்யுணர்வை நல்கியபோது அம்முசு மரத்தினின்றும் இறங்கி ஐயனையும் தேவியையும் ஆர்வமொடு தாழ்ந்து "பொய்யடியேன் பிழை பொறுத்திர்'' என வணங்கி நின்றது. "பிழையென அஞ்சேல்!" வில்வமெல்லிலைகளிட்டு வழிபடல் புரிந்தபடியால் அரசர் குலத்திற் பிறந்து முழுதுலகையும் ஆள்க" என்று எம்பெருமான் அருளினார். இவ்வாக்கைக் கேட்டலும் கலங்கி இடருற்று விம்மி இரங்கிக் கூறுகிறது முசுக்கலை.*

நுங்களை வைகலு நோக்கி யுவப்பா
யிங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனே
லெங்கள் பிரான்பினை யெங்ஙன முய்கேன்.

*என்றபொழுது பிறையணிந்த பெருமான்,*

என்னலு மன்னதை யெம்மிறை கேளா
நின்னுள நன்று நிலத்திடை வைகிப்
பின்னிவண் மீள்குதி பேதுற லெய்தி
முன்னலை யாது முசுக்கலை என்றான்.

*தேவலோகம் இன்ப நுகர்ச்சிக்குரியது. நரகலோகம் துன்ப நுகர்ச்சிக்குரியது. பூமி இன்ப துன்ப நுகர்ச்சிக்குரியது. தேவர்களுக்குத் துன்ப நுகர்ச்சியில்லை. நரகர்களுக்கு இன்ப நுகர்ச்சியில்லை. பூவுலகவாசிகள் இவ்விரு நுகர்ச்சிகளையும் மாறி நுகர்வதால் மயக்கவுணர்ச்சியை அடைகிறார்கள். 'பூவுலகத்திற் பிறந்து மங்குறு செல்வ வலைப்படுவேனே' என்று கவலை எய்துகின்றது அக்குரங்கு.*

**வரம் வேண்டல்:**

*மாநில வாழ்வு மயக்கத்தைத் தருவது என்பது தெளிவாகின்றது. மயக்கையறுப்பதுதான் மானுடப்பிறவியின் நோக்கம். தேவராயினும் நரகராயினும் மானுடராய்ப் பிறந்துதான் மயக்கறுத்து முத்தியடைய வேண்டும். இன்பமும் துன்பமும் இல்லாத நிலை முத்தி நிலை. கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் அடையும் நிலை அது. இறைவன் திருவடி வேண்டுதல் வேண்டாமையில்லாதது. மாதேவனுக்கு ஏகாந்தமாயிருப்பதற்கு மாநிலமே உகந்தது. அதனால் உலகவாழ்வை இறைவன் நல்கினான். கயிலையில் சிறுபிழை செய்த சுந்தரர்க்கும் இந்நிலையே எய்தியது. அப்போது சுந்தரர்.*

கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்
செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையல் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்யென.

*இறைவனைத் தொழுது நின்ற நிலையைச் சேக்கிழாரடிகளும் கூறியருளுவது ஒப்பு நோக்கத்தக்கது. உண்மையறிவு வாய்க்கப்பெற்ற அம்முசுக்கலை கேட்டு நின்றவரம் போற்றுதற்குரியது.*

பொய்ம்மறை யான புலாலுடல் போற்றி
யம்மையில் வாழ்விடை யற்றமு றாமே

யிம்முக னோடுற வெற்கரு ளென்னா
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே.

*கயிலைற் பெற்ற மெய்யுணர்வோடு பூவுலகிலே பிறக்கும் பொழுதும் குரங்கு முகத்துடன் பிறக்க வேண்டும் என அம்முசுக்கலை வரங் கேட்கிறது. சுந்தரரும் தான் கேட்ட வரத்திலே மானுடமாய் மயங்கும் பொழுது தடுத்து ஆட்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார். ஆனால், பூமியிற் பிறந்தபின் சுந்தரர் மயங்கிவிட்டார். இறைவனை அவரால் அடையாளங் காண முடியவில்லை என்றாலும் கயிலையில் கூறிய வாக்கை நினைத்து இறைவன் எழுந்தருளி யாட்கொள்கின்றார். முசுகுந்தன் திருவடி மறவாச் சிந்தனையுடன் மானிடனாய்ப் பிறந்து மயக்கமின்றி வாழ்ந்தான். பெருந்துன்பத்தில் மூழ்கினாலும் ஆக்கமிழந்தாலும் வளம் சுருங்கினாலும் வாய்மை காத்த பெருமை அரிச்சந்திரனுக்கு உண்டு. அந்த அரிச்சந்திரனின் வழித்தோன்றலே முசுகுந்தன். அவனுடைய பிறப்பு பெருமைக்குரிய பிறப்பாக அமைந்துவிட்டது.*

**திருமணத்துக்கு வருபவர் நிலை:**

*திருமணச் செய்தியை வள்ளுவன் மூலம் இந்திரன் எங்கும் அறிவிக்கின்றான். எங்கணுமுள்ள மக்கட் கூட்டமும் சேனையின் வெள்ளமும் திருப்பரங்குன்றத்திற்குத் திரண்டு வருகின்றன. கந்தப்பெருமானின் திருமணச் செய்தி கேட்டு ஆடவரும் பெண்டிரும் பெருமகிழ்ச்சியடைகின்றனர். திருமணத்துக்குச் செல்லவேண்டுமென்று நினைத்தபொழுதே பெரிய அற்புதம் நிகழ்கிறது.*

கையிலார் கைகள் பெற்றும் காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்று மூங்கைகண் மொழியைப்பெற்றும்
மையல்சேர் குருட ரானோர் வாள்விழி பெற்றுஞ் சென்றார்
ஐயன்மே லுள்ளம் வைத்தார்க் கனையதோ வரிது மாதோ.

*என்று இக்காட்சியை அகக்கண்ணால் கண்டு கசிந்துருகிப்பாடுகின்றார் கச்சியப்பர். ஐயனைக் கண்டு தொழக்கையில்லாதவர் கைகளைப் பெற்றார்கள். வலம்வரக் காலில்லாதவர் கால்களைப் பெற்றார் கள். தளர்ச்சியுடையவர்கள் வலிமை பெற்றார்கள். ஊமைகள்*

பேசப்பெற்றார்கள். குருடர்கள் கண்விழி பெற்றார்கள். முருகப்பெருமானை நினைந்து வாழ்பவர்களுக்கு இவைகள் எல்லாம் அரிய காரியங்களன்று. ஊமையாயிருந்த குமரகுபரரைப் பேசவைத்துக் கந்தர் கலிவெண்பாவை பாடவைத்தவன் முருகன். நல்லதை நினைத்தால் நல்லதையே அடையலாம். இதனாற்றான் "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்க" என்றார் வள்ளுவர். எண்ணம் சிறந்தாற்றான் மனிதப்பிறவி சிறப்படையும். மனமே பந்தத்திற்கும் முத்திக்கும் காரணமானது. அம் மனதை ஆண்டவன் திருவடியிற் சேர்த்து விட்டால் துன்பமனைத்தும் அவனுக்கே பாரமாகிவிடும். இங்கே தெய்வத் திருக்கல்யாணத்தின் நினைப்புப் பெற்றவர்கள் எல்லோரும் ஊனம் அகன்று வடிவு பெற்றார்கள் என்பதை காண்கின்றோம்.

பொய்யடிமை இல்லாதவர் புலவர் அவர்கள் மாசற்ற புலமை உடையவர்கள். அதனால் நிறைவை மிகுதியும் பாடுவார்கள். நிறைவைப் பாடினால் குறைதானாக நீங்குமன்றோ! அறுமுகப்பெருமானுக்கு திருமணம் என்று கேள்விப்பட்டதும் ஆடவரும் பெண்டிரும் பூம்புனலாடிக் களிக்கின்றார்கள். அக்காட்சியை கந்தபுராணத்தில் காண்போம்.

> தாம்பெறு கொழுநர் தம்மைத் தத்தமக் குரிய புத்தேள்
> ஆம்பரி சுன்னுந் தன்மை ஐயம தில்லை யென்னக்
> காம்புறழ் தடந்தோள் நல்லார் கணவர்மேற் கரத்தா லள்ளிப்
> பூம்புனல் வீசு கின்றார் பூசனை புரிகு வார்போல்.

கணவர்மேல் பூம்புனலை அள்ளி வீசுகின்றார்கள் பெண்கள். இதனை "பூசனை புரிதல்" என்று உயர்த்தி அழகாக மொழிகின்றார் கவிஞர். தம் கணவரையே முருகனாகக் கண்டு போற்றுகிறார்கள் என்பது குறிப்பு.

**முகூர்த்தம் வைத்தல்:**

திருமணத்தை நடாத்தப் பிரமதேவர் நியமிக்கப்படுகிறார். முகூர்த்தம் எதுவோ என்று வினாவுகின்றான் இந்திரன். "செப்புகின்றதென்? அறுமுகப்பரமனுக்கு எப்பொழுதும் இனியதே என்றாலும் உரிய

*முகூர்த்தம் இவ்வெல்லையில் அமைந்துள்ளது" என்றார் பிரமதேவர். காலங்கடந்தவனுக்குக் காலங் கணிக்கிறார்கள். அவனுடைய அடியவர்களுக்கே எல்லா நாளும் நல்ல நாளென நூல்கள் கூறுகின்றன. மதுரைக்குப் புறப்படவிருந்த ஞானக்குழந்தைக்கு "நாளும் கோளும் நன்றாயில்லை" என்று அப்பர் கூறிய போது,*

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
　　　　மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
　　　　உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
　　　　சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
　　　　அடியா ரவர்க்குமிகவே.

*என்று பாடியருளி மதுரைக்குப் புறப்பட்டார் ஞானச்சிறுவர். அங்கே வெற்றியும் பெற்றார். இங்கே முருகப்பெருமானின் திருமணத்துக்குரிய முகூர்த்தம் உலகியல் நெறியோடொட்டி அறிவுறுத்தும் பொருட்டுப் பேசப்பட்டது.*

*இது இவ்வாறிருக்க, முத்தேவரும் முன்செல்ல, முனிவர்கள் புடைசூழ வருகின்றார் முருகப்பெருமான். தேவேந்திரன் கரங்கள் குவித்து இறைஞ்சி நிற்கின்றான். திருமண மண்டபத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று பணிவாக அழைக்கின்றான். பெருமானும் மயில்மீது ஆரோகணித்து மணச்சாலையை அடைகிறார். இந்திராணியும் அரம்பையரும் அவர் பாதங்களைப் பாலால் அபிஷேகித்து மலர் தூவி வழிபடுகின்றனர். ஐயனும் திருமணத்துக்குரிய ஆசனத் தமர்ந்து காட்சி கொடுக்கின்றான்.*

**மணமகள் வருகை:**

*தேவகுஞ்சரியை அழைத்து வரும்படி இந்திரனிடங்கூற அதனையேற்று அரம்பையர் கூடிச்சென்று அழைத்து வருகின்றனர்.*

கல்லுயர் பொருப்பிடை காமரடி செல்ல
வல்லானகொ லென்றுமணி நூபுர மரற்ற

மெல்லிடை வருந்துமென மேகலை யிரங்க
எல்லவரு முண்மகிழ எம்மனை நடந்தாள்.

*கல்லுயர் பொருப்பென்பது திருப்பரங்குன்றம். ஆறுபடை வீடுகளில் முதலாவதாக அமைந்தது. அங்கு விளங்கும் பாறைகளும் ஓங்காரத்தையோ ஒலிக்கின்றன என்பது சங்க இலக்கியம். அத்தகைய தெய்வத் திருமலையில் தெய்வயானை நடந்து வருகின்றார். முருகன் திருப்பாதங்கள் நடந்து பழகிய குன்றில் குஞ்சரி நடந்து வருகின்றார்.*

பஞ்சிதனின் மெல்லடி பனிப்பவரை யின்பாற்
குஞ்சரி நடந்தசெயல் கூறுபுது மைத்தோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி தீயேன்
நெஞ்சக அடுக்கலினு நின்றுலவு மென்றால்.

*எனப் புராணகாரர் புகழுகிறார்.*

*உள்ளமாகிய கல்லைக் கனிவித்துத் தன் கழலடியைப் பதிய வைப்பவன் முருகன். இங்கே சாதாரண மலைப் பாறையிலே குஞ்சரி நடப்பது வினோதமில்லையே! மனப்பாறையிலே முருகன் திருவடி நடப்பதுதான் விநோதமானது என்கிறார் கவிஞர்.*

**திருமணம்:**

*பிரமதேவர் திருமணக் கிரியைகளை செம்மையாகப் புரிகிறார். அறுமுக அண்ணலின் திருக்கையிலே குஞ்சரியை நல்கித் தாரைவார்த்து கொடுக்கின்றான் இந்திரன்.*

மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்திபொ ருட்டினில் ஒண்புன லுய்ப்பக்
கரத்திடை யேற்றன னாற்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொண் முத்தியு மாக்கமும் ஈவோன்.

*தனது திருவடியை வணங்குகின்ற அடியவர்க்கு செல்வமும் முத்தியும் வழங்குகின்ற பெருமான் இந்திரனிடம் கைநீட்டி ஏற்றருளினார் என்பது திருவிளையாடலன்றோ!*

*இந்தத் தெய்வத் திருமணத்தைக் கண்டவர்கள் எல்லோரும் முருகனொளி பெற்றுப் பிரகாசித்தனர். அவர்கள் எல்லோரும் பிறவிப்*

*பிணியுமகன்று பேரின்ப நிலை எய்தினர் என்பதையும் எடுத்துக்கூறி இன்றைய சொற்பொழிவை பூர்த்தி செய்து கொள்கிறேன்.*

துய்யதோர் மறைக ளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கஇப் புவன மெல்லாம்.



# விரதியர் முதல்வன்

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரி லஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

*சைவ பெருமக்களே,*

*மனிதப் பண்புடையவனே உண்மை மனிதன். உணவைப்பற்றியோ உறக்கத்தைப் பற்றியோ வேறு உலகப் பொருள்களைப் பற்றியோ நினைப்பவன் மனிதனாக மாட்டான். உண்ணல், உறங்கல், இன விருத்தி செய்தல். உலாவுதல் மக்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவான நியதிகள். விலங்கு முதலிய உயிரினங்களிலிருந்து மனிதன் சிறப்படைவது அறவொழுக்கத்தில் நிற்பதால் தான் என்பது தெளிவு. கடவுள் நினைவுதான் மனித அறிவாகின்றது. மற்றைய அறிவெல்லாம் விலங்கறிவுக்கு ஒப்பாகின்றது.*

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

*என்பது குறள்.*

வாலறிவன் நற்றாள் தொழலே கற்றலின் பயன் ஆகும்.
அறிவின் பயனுமதுவே.

கண்ணாவா ரேனுமுனைக் கைதொழா ராயின் அந்த
மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே.

*என்கிறார் தாயுமானவர்.*

*கற்றவர் விளங்கும் கற்பகக்கனியாக ஈசன் விளங்குகின்றான்.*

புனிதன் பொற்கழல் ஈசன் எனுஞ்கனி
இனிது சாலவு மேசற்ற வர்கட்கே.

*ஆகவே, நாம் மனிதர்களாக வேண்டும். மனிதப்பிறவிகளாக வேண்டும். பொன், பொருள், வீடு, மாடு, நிலபுலன், பட்டம் பதவிகளை நினைந்து நினைந்து நெஞ்சு புண்ணாகி மண்ணாகி விடக்கூடாது. நினைப்பவர் மனங்கோயிலாக கொள்ளும் இறைவனை நினைக்க வேண்டும். நினைத்தனைப் பொழுதும் மறவாதிருக்க வேண்டும். "ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேணும்" என வரங்கேட்கிறார் அருணகிரிநாதர். இறைவன் நினைவு நிலைபெற சில நியமங்களைக் கைக்கொள்ள வேண்டும். நாயன்மார் எல்லோரும் ஒவ்வொரு நியமத்தைக் கொண்டொழுகி வீடு பேறடைந்ததை நாம் பெரியபுராண வாயிலாக அறிகின்றோம். இந் நியமத்தையே விரதம் என்கின்றோம். விரதியர் முதல்வன் முருகன் நினைத்ததை கொடுப்பவன். முருகன் "முன்னிய முடித்தலில் முருகு ஒத்தியே" என சங்கப்பாடலில் வழுத்தப்படுகின்றான். அழியாத வீடுந் தருகின்ற அழகன் அவன். அவனை வாழ்த்த வேண்டும். வாழ்த்தும் வாய் தெள்ளமுதுண்டு உவந்த திருவாயாக மாறிவிடும். வாழ்த்தாத வாய் கூழுக்கும் ஏக்கற்றிருக்கும் வெறு வாயாய் விடும். வணங்க வேண்டும். வணங்கினோர் தலை முடியணிந்தோங்கி வாழும் தலையாகவும், காணும் கண்கள் மிக்க ஒளிமேவும் கண்களாகவும், புகழ் கேட்கும் செவி விழாச் சுபம் கேட்கும் திருச்செவியாகவும், திருவடி எண்ணும் நெஞ்சம் மெச்சுகரூபமான நெஞ்சமாகவும், கும்பிடும் கரங்கள் சுவர்ணமிடுகின்ற கைகளாகவும் விளங்கும் என்று அழகுறக் கூறுகின்றார் வடலூர் வள்ளலார்.*

**விரதியர்:**

*விரதங்களை அநுட்டிப்பவர் விரதியர். வாழ்வாங்கு வாழுமியல்பில் தலைநின்ற அறம் இது. பாவமிது என வரையறுத்து முக்கரண சுத்தியாய் இருப்பது விரதம். ஆன்றோர்கள் வடித்துத் தந்த ஆசாரங்களை மேற்கொண்டு தியானமும் துதியும் வழிபாடும் செய்வது விரதியர் விரதமாகும். உடம்பெடுத்த உயிர்கள் இறந்துபடுவது உறுதி. மீண்டும் பிறப்பிற்கேதுவாய் இறப்பவர்கள் என்றும் மீட்டு இங்கு வாரா நெறியில் இறப்பவர்கள் என்றும் இருவகையில் இருக்கின்றார்கள். பின்னவர்கள் இறைவன் திருவருள் பெற்று வாழ்பவர்கள். இறக்கும்போது இறையடி சேருகின்றார்கள். ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்து அவன் அருட்பாதங்களை புகல் அடைந்தவர்கள் விரதியர். இவர்கள் காலனுடைய தரிசனம் பெறாது முருகன் தரிசனத்தை பெறுபவர்கள். பழநித் தலத்தை போகத்தலம் என்பவர் மனிதனுடைய உடம்பில் எழுபத்தினாயிரம், நரம்புகள் அவற்றுள் சிறந்தவை பத்து. அவற்றுள் இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகள் சிறந்தவை. இடைநாடியைத் தணிகை என்றும், பின்கலை நாடியை செந்தில் என்றும், சுழுமுனை நாடியை பழநி என்றும் கூறுவர். இடைபிங்கலையிற் செல்லும் பிராணவாயுவை யோகநெறியினால் மறித்து சுழுமுனை நாடி வழியாகச் செலுத்துபவர் யோகிகள். ஆகவேதான் யோகத்தலம் பழநி என்றழைக்கப்படுகிறது. இத்தலத்தில் யோகம் பயிலும் விரதியர்களைப் பற்றி நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் வர்ணிக்கின்றார்.*

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னெற்பெழுந் தியங்கு மியாக்கையர் நண்பகல்
பலவுடன் கழித்த வுண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதுங்
கற்றோ ரறியாக் வறிவினர் ...

*இவர்கள் மரவுரி உடுத்திருக்கிறார்கள். வலம்புரிச் சங்கு போன்ற வெண்ணிற முடியினராய், நீற்றொளி மினுங்கும் உருவினராய், மான்*

தோலணிந்து ஊன்கெட்டு எலும்பெழுந்த யாக்கையராய் பல நாள் ஊண் ஒழிந்தவராய், இகலும் செற்றமும் நீக்கிய தூய மனத்தினராய் விளங்குகின்றனர் பழநித் தல விரதியர்கள். விரதத்தின் முக்கிய அங்கம் உணவை குறைத்தலாகும். முப்போதுண்பான் ரோகி! இரு போது உண்பான் போகி: ஒரு போதுண்பான் யோகி என்பர்: விரதம் பயில்பவர் உணவாசையைக் குறைத்து உணர்வாசையை பெருக்குவார்கள். ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்குவார்கள். அளவறிந்து உண்பவன் மெய்யுணரும் ஆற்றலைப் பெற்று இன்பத்தை அடைவான். கழிபேரிரையான் நோய் வாய்ப்பட்டு துன்பத்தை அடைவான். உடம்பைப் பல நாள் வைத்திருக்க விரும்புவோர் உணவை அளவறிந்து ஏற்றதாக உண்ண வேண்டும்.

அற்றா லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு

என்பது குறள்.

விரதியர் வயிற்றுப் பசியை பொருட்படுத்துவதில்லை. உடம்புக்குத் தொடர்ந்து வரும் நோய் அது. உணவைப் போட்டுக் கொண்டிருப்பது தான் அதற்கு மருந்து. "உண்டுண்டு உறங்குவதே அல்லாது ஒருபய னடைந்திலேனை என்கிறார் தாயுமானவர். ஆன்மப் பசியை நீக்க வேண்டும். ஆன்மப்பசிக்கு மருந்து இறைவன் ஒருவனே. அவன் பவரோக வைத்தியன். மருந்தும் அவன் தான். அதுதான் பவரோக மருந்து. ஆன்மப்பசி ஏற்பட்டால் வயிற்றுப்பசி தோன்றாது. ஊன்கெட்டு ஏற்பெழுந்தியங்கும் யார்க்கையர் விரதியர். இவர்களின் நோன்பை ஏற்று அருள் புரிபவன் முருகன். அறிவொளியையும், அருள் ஒளியையும் அருளுவான். ஆத்மீக வளர்ச்சியின் பெருமை விரதங்கள். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு விரதங்கள் அநுட்டிக்கப்படுகின்றன. அந்தக்கரணங்கள் விரதத்தாற் பரிசுத்தமாகின்றன. ஞானம் கைகூட விரதம் ஒரு சிறந்த சாதனமாகும். எல்லா நாள்களும் நல்ல நாள்களாயினும் எல்லோரும் எல்லா நாட்களிலும் விரதமனுட்டிக்க இயலாது. அதனால் ஆண்டிற்சில நல்ல நாட்கள் வழிபாடு செய்ய பெரியோர்கள் வகுத்து வைத்திருக்கிறார்கள். இன்று விரதங்கள் பற்றி பேசப்படுகின்றன. ஆனால் என்றும் ஈசன் என்பார்க்கன்றி விரதங்களால் எவ்வகைப் பயனு மேற்படாது.

நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி யிருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசன்என் பார்க்கன்றி யில்லையே.

*என்று தேவாரம் கூறுகின்றது. தெய்வ நினைவு கொண்டு பக்தியுடன் வழிபட்டு வாழ்ந்து நிலையான இன்பத்தை மக்கள் பெற வேண்டும்.*

**வியாழபகவான் சயந்தனுக்குக் கூறுதல்:**

*சூரனை அழித்த பின் கந்தவேள் தேவகுஞ்சரியுடன் கந்தமாதனம் தங்கியபின் ஒரு நாள் அமரர்கோன் மைந்தன் சயந்தன் என்பவன் வியாழபகவானை நோக்கி அமரர்கள் வெஞ்சூரனால் வெய்துயருழந்து மேன்மையுமிழந்து தாழவந்த காரணம் என்னவென்று கேட்டான். வியாழபகவான் இத்தீமை வரக் காரணம் புரமூன்றெரித்த சிவனை நிந்தித்துத் தக்கன் பண்ணிய யாகத்தில் புகுந்த பாவமே என விடை பகர்ந்தனர். சயந்தன், இது கேட்டுத் தக்கன் வாழ்க்கையையும் அவன் செய்த வேள்வியாதி நிகழ்ச்சிகளையும் கூறியருளும்படி வேண்ட வியாழபகவான் கூறுகின்றார்!*

*பிரம்மாவின் மானதபுத்திரர் பதின்மரில் ஒருவன் தக்கன். அவன் பிரமாவையணுகி, 'தலைமைத் தேவர் மூவரிலும் மேலானவர் யார்? என்று கேட்க, பிரமனும் யானும் நாராயணனும் அன்றமர் இயற்றுமெல்லை யழலென வெழுந்து வானிற் சென்றதோர் சிவனே யாருக்கும் மேலவன் தெளிநீ?' என்று தெளிவுறுத்தினன். இது கேட்ட தக்கன் 'முத்தொழிலில் இருதொழில் நீவிர் இயற்ற ஒரு செயல் புரியும் ஈசன் உங்களுக்கெல்லாம் மேலவனாவானா?' என்று பரிகசிப்புடன் கூறினான். பிரம்மன் நகைத்து அழித்தற் தொழிலைச் செய்யும் அப்பரமபதியே ஆக்குதற் தொழிலையும் செய்கின்றான். ஆக்குமவனே அழித்தலையும் செய்வான். எனக்கும் மாலுக்கும் படைக்கவும் காக்கவும் அதிகாரம் அம்முன்னவனே தந்தான். நம் செயலென எதுவுமில்லை, எல்லாம் அவன் செயலே' எனச் செப்பி நின்றான்.*

*தந்தை சொற் கேட்ட தக்கன் வீடுசேர்நெறி எண்ணாது அயன் முதல் தேவரினும் பார்க்க அந்தமில் வளம் பெற்றுய்ய எண்ணி*

முக்கண் எந்தையை நினைந்து நெடும்பகல் தவம் இயற்றினான். மகிழ்ந்து ஈசன் உமா சகிதனாய் விடையேறி வந்து தரிசனமளிக்க தக்கனும் வணங்கி 'மூவுலகாளும் உரிமையும் வன்மையும், உன்னை வணங்குவார் என்னை வந்து வணங்கவும் உன்னையன்றி பிறர்தமை என் நெஞ்சால் வந்தியாத பெற்றியும் தேவரவுணர்கள் யான் செய்யும் செய்கையியற்றவும்,உமாதேவி யான் பெறும் மாதராக வரவும் நீ காதலாகிக் அவளைக் கடிமணம் செய்து மருமகனாகவும் வரம் தருக' என கேட்டு நின்றான். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் வள்ளல் நன்று! நல்கினம், நன்னெறி நின்றியெனில் இச்சீரெல்லாம் நிலைக்கும்' என்று மறைந்தனன். விரதமிருந்து தவமிருந்து வரங்களை எண்ணியவாறு பெறலாம். ஆனால் அவ்வரங்களை நன்னெறிப்படுத்தினாற்றான் நன்மைகளை அனுபவிக்கலாம். புன்னெறிப்படுத்தினால் அழிவு தான் இறுதி என்பதை நாம் வரலாறுகளிலிருந்து தெரிந்து கொள்ளுகின்றோம். கொடுத்தவன் என்றும் மறப்பதில்லை மிக்க அக்கறையோடு கவனித்துக் கொண்டுதான் இருக்கிறான். தவறு நிகழ்ந்தால் கொடுத்தவனே வாங்கி விடுவான் என்பது வரலாற்று நுட்பம். தக்கன் மகிழ்வு கூர்ந்தான். வேதவல்லியை கடிமணம் செய்து இருபத்தேழு பெண் மக்களை பெற்றான். வரங்களின் பெருமையில் முன்னவனாகி நின்றான், தன் பெண்களை சந்திரனுக்கு மணம் முடித்து வைத்தான். சந்திரன் உரோகணியைத் தவிர மற்ற பெண்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. குறைபட்ட பெண்கள் தந்தைபாற் சென்று முறைப்பட்டார்கள். சினந்த தக்கன் சந்திரனை சபித்தான். மூன்றாம் பிறையாக மெலிந்த சந்திரன் பெருமானை சரணடைந்து பாப நீக்கமும், சாப நீக்கமும் பெற்றுய்ந்தான். இறைவன் குறை நினைந்து முறை கேட்பவருக்கு அருளும் தன்மை வாய்ந்தவன். அடங்காரை அடக்கியாள்பவன். கோரங்களை நீக்கியருளுபவன். அப்பர் அடிகள் பாடுகிறார்:

கங்கையைச் சடையில் வைத்தார்
கதிர்ப்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும் வைத்தார்

மங்கையைப்பாகம் வைத்தார்
மான்மறி முவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன்ஐ யாற னாரே.

*திருவையாறு திருப்பதிகத்தில் இதனைக்கூறியருளுகின்றார். கங்கையின் வேகம் அடக்கினார்: அரவினகோரம் நீக்கினார்: திங்களின் சாபம் நீக்கினார்: அன்றியும் திசைதிசை தொழவும் வைத்த கருணாநிதியவர். இஃதுணராத தக்கன் 'என் மருமகனுக்கு யான் அளித்த வாய்மையை எவரும் தடுக்கவில்லை. அச்சத்தால் வந்தும் வேண்டிலர். தந்தை தாயிலாத ஒருவனா என்னுரை தடுப்பான்' என வெகுண்டு கூறுகின்றான்.*

நன்று நன்றியாம் பரம்பொருள் நான்முகன் முதலாம்
துன்று தொல்லுயிர் யாவையு மழித்துமைந் தொழிலு
நின்று நாம்புரி கின்றன மெங்கணு நீங்கா
யென்று தன்மனத் தகந்தையுற் றான்கொலோ வீசன்.

*என்று நினைத்து அமலனை அகந்தையுற்றவன் என மதிக்கின்றான் அகந்தையுற்ற தக்கன். புன்னெறியில் மீள முடியாத நிலையிற் தக்கன் வந்துவிட்டான். உமை கயிலை நின்றும் நீங்கிக்காளிந்தி நதிக்கரையில் வலம்புரிச் சங்கின் கோலந்தாங்கி சிவமந்திரத்தை சிந்தனை செய்து அளவில் காலம் நோற்றனள். உலகம் தன்னிகரின்றி யாளுந்தக்கன் காளிந்தி நதியிற் புனலாடும் போது அழகிய அவ்வலம்புரியை எடுக்க அஃதோர் பெண்ணுருவத்தோடு குழவியாதலும் கண்டு மகிழ்ந்து வேதவல்லியிடம் கொடுத்து தன் அரசிருக்கையை யடைந்தான். உமையும் வளர்த்து பருவமெய்தி கையிலைநாதனைக் கணவனாயடைய கடுந்தவ மேற்கொண்டு நின்றகாலை, நாதனும் வெளிப்பட்டு நிற்கத் தக்கனும் மனமுவந்து அவற்கே உமையை வதுவை செய்து மருகனாக்கி கொண்டான். தானளித்த சந்திரசாபத்தைத் தடுத்தவனையே மருகனாகக் கொண்ட தக்கன் தன்னையே முழுமுதலாக அகங்கரித்து அதனைத் தெளிவுறுத்த யாகத்தலைவனாகத் தன்னை வைத்து ஒரு யாகஞ் செய்தான். முக்கண் நாயகற் களிக்கும் அவியினை விளக்கிச் செய்த யாகத்திற் பங்கெடுத்த அயனாதிதேவரெல்லாம் சிவநிந்தனை செய்த பெருங்குற்றத்திற்குள்ளானார்கள். இந்நிந்தனைப் பாவத்தை அங்கு வந்த ததீசி முனிவர் உணர்ந்ததும் தக்கனை நோக்கி,*

தந்தை யேமுதல் யாவரும் முடிவுறுந் தகவால்
வந்து நின்னவை யிருந்தனர் மாயையால் மருண்டாய்
உய்ந்தி டும்படி நினைத்தியேல் அரற்கவி யுதவி
யிந்த மாமகம் புரிந்திடு வாயென விசைத்தான்.

*முனிவரின் தகவுரையைத் தக்கன் கேட்க மறுத்தான். மெய்யுணர் முனிவர் கருணைவிழி சிந்தப் பின்னும் கருணை வாசகங்களை கூறுகின்றார்.*

முன்புதா ருகவ னத்து முனிவரர் யாரு மீசற்
கன்பில ராகி வேள்வி யளப்பில புரிந்து தாமே
இன்புறு முத்தி தன்னை யெய்துவா னுன்னியங்கம்
துன்புற வாளா நோற்றுத் துணிவினா லொழுக லுற்றார்.

*ஈசனுக் கன்பின்றி நீசராய் வேள்வி செய்த தாருகா வனத்து முனிவர் பட்ட துன்பங்களை வகைபட எடுத்துக்கூறியும் தக்கன் இசையவில்லை. தன் முனைப்பில் தலைநின்றான். வீரபத்திர மூர்த்தம் எழுந்து யாகசங்காரம் செய்து, நந்திசாபமும் பலிக்க ஆட்டுத்தலை எய்தினன் தக்கன். எவர்க்கும் ஆடாத தலையை விரும்பிய தக்கன் ஆடுகின்ற தலையைப் பெற்றான். வீரபத்திராற் கொல்லப்பட்ட தேவர்கள் எல்லோரையும் சீற்றம் நீங்கிய சிவபிரான் எழுப்பியருளினர். எழுந்த தேவர்கள்,*

வேதத் திறங்கடந்த வேள்விப் பலியருந்தம்
பேதைச் சிறியேம் பெரும்பகலும் தீவினையில்
ஏதப் படாமே இமைப்பி லதுதொலைத்த
ஆதிக் கெவன்கொல் அளிக்கின்ற கைம்மாறே.

*என்று கைமாறற்ற பெருங்கருணை வெள்ளத்துள் அமிழ்ந்தி நின்றார்கள்.*

**சிவராத்திரி விரதம்:**

*பிரமன் தக்கனைப் பார்த்து "யாது நினைந்து யாது செய்தனை! யாது உனது எண்ணம்? தேவர்க்கும் முனிவர்க்கும் அந்தணர்க்கும் கூற்றமாகி விட்டாயே என்று மனங்கவன்று கூறுகின்றான்.*

சீரையும் தொலைத்தனை சிறந்த தக்கனாம்
பேரையும் தொலைத்தனை பேதை யாகிநின்

னேரையும் தொலைத்தனை யேவல் போற்றுந
ராரையுந் தொலைத்தனை யலக்க ணெய்தினாய்.

*தேவர் முனிவர் அந்தணர் அனைவரும் விரதியர்கள். அவர்கட்கு இடுக்கண் நேர்ந்தால் அருளை அழித்துவிடும். ஆதலின் அருளுடைய நாயகன் பாதம் அருச்சனை அன்புடன் செய்து இப்பவப் பெற்றி நீக்கி போதமோடிருப்பாயாக என்று கூறத்தக்கனும் 'உங்கட்கெய்திய மையலையும் எம்பிரான் அருட்செயலையும் இயம்புக' எனக் கேட்டபோது பிரமன் கூறுகின்றான் 'நானும் மாலும் யார் பெரியர் என முரணிப் போரிட்டபோது அம் முரணை நீக்கி தெளிவிக்கவும் தாமே பதிப்பொருள் என்பதை ஆன்மாக்கள் அறிந்து உய்யும் பொருட்டும் பரமசிவன் திருவுளமிரங்கி மாசி மாசத்துக் கிருஸ்ணபட்சத்து சதுர்த்தசி திதியும் சோமவாரமும் திருவோண நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் இரவு பதினான்கு நாழிகை அளவில் அக்கினி மலை வடிவாக தோன்றினர். சோதி வடிவத்தின் அடியை அல்லது முடியை கண்டவர் பெரியர் என்ன, நான் அன்னமாகி முடியை காணப் புறப்பட, மால் ஏனமாகி அடியை காண புறப்பட்டார். தேடிப் பலகாலம் சென்றும் முடியாமல் களைத்து மீண்டபோது சிவபெருமான் அச்சோதியின் நடுவே, லிங்க வடிவமாக தோன்றிப் பின் காளகண்டமும் முக்கண்ணும் மான்மழுவரதம் அபயம் பொருந்திய கரங்களும் விளக்க வெளிப்பட்டுத் தோன்றினார். ஒரு முகூர்த்த காலம் தரிசனம் தந்து பரமசிவன் மறைந்தான்'.*

மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்.

*இலிங்கோற்பவரை மாலுமயனுங் கண்ட முறையை கூறுகின்றார் கச்சியப்பர். அப்பரடிகளும் இறைவனைக் கண்ட முறையை ஒரு தேவாரத்தில் அருளி செய்கின்றார்.*

"பாட வடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கை யானைக்

கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கி னிதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே."

*திருமுறையிற் றோய்ந்தவர்கள் இறைவனைக் காணும் இன்பினை துய்ப்பர். எட்ட நின்று பாடுமடியாரைக் காண்கிறார். நடுவில் நின்று உருகும் பக்தர்களை காண்கிறார் அணுக்கராய் நின்று தூதர்கள் ஆடல் முழவம் அதிர்ப்பதையும் காண்கிறார். அருவத்தில் நின்று தேவர்களும் அஞ்சலி செய்கிறார்கள் என ஞானிகள் கூறுகிறார்கள். அது அவர்கள் ஞானக்கண்ணுக்குத் தெரிகிறது. எங்கள் ஊனக் கண்ணுக்கு தெரியவில்லை. பூரணகும்பம் வைத்து தோரணம் நாட்டி மங்கலம் பொலிய விளங்குமிடங்களில் தேவர்கள் சஞ்சரித்து ஆசி கூறுகிறார்கள் என்பர். சந்நிதானத்தில் நின்று வணங்கும்போது எதிர்நின்று வணங்கலாகாது. மூன்று அடிநிலம் நந்திக்குரியது. அந்த மூன்றடி விலகி ஒதுங்கி நின்று வணங்க வேண்டும். ஒதுங்குபவர் பக்தர்கள் ஆகின்றனர். அங்கையில் அனலைக் காண்கின்றார். சடையில் கங்கையையும் அரவையுங் காண்கின்றார். இவ்விதமாக இறைவனழகுகளையெல்லாம் அநுபவித்து காண்கிற நிலையை அப்பரெய்துகின்றார். கண்டு அநுபவியாது அநுபவித்து காண்கின்ற நிலை கைகூடுவதைத் திருமுறைகளிற் காணலாம்.*

*இறைவன் பரிபூரணப் பொருள். பரிபூரணத்தில் முடியில்லை. அடியில்லை. முடி எங்கும் இருகிறது. அடியும் எங்குமிருகிறது.*

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருள் முடிவே.

*என்று அடியையும் முடியையும் பாடுகின்றது வாசகம். அடி எங்கே என்று சொல்ல முடியாது. ஆனால் செருக்கற்ற இடமே திருவடியாதலின் செருக்குடையவர் எங்ஙனம் காணவியலும் 'என்னை நீ எங்கனம் காட்டுவாய்' என கிருஷ்ணபகவான் சகாதேவனை கேட்க, 'நின்னை காட்டுவாயேல் கட்டுவன்' எனச் சகாதேவன் விடையிறுத்தான். பகவான் அங்கிங்கெனாதபடி எங்குமாய் நிறைந்த தன் கோலங் கொண்டபோது சகாதேவன் ஞானமாகிய அடியை நாடியறிந்து அன்பினால் கட்டினான். அன்பினர்க் கெளியன் இறைவன் 'பக்தி*

*வலையிற் படுவோன் காண்க!' என்பது அருண்மொழி வாசகம். மாலும் அயனும் செல்வத்தையும் கல்வியையும் குறித்து நிற்பவர். செல்வத்தாலும் கல்வியாலும் இறைவனை காண முடியாது என்பது கருத்து.*

கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்

*என்கின்றார் மாணிக்கவாசகர்.*

*அகந்தை நீக்கிய பிரம விட்டுணுக்கள் தரிசனம் பெற்ற இரவே சிவராத்திரியாகும். நமக்கு வரும் இரவு சாதாரண இரவு. உலக ஒடுக்க நிலையாகிய இரவு சிவனுக்குரிய இரவாகும். ஒடுங்கிய உலகைத் தோற்றுவிக்க இலிங்கோற்பவராக தோன்றும் இரவும் இரவின் மூன்றாம் சாமம் நடைபெறும் லிங்கோற்பவர் பூசையும் சிருட்டித் தொழில் ஆரம்பிப்பதை குறிக்கின்றன.*

**விரதம் அநுட்டிக்கும் முறை:**

*சிவராத்திரி விரதத்தை 24 வருடங்கள் அல்லது 12 வருடங்கள் தொடர்ந்து அநுட்டித்தல் வேண்டும். மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றுமமைந்த திருத்தலங்களில் அமர்ந்து பக்திச் சிரத்தையுடன் அநுட்டிக்க வேண்டும். இந்நாளில் உபவாசம் இருப்பதோடு விழிப்பும் இன்றிமையாதது. நாம் நாள்தோறும் உண்கின்றோம்; உறங்குகின்றோம். உயிரினங்கள் எல்லாம் இதையே செய்கின்றன. உண்ணாமையும் உறங்காமையும் தான் மனிதனை மேலவனாக்குகின்றன. ஞானம்பெற இவ்விரண்டும் இன்றியமையாதன என்பதை இவ்விரத அனுஷ்டானம் விளக்குகின்றது. சிவபூசையிலேயே இரவு கழிதல் வேண்டும். லிங்கோற்பவ காலத்தில் செய்யும் தரிசனம் பூசை நிறை பயனைத் தரும். இறைவன் திருவுளம் பற்றிய காலமிது. உபவாசம் இருந்தவர் அடுத்தநாள் காலை நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு சூரிய உதயத்தின் பின் ஆறு நாழிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணம் பண்ணுதல் வேண்டும் பகலில் நித்திரை செய்தல் கூடாது. இவ்விரத பலன் பாவநீக்கமும் நாடு செழித்தலுமாம். இவ்வாறாக,*

அரியும் யானும்முன் தேடும்அவ் வனற்கிரி யனல
கிரியெ னும்படி நின்றதா லவ்வொளி கிளர்ந்த

விரவ தேசிவ ராத்திரி யாயின திறைவற்
பரவி யுய்ந்தன ரன்னதோர் வைகலிற் பலரும்.

*என்று அயன் கூற தக்கன் கேட்டு சிவபூசை செய்து புனிதனானான். கந்தப்பெருமானுக்கு உகந்த விரதங்கள் வெள்ளி விரதம், திருக்கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என்னும் மூன்றுமாகும். வேந்தன் முசுகுந்த வள்ளலுக்கு வசிட்ட முனிவர் கந்தவேள் விரதங்களை பற்றிக் கூறுகின்றார். இது மண்ணுலகக்கதை. ஆனால் இவை அனைத்தையும் வியாழபகவானே சயந்தனுக்கு கூறி உய்நெறி காட்டுகின்றார் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.*

**வெள்ளி விரதம்:**

எள்ளருஞ் சிறப்பின் மிக்க வெழுகை வாரந் தன்னுள்
வெள்ளிநாள் விரதந் தானே விண்ணவ ருலகம் காத்த
வள்ளல்தன் விரத மாகும் மற்றது புரிந்த மேலோ
ருள்ளமே னினைந்த வெல்லா மொல்லையின் முடியு மன்றே.

*வேற்படை விமலனுக்குரிய விரதம் வெள்ளிநாள் விரதம் ஆகும். ஐப்பசி முதல்வெள்ளி தொடங்கி வெள்ளிக்கிழமை தோறும் அநுட்டிக்கப்படல் வேண்டும். இந்நாளில் உபவாசமிருத்தல் உத்தமம். காலையில் நீராடி நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு பெருமானை அர்ச்சித்து விசேட தீபம் நைவேத்தியங்களுடன் சிறந்த பூசை புரிதல் வேண்டும். இவ்விரதம் மூன்று வருட காலம் அநுட்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை நிறைவு செய்யும்போது விரதமிருந்து சாந்திக் கிரியைகளுடன் பூர்த்தி செய்தல் வேண்டும். இதனை உத்தியானம் என்பர். ஐப்பசிக்கடைசி வெள்ளி உத்தியானம் செய்து கொள்ள உகந்த நாள். பாருலகையிழந்த பகீரதன் இந்நோன்பை மூன்றாண்டு நியமத்துடன்,*

.... உணவினைத் துறந்து முன்பின்
சென்றிடு மிரண்டு நாளுந் திவாவினி லடிசில் மாந்தி
இன்றுயில் அதனை நீத்து ..... நோற்றபோது செவ்
வேள் அருள்புரியப் பாருலகைப் பெற்றான்.

**கார்த்திகை விரதம்:**

*"ஒரெழு முனிவர் தம்மில் உயர்ந்திடு பதமு மேலாஞ் சீரோடு சிறப்புமெய்த ஏற்றதோர் விரதமொன்று விளம்புதி" என்று கேட்டார் நாரத முனிவர்.*

முன்னவ னதனைக் கேளா முழுதருள் புரிந்து நோக்கி
யன்னது பெறுதி திண்ணம் ஆறுமா முகத்து நம்பி
பொன்னடிவழிபாடாற்றிப் பொருவில்கார்த்திகைநாள் நோன்பைப்
பன்னிரு வருடங் காறும் பரிவுடன் புரிதி என்றான்.

*அவ்வாறே நாரதன் பரணிநாள் பாரணத்தில் ஒரு பொழுது உணவு கொண்டு கார்த்திகைத்திதியில் வேற்கைப் பெருமான் விரதத்தை*

தூசொடு கயத்தின் மூழ்கித் துய்யவெண் கலைகள் சுற்றி
ஆசறு நியம முற்றி யான்றமை புலத்த னாகித்
தேசிகன் தனது பாதம் சென்னிமேற் கொண்டு செவ்வேள்
பூசனை புரிந்திட் டன்னான் புராணமும் வினவி னானால்

கடிப்புனல் அள்ளித் தன்னோர் கைகவித் துண்டு முக்காற்
படுத்திடு தருப்பை யென்னும் பாயலிற் சயனஞ் செய்து
மடக்கொடி மாதர் தம்மை மறலியா மதித்து வள்ள
லடித்துணை யுன்னிக் கங்குல அவதியு முறங்கா துற்றான்.

*மறுநாள் ரோகிணி திதியில் சந்தியாநியமமெல்லாம் முற்றிக் கந்தவேள் வழிபாடாற்றி மாதவரோடு பாரணஞ் செய்து பகற்பொழுதுறங்காது வெய்யவன் குட பால் வீழும் பொழுதளவிலிருந்து இவ்வாறாக 12 வருடம் இந்நோன்பை நோற்று எழுவகை முனிவோருக்கும் ஏற்றமாம் பதத்தைப் பெற்றான் என புராணங் கூறுகின்றது. கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் தொடங்கி மாதம் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் இவ்விரதமநுட்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை ஒரு மறையோன் நோற்று மநுவாகி முழுவுலகாண்டான். வேறோர் அந்தணன் திரிசங்குவானான். ஒரு மன்னனும் வேடனும் நோற்று அந்திமான் சந்திமான் என்னும் பெயர்களைத் தாங்கி உலகை ஆட்சி செய்து பேறுபெற்றனர்.*

**கந்தசஷ்டி விரதம்:**

*"சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்" என்பார்கள். சிவபெருமானின் மைந்தன் முருகன் சஷ்டி திதியில் மாமரமாக நின்ற சூரனைச் சங்கரித்தார் என்பது இதன் பொருள். ஐப்பசி மாதத்திலே அமாவாசைக்குப் பின்வரும் பிரதமை முதல் ஆறு நாட்கள் அறுமுகத்தமலனை குறித்து அனுட்டிக்கும் விரதம் இதுவாகும். பிரதமையிற் சங்கரன் நெற்றியிலிருந்த தெறித்த அனற்பொறி ஆறும் சரவணத்தில் ஆறு வடிவ மெய்தி கார்த்திகை முதல் ஆறு பெண்களும் பாலூட்ட வளர்ந்து அம்மை அணைக்க ஆறுமுகமும் பன்னிரு கையுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாள் கந்தசஷ்டி நாளாகும். சூரனைச் சங்கரித்த நாளும் இதுவேயாம். ஆறு நாளும் அமரரும் முனிவர் யாரும் இந்நோன்பை அனுட்டித்தனர்.*

....................மூவிரு நாளுங் காலை
அந்தமில் புனலின் மூழ்கி யாடையோ ரிரண்டு தாங்கிச்
சந்தியிற் கடன்கள் செய்து தம்பவிம் பங்கும் பத்திற்
கந்தனை முறையே பூசை பரிந்தனர் கங்குற் போதில்.

நிறைதரு கட்டி கூட்டி நெய்யினாற் சமைக்கப் பட்ட
குறைதவிர் மோத கத்தைக் குமரநா யகற்க ருத்திப்
பிறவுள விதியுஞ் செய்து பிரான்திருப் புகழ்வி னாவி
உறுபுனல் சிறிது மாந்தி உபவசித் திருந்தார் மாதோ.

*ஆறுபடை வீடுடைய ஆறுமுகவமலனுக்கு ஆறு நாள் நோன்பு கந்தசஷ்டி நோன்பு. இந்த ஆறு நாளும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாற்சரியம் என்னும் ஆறு பகைகளையும் வேரறுப்பதை குறிப்பதாகும்.*

ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்
சீரணி முருக வேட்குச் சிறப்பொடு பூசை யாற்றிப்
பாரணம் விதியிற் செய்தார் பயிற்றுமிவ் விரதந் தன்னால்
தாரணி யவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.

*செவ்வேற் பெருமானுக்குக் கார்த்திகை நட்சத்திரமும் சட்டித் திதியும் வெள்ளி வாரமும் சிறந்தன. எனினும் செவ்வாய்க்கு அதிபதி செவ்வேள், ஆகையால் செவ்வாய் விரதம் சிறந்ததாகும்.*

**பாட்டே அர்ச்சனை:**

*வேறு எந்த உயிர்களுக்கும் அமையாத சிறப்பு மனிதனுடைய நாவுக்கு அமைந்துள்ளது. நன்கு பேசுந் தகமையுடன் கூடிய நாவை இறைவன் நமக்குத் தந்துள்ளான். அந்தநாவால் இறைவன் புகழை பாட வேண்டும். "நாமேல் நடவீர் நடவீர் இனியே" எனவும், "பாடும் பணியே பணியா வருள்வாய்" எனவும் அனுபூதியில் அருணகிரிநாதர் இயம்புகின்றார். நாவிற்கு முதலிடம் தந்து மாணிக்கவாசகர் கூறும் நாவே முதலாக கூறும் காரணம் "எல்லாம் நீ" என்கின்றார். நாக்கை கொண்டான் நாமம் நவிலுதல் வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பாடும்படி பாம்பாபரணர் பணிக்கின்றார். "பாட்டே அர்ச்சனை" என்கின்றான் அப்பன். விரதநாட்களில் திருமுறைகளை ஓத வேண்டும். காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பவன் பரமன். புராணபடனம் கேட்கவேண்டும் புண்ணிய நூல் கேட்பதால் தீங்குகள் விலகுகின்றன. மாதவரோடு பாரணம் பண்ணுவது பரமனுக்குச் செய்யும் பூசையாகும்.*

நடமாடுங் கோயில் நம்பர்கொன் றீயில்
படமாடுங் கோயில் பரமற்கங் காமே.

*என்கிறார் திருமூலர். பாடுதல், புராண படனம் கேட்டல், மாதவரோடு பாரணம் பண்ணுதல் விரத நாள்களில் முக்கியமானவை.*

**முசுகுந்தன் பெற்ற பேறு:**

*இத்தகைய சிறந்த விரதமகிமைகளை முசுகுந்த மன்னனும் செவிமடுத்து உரிய முறைப்படி அனுட்டித்தான்*

..............................................
நன்றிவை புரிவன் என்னா நனிபெரு வேட்கை எய்தி
அன்றுதொட் டெண்ணில் கால மவ்விர தங்க ளாற்றிக்
குன்றெறி நுதிவே லையன் குறைகழ லுன்னி நோற்றான்.

*என்கிறது கந்தபுராணம். இவற்றை ஏற்றருளிய முருகப்பெருமானும் மஞ்ஞைமேல் ஆரோகணித்து முசுகுந்தன் கேட்ட வரங்களை நல்கி மறைந்தனன். மன்னனும் கருவூரிலிருந்து நல்லாட்சி செய்து பின்பு கருவிலே வராத நிலையிற் கயிலை சென்று இறைவன் கமலபாதங்களை*

*கருத்தில் வைத்து மாநில மையல் நீங்கப் பழைய தேவபதம் பெற்றான். ஆகவே எவராயினும் பக்தி சிரத்தையோடு இவ்விரதங்களை அநுட்டிப்பாராயின் எல்லா நலமும் பெற்றுய்வர் என்பது உறுதி.*

ஆகையால் அயனறியா அருமறைமூ லந்தெரிந்த
ஏகநா யகன்விரதம் எவரேனும் போற்றியிடில்
ஓகையால் நினைந்தவெலாம் ஒல்லைதனிற் பெற்றிடுவர்
மாமமே லிமையவரும் வந்தவரை வணங்குவரே.

*முசுகுந்தன் கைலாசத்தில் சோமாஸ் சுந்தரைத் துதிக்கின்றான்: அவ்வாறு நாமும் துதித்து அமைவோமாக.*

ஏகனே போற்றி யார்க்கும் ஈசனே போற்றி அம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி

எவ்வெவர் தம்மை யேனும்
யாவரே எனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே
அவர்க்கருள் தருவாய் போற்றி
மெய்வரு தெளிவில் உன்னை
வெளிப்பட உணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி
சிறப்பொடு தருவாய் போற்றி.

# வள்ளிகாந்தன்

அம்புய மலர்மேல் அண்ணல் அச்சுத னாதி வானோர்
தம்பதம் எமக்கு நல்குந் தற்பரா என்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம் நவின்றிட அடைந்தோர்க் கெல்லாம்
உம்பர்தம் பதமும் ஈயும் உலகுடை முதல்வா போற்றி

*கந்தப்பெருமானடியவர்களே.*

*இன்று வேட்டைத் திருவிழா நடைபெற்று முடிந்திருகிறது. இந்த நன்னாளிற் கந்தபுராணம் பூர்த்தியாக வள்ளிகாந்தன் என்ற பொருளிற் பேசவும் நல்லருள் கூட்டிவைத்துள்ளது. இந்த நன்னாளுக்கு ஏற்றவொரு உரை அமைந்தமை திருவருட்செயலேயாகும். திருவருட்சக்தி எமதுள்ளத்தில் நின்று வேட்டையாடி வேண்டாதவற்றை யகற்றி வெற்றிதந்துள்ளது. முருகப்பெருமான் வள்ளியம்மை திருமணம் புரிந்த வரலாறு சைவசித்தாந்த அடிப்படைத் தத்துவத்தை விளக்குவதாகும். சைவத்தின் முடிவுநிலை எதுவோ அதுவே கந்தபுராணத்தின் முடிவாகவும் அமைந்துள்ளது. எனவே கதையையும் கருத்தையும் ஒருசேர நோக்குவது பயன்தருவதாகும். புராணக்கதைகளை கேட்டு அப்படியே நம்பிய காலம் மலையேறிவிட்டது. உண்மைகள் எவை என்பதையும் தத்துவஅமைப்பு யாதென்பதையும் புராணவாயிலாக நோக்குதலே கற்றறிந்தார் கடனாகும். வள்ளி திருமணத்தின் தத்துவத்தை சிவஞானசித்தியார் தெளிவாக காட்டுகிறது.*

மன்னவன்தன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்த்தவனை யறியாது மயங்கி நிற்ப
பின்னுமவனும் என்மகன்நீ என்றவரில் நீக்கிப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோல்
துன்னியஐம் புலவேடர் வலையிற் சிக்கித்
துணைவனையு மறியாது துயருறுத்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மரலடிக்கீழ் வைப்பன்.

*மன்னவனுடைய மகன் வேடர் கூட்டத்தில் அகப்பட்டு மயங்கி தான் யாரென்று அறியாது வாழுகின்றான். ஒருநாள் மன்னவனே வேடர் சேரிக்கு வந்த தன் மகனை அடையாளங் கண்டு தன் மகனாக்கி அழைத்துச் செல்கின்றான். இதே போல ஆன்மாக்கள் ஐம்புல வேடர்கள் வலையில் அகப்பட்டு ஆண்டவன் நிலையை மறந்து வாழ்கின்றன. ஆன்மாவையே மன்னவ குமாரனாகக் காட்டி ஐம்பொறிகளை வேடராக காட்டி ஆன்மாவுக்குரிய பேரானந்த பெருஞ்செல்வத்தை ஆற்றலைத்து நிற்றல் விளக்கப்படுகிறது. பின்பு இறைவனே குருவாக வந்து உணர்த்தியருள ஆன்மாவும் தெளிவு பெற்று அவன் திருவடியை பற்றுகிறது. சீவன் சிவனை யணைந்து நிற்றல் இதனால் அறியக் கிடகிறது.*

**நம்பிராசன் தவம்:**

*தொண்டை நாட்டிலே அமைந்த ஊர்களில் மிகச்சிறப்புப் பெற்றது மேற்பாடியென்பது. அங்கு சிறந்த வளமுடையதாக காட்சியளித்தது வள்ளிமலை. அங்கு வாழ்ந்த வேடர்களுக்கு எல்லாம் தலைவனாக விளங்கியவன் நம்பிராசன். இவன் முற்பிறப்பிலேயே பெருந்தவம் செய்தவன். பல ஆண் குழந்தைகளை பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தானெனினும் பெண் மகவு இல்லாத குறை அவனை வாட்டியது. குறிஞ்சிக் குமரனை வழிபட்டு ஒரு பெண் மகவுக்காக பிரார்த்தனை புரிந்தான். ஒரு நாள் வள்ளிமலைச் சாரலில் வேட்டையாடும் பொருட்டு வந்தபோது வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் பெண்மகவு ஒன்றைக் கண்டான். மகிழ்ச்சியோடு அணைத்து எடுத்துக்கொண்டு போய் மனைவியின் கையில் கொடுத்து நின்றான். நம்பிராசனும் மனைவியும் அன்போடு வள்ளியென்னும் நாமஞ் சூட்டி அழகொழுக வளர்த்து நின்றனர்.*

மூவா முகுந்தன் முதல்நாட் பெறும் அமுதைத்
தேவாதி தேவன் திருமைந்தன் தேவிதனை
மாவாழ் சுரத்தில்தம் மாமகளாப் போற்றுகையால்
ஆவா குறவர்தம் ஆர்அளக்க வல்லாரே.

*பெருமை வாய்ந்த பிராட்டியாராகிய வள்ளிநாச்சியாரைக் குழந்தையாக வளர்க்க குறவர்கள் தவஞ்செய்து விட்டார்களே! அவர்கள் தவத்தை என்னென்றியம்புவது என்று கூறுகிறார் நூலாசிரியர்.*

**தினைப்புனங்காவல்:**

*குறவர் வழக்கப்படி பெண் குழந்தைகளை குறிப்பிட்ட ஒரு பருவத்தில் தினைப்புனத்துக்கு காவல் வைப்பது வழக்கம். இந்த மரபுப்படி வள்ளிப்பிராட்டியார் தினைப்புல காவலுக்கு அமர்த்தப்படுகிறார் அங்கு பரணிலேயிருந்து பூவைகளையும் புறாக்களையும், மயில்களையும், கிளிகளையும், குயில்களையும் ஆலோலம் பாடித்துரத்துகின்றார் அம்மையார். ஆனால் அவை மீண்டும் மீண்டும் வந்து சேருகின்றனவாம். ஏனென்றால் வள்ளியின் இனிமையான குரல் தம்மினத்தின் குரல் போலமைந்தமையால் அவை அச்சமின்றி தினைப்புனத்தை விட்டகலாது நிற்கின்றன எனக் கூறி வள்ளியின் குரலினிமையை வியக்கின்றார் புலவர். தினைப்புனக் காவலில் ஈட்டும் வெற்றியை தத்துவ ரூபமாக மிக அழகாக காட்டுகிறார் தாயுமானவர்.*

காராரும் ஆணவக் காட்டை களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேல்
பாராதி அறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சி அது பயிராகும் மட்டும்மா மாயைவன்
பறவைஅணு காதவண்ணம்

நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டம் எய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரும் அறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே

*பயிர்த்தொழிலுக்கு காவல் மிக இன்றியமையாதது. பாதுகாவல் இல்லையேல் பயிரையும், கதிரையும் விலங்குகளும் பறவைகளும் அழித்துவிடும். சிவமென்னும் பயிரும், வளர்ந்து சிவபோகம்*

என்னும் கதிரைத் தரும் வரையும் மாயையின் காரியமாகிய மயக்கம் என்கிறபறவைகள் அழித்துவிடும். ஆகவே அவற்றைத் துரத்தலே தினைப்புனக் காவலின் மூலம் காணக்கிடப்பதாகும்.

**வேடனாக வருதல்:**

நாரத முனிவர் நன்மையின் பொருட்டு கலகம் உண்டாக்குபவர். அத்தகைய ஒரு வாய்ப்பான சூழ் நிலையை உருவாக்கும் முகமாக முருகவேளை அடைந்து போற்றி வள்ளியின் தினைப்புனக் காவல் நிலையை எடுத்துக்காட்டி அங்கு எழுந்தருளும் படி வேண்டுகிறார். மானுடப் பிறவியில் எவரெவரை ஆட்கொள்ள வரும்போதும் எம்பெருமான் மானுடவடிவந்தாங்கியே வருவார் என்பது விதி .

பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி.

என்பது திருவருட்பயன். இங்கே வேடுவப் பெண்ணை ஆட்கொள்ள வேடுவ வடிவத்திலேயே வருகிறார்.

காலிற் கட்டிய கழலன் கச்சினன்
மாலைத் தொளினன் வரிவில் வாளியன்
நீலக் குஞ்சியன் நெடியன் வேடுவக்
கோலத் தைக்கொடு குமரன் தோன்றினான்.

வள்ளியம்மையை நோக்கி நயமாகப் பேசும் திறன் உவகையை விளைவிப்பது. “வாளாயுதம் போன்ற கூர்மையும் ஊடுருவலும் மிக்க கண்களையுடையவளே” என்று விழிகிறார். அது மாத்திரமன்று “கேட்பாயாக” என்றும் கட்டளையிடுகிறார். பின்பு அம்மையின் பொருட்டுப் பரிவு கொள்பவர் போல் நடிக்கிறார். உலகிலுள்ள பெண்மணிகளுக்கெல்லாம் தலைவியாக இருக்கும் தகைமை வள்ளிக்கு உண்டு என்று கூறி உண்மையை எமக்குக்காட்டுகிறார். இத்தகைய பெருமைவாய்ந்தவளை பூந்தினைக் காக்க வைத்த வேடர்கள் சிந்தனையற்றவர்களே என்று முடிவு கட்டுகிறார். என்றாலும் சிந்தனையாற்றலை வேடர்களுக்கு கொடுக்காதது பிரமனுடைய தவறேயென்றும் நயம்படப் பேசுந்திறன் வியத்தற்குரியது.

நாந்தகம் அனைய உண்கண் நங்கைகேண் ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினார் புளின ரானோர்க்
காய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும் அயன்படைத்திலன் கொல்என்றான்.

*இங்கே “இறைவி” என்ற பதம் சிந்தனைக்குரியது. ஆன்மாக்களை ஆட்கொள்ள வரும்போது இறைவன் பித்தன் ஆகின்றான். அதற்கியைய வள்ளியை நோக்கி மற்றொரு இடத்தில் “மதிதளர்வேனுக்கு” என்று குறிப்பிட்டு நிற்கின்றான் முருகன் முதலில் பெயரை கேட்டான். பின்பு ஊரை கேட்டான் பதில் கிடைக்கவில்லை. “பேரும் ஊரும் சொல்ல முடியாது என்றால் ஊருக்கு செல்லும் வழியினை கூறுக” எனப் பரிந்து கேட்கும் திறன் ஆண்டவன் ஆன்மாக்களின் மேற்கொண்ட கருணையை தெளிவுபடுத்துகின்றது. இவை எல்லாம் ஒரு வள்ளியை நோக்கி பேசியவை மாத்திரமன்று. எம்மையெல்லாம் நோக்கி எம்பெருமான் இப்படியே பேசிக் கொண்டிருக்கிறான். அவனோடு பேச நாம் தயங்குகிறோம். அவனுக்கு முதுகு காட்டிக்கொண்டு உலகத்தோடு பேசிப் பேசிக் காலத்தை அவமாக்குகின்றோம். பேசும்படி கேட்ட முருகப்பெருமான் தன்னை ஒரு முறை பார்க்கும் படியும் வேண்டுகின்றான். அப்படி பார்க்காவிட்டால் பழி வந்து சூழும் என்பதும் காட்டப்படுகிறது. திருக்கோயில்களுக்கு சென்றாற் காணவேண்டிய அருங்காட்சிகளை கண்டு பேச வேண்டிய திருமுறைகளைப் பேசி அவனோடு உறவு கொள்ள வேண்டும். வள்ளியோடு குமரப்பெருமான் உரையாடுவது அனைத்தும் ஆன்மாக்களை உய்விக்கும் திருவிளையாடல்களேயாகும்.*

உலைப்படு மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல வருந்தியே இரங்கா றின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் தோன்றி
அலைப்படு தன்மைத்தன்றோ அறுமுகன் ஆடல் எல்லாம்.

*சலனமில்லாத சந்திரன் கலங்குகின்ற நீரில் சலனமுறுவது போல் தோன்றுகின்றதே! அதேபோலவே எந்தை முருகவேளும் ஆசை வலையில் அகப்பட்டவர் போல நடிக்கின்றார்.*

**நம்பிராசன் வருகை:**

*வேடுவ பரிசனங்கள் சூழ தினைப்புனத்தை நோக்கி வருகின்றான் நம்பிராசன். இதனை அறிந்த பெருமான் வள்ளியைக் காப்பாற்றும் பொருட்டு வேங்கை மரமாக மாறுகின்றார். வேதம் அடிமரமாகவும், சிவாகமங்கள் நடுமரமாகவும், அறுபத்து நான்கு கலைகள் கிளைகளாகவும் கொண்டு இம்மரம் விளங்கியது. முன்னொருபோதும் காணப்படாத மரத்தின் வரலாற்றை வினவிய போது வள்ளி எதுவும் தெரியாதவள் போல் காட்சியளித்தாள். நம்பிராசனும் நல்ல நிழலாக அமையட்டுமே யென்று எண்ணி ஆராய்ச்சியை நிறுத்திவிட்டான். அதுவும் திருவருட் குறிப்பே.*

*திருநாவுக்கரசு நாயனாருடைய திருமுறையிலே மிக அழகாக திருவடி நிழல் பற்றிக் காண்கிறோம். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்பத்தையும் பேரின்பமாக்கி அத்திருவடி நிழல் அப்பருக்குக் குளிர்ந்து காட்டியது. இங்கே நம்பிராசனுடைய கூற்றும் ஒரு ஞானக்கூற்றாகவே வெளிவந்தமை அவன் தவமுடையோன் என்பதை காட்டுகிறது.*

**வேடமும் மெய்ம்மையும்:**

*கோலத்தை மாற்றி வாலிபனாய் உருவிற் காட்சியளித்த குமரனைக் கண்டு வள்ளி அஞ்சி ஒதுங்கினாள். ஆனால் சட்டென்று நம்பிராசன் வருகையை அறிந்து வயோதிப வடிவந்தாங்கி நின்றான் பரமன். நம்பிராசனும் பெரியவரை வணங்கி விபூதி பெற்று, வந்த காரணமெது வென்று வினவ யாத்திரை செய்து புனித நீரில் ஆடுவதற்கு வந்ததாக விடையிறுத்தார் கிழவர். நம்பிய நம்பியும் நன்கு நன்றென வியந்து தன் மகளுக்குத் துணையாக இருக்கும்படி கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றான். தனது திருவருளினால் ஆன்மாக்களை மூழ்க வைக்கும் பெருமான் இத்தனை அருள் விளையாட்டுகளையும் காட்டி நிற்கின்றான். பின்பு வயோதிபர் பசித்தவர் போல் காட்சியளித்தார். அடுத்து தாகமாக இருக்கின்றதென்று கூறிய ஆன்மாக்கள் கொள்ள வேண்டிய தாகத்தை தன்மேலேற்றிக் கூறினார்.*

*இச்சந்தர்ப்பத்தில் மாணிக்கவாசகப் பெருமானுடைய திருவாசகக் கூற்றை நாம் நினைவுகூருதல் பொருத்தமானது.*

வழங்குகின் றாய்க்குன் னருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்வினை யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்வாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

*இது ஆன்மதாகத்தைக் காட்டும் அரிய வாசகமாகும். எம்மிற் பலருக்கு உலக தாகம் ஏற்படுவது போல் ஆன்ம தாகம் ஏற்படுவதில்லை. அதனாற்றான் உலகிலே அல்லற்பாடு மிகுந்து காணப்படுகிறது. முருகப் பெருமான் இவை அனைத்தையும் வள்ளி பிராட்டியாருக்கு உணர்த்துவது போல் ஆன்மகோடிகளனைத்திற்கும் உணர்த்தி நிற்கும் திறம் கந்தபுராணத்தில் பேசப்படுகிறது. முதியவரின் நிலை அறியாத வள்ளி சிறிது கடிந்துரைத்தும், அவர் மேலும் ஏதோ குறையுடையவர் போல தயங்கிநிற்கின்றார். அந்த இடத்தை விட்டகலுவதே செய்யத்தக்கதென வள்ளியம்மையார் எண்ணி நின்ற சமயத்தில் தான் அச்சுறுத்தி ஆட்கொள்ள நினைக்கின்றான் அமலன். தந்திமுகத்தோனை தம்பி நினைக்க அவனும் ஓங்கார ஒலியுடன் தினைப்புனத்தை அடைந்தான். அஞ்சி ஓடினாள் வள்ளி! அபய குரல் எழுப்பினாள்.*

இவ்வேழங் காத்தருள்க எந்தாய்நீ சொற்றபடி
செய்வேனென் றொருபால் சேர்ந்து தழீஇக் கொண்டனளே

*என்ற நிலையை அங்கே காணுகின்றோம். ஞானம் உதயமாகியவுடன் நானும் எனதும் அகன்று விடும். அப்பொழுதுதான் உண்மை தோன்றும். இங்கே முருகக்காட்சி தோன்றுகிறது.*

முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டுங்
கொன்னார்வை வேலும் குலிசமுமே னைப்படையும்
பொன்னார் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னாள் கண்காண வெளிநின் றனன்விறலோன்.

**ஆன்மா அறிவின் வியாபகம்:**

*உணர்த்தினான் இறைவன். உணர்ந்தது ஆன்மா. இதனையே அப்பர் சுவாமிகளும் "அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என பாடுகிறார். திருமூலர் காட்டும் சத்திநிபாத நிலையும் வள்ளி திருமணத்தைத் தத்துவத்தோடு அறிய வைக்கிறது.*

இருட்டு வீட்டினி லிருந்த கிழவி
குருட்டுக் கிழவனைக் கூடக் கருதிக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே.

*கிழவி என்பது திருவருட்சக்தி. குருட்டு கிழவனே ஆன்மா. திருவருட்சக்தி ஆன்மாவிற் பதியும் நிலையே பேரானந்தத்தைக் கொடுக்கும் பெருநிலையாகும். வள்ளி திருமணத்தின் மூலம் இத்தகைய சைவ சித்தாந்த நுட்பங்களை நாமறிய முடிகிறது. தினைப்புனத்தில் வள்ளியை ஆட்கொண்ட பெருமாள் முறைப்படி திருமணம் செய்வதாக கூறி மறைந்தருளினார்.*

**வள்ளி திருமணம்:**

*பின்பு நம்பிராசனும் வேடுவ சுற்றமும் அறிய இத்திருமணம் நிறைவேற்றப்பட்டது. திருமணம் நிகழும் அந்த வேளையில், ஆறுமுகப்பெருமான் தன் பக்கத்திலேயிருந்த வள்ளியை நோக்கினார். நோக்கவே மானுட வடிவம் நீங்கித் தெய்வ வடிவம் பெற்றார் அம்மையார்.*

அந்தநல் வேளை தன்னில் அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னிற் கன்னிகை கரத்தை நல்கி
நந்தவ மாகி வந்த நங்கையை நயப்பால் இன்று
தந்தனன் கொள்க வென்று தண்புனல் தாரை உய்த்தான்

*இத்திருமணத்தை நிகழ்த்திவைத்தவர் நாரதமுனிவர். தேவர்கள் மூவர்கள் புடைசூழச் சிவபரம்பொருள் உமையோடு விண்மிசை நின்று மண்ணுலகத் திருமணத்தை கண்டருளிக் கருணைபாலித்தார்.*

*இக்காட்சி மண்ணுலகை வாழ்வித்த மாபெருங் காட்சியாகும் என்பதை நினைவிலிருத்தி எந்தை கந்தவேளின் திருவடிகளைப் போற்றிக் கந்தபுராணத் தொடர் சொற்பொழிவுகளை இந்நன்னாளிற் பூர்த்தி செய்து கொள்வோம்.*

*அத்துடன் உரையாற்ற வாய்ப்பளித்த ஆதீனாத்தாருக்கும் உரையினை கேட்டு ஊக்கமளித்த பெருமக்களுக்கும் செவ்வேற் பெருமான் திருவருள் கிட்டும் என்று போற்றி அமைகின்றேன்.*

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி

*வேலும் மயிலுந் துணை*

“புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி” என்ற பாட்டில் சுப்பிரமணிய சுவாமியின் பெருமை துதிக்கப்படுகின்றது. இப்பாட்டு கந்தபுராணத்தின் பெருமை பேசியதென்றுங் கொள்ளத்தக்கது. கந்தபுராணம் படிப்பவர்களையும் கேட்பவர்களையும் புன்னெறி யதனிற் செல்லும் போக்கினின்றும் விலக்குவது. அம்மட்டில் அமையாமல் மேலாம் நன்னெறி ஒழுகச் செய்வது. ஆகவே, விலக்கும் விதியுமாகிய அறம் கைவரச் செய்வது. அறத்துக்குப் பயன் மனத்துக்கண் மாசிலனாதல். மனந் தூயவர்களுக்கு அதன் மேல் அது நவையறு காட்சி நல்கும். நவையறு காட்சி தான் “எப்பொருள் எத்தன்மைத் தாயினும் -எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு”. அந்த அறிவுதான் ஒருவனுக்கு அறத்தின் விளைவான பொருளைச் சித்திக்கச் செய்கின்றது. மெய்ப்பொருள் சித்தித்தவன் இருவினையினீங்கி அவனருளாலே அவன் தாள் வணங்குகின்றான். அதுவே இன்பம். அதன் மேல் உயிர் தாடலைப்படுகின்றது. பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்களைத் தலைக்கூடுகின்றது. அதுதான் வீடுபேறு. இவ்வாற்றால் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் பயப்பது கந்தபுராணம். இந்திரராகிப் பார்மே லின்பமுற்று இனிதுமேவி - சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வதற்கு உறுதுணையானது கந்தபுராணம்.

- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

ISBN 624947661-X
9786249476615

Print@Mickey-Chava
021-2-27-17-07